# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 52 தை 04ஆம் நாள் வெள்ளிக்கிழமை 18 ஜனவரி 2019 வள்ளுவர் ஆண்டு 2049

பக்கங்கள்: 28
விலை: 30

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

## திறைசேரிக்கு ரூ.9,000 கோடி!

கொழும்பு, ஜன. 18
அரசின் நிதித் தேவைக்காக அரச திறைசேரிக்கு இலங்கை மத்திய வங்கியிடமிருந்து 9 ஆயிரம் கோடி ரூபா பெறப்பட்டுள்ளது என்று » 06

## ஐ.நா.மனித உரிமைகள் சபைக்கு வழங்கியிருக்கும் வாக்குறுதிகளை இலங்கை நிறைவேற்ற வேண்டும்!

### பிரிட்டன் வலியுறுத்தல்



லண்டன், ஜன. 18
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு வழங்கியுள்ள வாக்குறுதிகளை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும் என்று பிரிட்டன் தரப்பில் இருந்து அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.
இலங்கை நாடாளுமன்றத்தின் சபாநாயகர் கரு ஜெயசூரிய பிரிட்டனுக்குத் தற்போது பயணம் மேற்கொண்டுள்ளார். பிரிட்டனின் அயலுறவுப் பணியகத்தின், ஆசிய - பசுபிக் விவகாரங்களுக்கான இணை அமைச்சர் மார்க் பீல்ட்டை » 06

## சவேந்திர சில்வா நியமனத்துக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவிப்பு

### பாதுகாப்பு ஒத்துழைப்பைப் பாதிக்கும் என்றும் சாட்டல்



வோஷிங்டன், ஜன. 18
இலங்கையில் படைகளின் பிரதானியாக சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமையானது இலங்கை - அமெரிக்கா இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பைப் பாதிக்கும் என்று அமெரிக்க நாடாளுமன்றத்தின் அயலுறவுக் குழுத் தலைவர் எலியட் ஏஞ்சல் தெரிவித்தார்.
"போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்களில் முக்கிய பங்கு வகித்தார் என்று ஐ.நாவினால் குற்றம் சாட்டப்பட்ட மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, இலங்கையின் படைகளின் » 06

# பொறுப்புக்கூறல் கடப்பாடு இலங்கையில் வலுவிழப்பு!

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் அதிருப்தி

கொழும்பு, ஜனவரி 18
இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பிலான உண்மைகளை வெளிப்படுத்தல் மற்றும் நீதி வழங்கல் பொறிமுறை என்பன குறித்த கடப்பாட்டினை அங்கு ஏற்பட்ட அரசியல் நெருக்கடி நிலைமையானது வலுவிழக்கச் செய்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளது மனித உரிமைகள் கண்காணிப்பகம்.
மனித உரிமைகள் கண்காணிப்பகத்தால் இந்த வருடத்துக்கான உலகளாவிய அறிக்கை நேற்றையதினம் வெளியிட்டு வைக்கப்பட்டது. அந்த அறிக்கையிலேயே மேற்படி விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. » 06

## மகாநாயக்க தேரர்களின் அறிவுரையைக் கேளுங்கள்

### புதிய அரசமைப்பு தேவையில்லை என ரணில் அரசிடம் தினேஷ் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 18
"நாட்டின் தற்போதைய சூழலில் புதிய அரசமைப்பு தேவையில்லை என்று மகாநாயக்க தேரர்கள் அறிவித்துள்ளார்கள். » 06

## ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்பு என்ற சந்தேகத்தில் பிரதிமுதல்வர் அஸ்மி கைது

» 06

## ராஜபக்ச குடும்பத்திலிருந்து அரசதலைவர் வேட்பாளர்

### சமலைத் தொடர்ந்து நாமலும் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 18
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசதலைவர் வேட்பாளர் ராஜபக்சவின் குடும்பத்திலிருந்தே தெரிவு செய்யப்படுவார் » 06

## தனது அரசில் மேற்கொள்ளப்பட்ட ஊழலை விசாரிக்க ஆணைக்குழு

### அரச தலைவர் மைத்திரியின் நிலை இது

கொழும்பு, ஜன. 18
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன - தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் தலைமையிலான கூட்டு அரசில் இடம்பெற்றன என்று கருதப்படும் ஊழல் » 06

## அரசதலைவர் வேட்பாளராக போட்டியிடப் போவதில்லை!

### பசில் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 18
அடுத்த அரச தலைவர் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று தெரிவித்தார் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச.
அடுத்த அரச தலைவர் தேர்தலில் யார் களமிறங்குவது என்பது தொடர்பில் மகிந்தவின் குடும்பத் » 06

## குடியுரிமை என்பது தனிப்பட்ட விடயமே

### கொதிக்கிறார் கோத்தபாய



கொழும்பு, ஜன. 18
ஒரு நாட்டின் குடியுரிமையை வைத்துக் கொள்வதும் நீக்கிக் கொள்வதும் என் தனிப்பட்ட விடயம். இதனால் யாருக்கும் பிரச்சினை இல்லை » 06

## மீண்டும் அரசியல் சூழ்ச்சி மகிந்த இரகசியத் திட்டம்!

### முளையிலேயே கிள்ளிவிடுவோம் என ஐக்கிய தேசியக் கட்சியினர் சூளுரை

கொழும்பு, ஜன.18
"நாம் எதிர்பார்த்த வகையில் மைத்திரி - மகிந்த கூட்டணிக்குள் மோதல் வெடித்துள்ளது. இதையடுத்து எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அணியினர் தனிவழியில் சென்று மீண்டும் ஓர் அரசியல் சூழ்ச்சி ஊடாக அதிகாரத்தைக் கைப்பற்ற இரகசியத் திட்டம் வகுக்கின்றனர். இந்தத் தகவல் வெளியில் கசிந்துள்ளது. எனினும் இந்த அரசியல் சூழ்ச்சியையும் நாம் வெற்றிகரமாக முறியடிப்போம்."
இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி » 06

## 300 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்குகிறது சீன வங்கி

கொழும்பு, ஜன. 18
கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு, 300 மில்லியன் டொலர் கடனை வழங்குவதற்கு சீன வங்கி முன்வந்துள்ளது என்று » 06

## இலங்கை கிரிக்கெட் சபையின் தேர்தல் பெப்ரவரி 21ஆம் திகதி

கொழும்பு, ஜன. 18
இலங்கைக் கிரிக்கெட் சபையின் தேர்தல் பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி நடைபெறும் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னான்டோ தெரிவித்தார். » 06




ஒவ்வொரு முறையும் Card மூலம் செலவு செய்யும் தொகையின் 1% உங்களுடைய DFCC வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படும்.

DFCC கடனட்டை



24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# மன்னாரிலிருந்து அமெரிக்காவுக்கு எடுத்துச்செல்லப்படும் மனித எலும்புக்கூடுகளுடன் காணாமல் ஆக்கப்பட்டோரின் சார்பில் வாதிடும் சட்டத்தரணிகளும் செல்ல அனுமதி

மன்னார், ஜன. 18


மன்னார் நகரில் சதொச வளாகத்தில் அகழ்வு செய்யப்பட்ட மனித எலும்புக் கூடுகள் அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்துக்கு காபன் பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்படவுள்ள நிலையில், அவற்றுடன் காணாமல் ஆக்கப்பட்டோருக்காக முன்னிலையாகி வாதிடும் சட்டத்தரணிகளும் செல்வதற்கு மன்னார் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

குறித்த எலும்புக்கூடுகள் எதிர்வரும் 24ஆம் திகதியளவில் அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளன. இந்த நிலையில் இவற்றுடன் தாமும் செல்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்றுகாணாமல்ஆக்கப்பட்டோர்சார்பில்முன்னிலையாகிவரும் சட்டத்தரணிகள் நகர்வுப்பத்திரமொன்றை மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுத் தாக்கல் செய்தனர். இதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த மாதிரி எலும்புக்கூடுகளை நீதிமன்றின் கட்டுக்காவலில் இருந்துகட்டுநாயக்காவானூர்திநிலையம்வரைஒருநீதிமன்ற பதிவாளரோ நீதிமன்ற பொறுப்புவாய்ந்த அதிகாரியோ பொலிஸ் பாதுகாப்பில் சென்று கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் கையளிக்குமாறும் நீதிமன்றம் நேற்றுக் கட்டளை பிறப்பித்தது. எதிர்வரும் 24ஆம் திகதி அதிகாலை ஒரு மணிக்குச்செல்லும்வானூர்தியில் குறித்த எலும்புகள் கொண்டுசெல்லப்படவாய்ப்புண்டு என்று கருதப்படுகிறது. (ம-60)



# 25 வருடங்களின் பின்னர் மயிலிட்டியில் பொங்கல்!



யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ்ப்பாணம் மயிலிட்டி பகுதி கடந்த 25 வருடகாலமாக இராணுவ கட்டுப்பாட்டுக்குள் இருந்து விடுக்கப்பட்டுள்ள நிலையில் இந்த வருடம் அங்கு பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டுள்ளது.

ஆதி மயிலிட்டி காசி புதராய் ஆலயத்திலேயே25வருடங்களின்பின்னர்இந்தவருடம் மீண்டும் பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டுள்ளது. ஆலயத்தின் தலைமைக் குரு தீபதரிசன சர்மாவால் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன. (ம)

# வவுனியா வளாகம் பெப்ரவரியில் சுயாதீனப் பல்கலையாக மாறும்!

## வடமாகாண முன்னாள் அமைச்சர் சத்தியலிங்கம் இப்படித் தெரிவிப்பு

**வவுனியா, ஜன. 18**

**வவுனியா வளாகம் அடுத்த மாதம் முதல் சுயாதீன பல்கலைக் கழகமாக மாறும் என்று தெரிவித்தார் வடமாகாண முன்னாள் அமைச்சர் ப.சத்தியலிங்கம். வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியாவளாகம்ஆரம்பிக்கப்பட்டு28 வருடங்கள்முடிவடைந்துவிட்டன. இந்த வளாகம் ஆரம்பிக்கப்பட்ட சமகாலத்தில் உருவான வளாகங்கள் எல்லாம் தற்போதுசுயாதீனபல்கலைக்கழகங்களாக மாற்றபட்டுள்ளன. இதனைசுயாதீனமான பல்கலைக் கழகமாக மாற்றுவதற்கு பலரும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். பல்கலைக் கழகமாக மாற்றபடும் என்று நாடாளுமன்றத்திலும் தெரிவிக்கபட்டிருந்தநிலையில்தொடர்நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. வவுனியாவளாகத்தைப்பல்கலைக் கழகமாக மாற்றுவதற்குச் சில தடைகள் இருக்கின்றன. கட்டுமான வசதிகள் இல்லாமை அதில் முக்கியமானது. எனவே இந்த விடயங்கள் தொடர்பாக கடந்தவாரம்உயர்கல்விஅமைச்சருடன் சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தோம். பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொகான், வவுனியா வளாக முதல்வர் ரி. மங்களேஸ்வரன் ஆகியோரும் குறித்த சந்திப்பில் என்னுடன் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த சந்திப்பில், வவுனியா வளாகத்தில் தற்போது இரண்டு பீடங்கள் மாத்திரமே உள்ள நிலையில் அதனை அதிகரிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.



வவுனியா வளாகத்தை சுயாதீனமான பல்கலைக்கழகமாகமாற்றுவதென்றும் ஏற்கனவேஇருக்கும்கற்கைநெறிகளை அதிகரிப்பதுடன்குறைந்ததுநான்குபீடங்களைக் கொண்ட பல்கலைக் கழகமாக மாற்றுவதென்றும்முடிவுகாணப்பட்டது. அநேகமாக அடுத்த மாதம் அதற்கான அறிவிப்பு வெளிவரும் என்று எமக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. தலைமை அமைச்சருடனும்குறித்தவிடயம்தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. அவரும் முழுமையான ஒத்துழைப்பைத் தருவேன் என்று தெரிவித்துள்ளார் - என்றார். (ம-110)

*மைத்திரிதன்நிலைப்பாட்டைத்தெரிவிக்கும்வரையில்*

# சுதந்திரக்கட்சியின் வேட்பாளர் குறித்து வாய்திறவேன் என்கிறார் சரத் அமுனுகம

கொழும்பு, ஜன. 18

அடுத்த அரசதலைவர்தேர்தலில் தான், போட்டியிடுவதா இல்லையா என்பதை முதலில்அரசதலைவர்மைத்திரிபால சிறிசேன தெரிவிக்கும் வரையில் சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் மாற்று வேட்பாளர் குறித்து வாய் திறக்கப் போவதில்லை என சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரும் நாடாளு மன்ற உறுப்பினருமான கலாநிதிசரத்அமுனுகமதெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில்கருத்துத்தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர்.

முதலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் யாரென தெரிவிக்க வேண்டும். சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவுகள்இருப்பதைவெளிக்காட்டுவதற்கு எந்த அவசியமும் இல்லை என்று அவர் மேலும்தெரிவித்தார். (ம)

# மாகாண சபைத் தேர்தலை நடத்த தேவையான தீர்மானத்தை எடுக்குக

## தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தல்

கொழும்பு, ஜன. 18

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்குத் தேவையான தீர்மானம் ஒன்றைநாடாளுமன்றத்தில் எடுக்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் பெரும்பாலான மாகாண சபைகளின் ஆயுட்காலங்கள் முடிவுக்கு வந்துள்ள நிலையில், **மாகாண சபைகளுக்கான** தேர்தல்களை நடத்துவது தொடர்பில் நாடாளுமன்றத்தில் தீர்மானமொன்றை மேற்கொள்ளுமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஆகியோருக்கு கடிதமொன்றின் மூலம் வலியுறுத்தியுள்ளது தேர்தல்கள் ஆணைக்குழு. (ம)

# சிறுபான்மை மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளை முறியடிக்க அரசியல் வாதிகள் ஒன்றிணையவேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் கோரிக்கை

கண்டி, ஜன. 18

சிறுபான்மையினமக்களுக்குஎதிராகக் கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறைகளை முறியடிப்பதற்காகவும், உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின்கண்டிமாவட்டநாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் கோரிக்கை விடுத்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கண்டி மாவட்ட உறுப்பினர்களுக்கும், தமிழ் முற்போக்குக் கூட்டணியி னருக்கும் இடையிலான சந்திப்பு கண்டியில் கடந்த14ஆம்திகதிதிங்கட்கிழமைநடைபெற்றது. இதில்கலந்துகொண்டுகருத்து வெளியிடுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் மேற்படி கோரிக்கையை முன்வைத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

இலங்கை அரசியலில் தற்போதைய காலகட்டம் தமிழ் பேசும் மக்களுக்கும், **அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளுக்கும் மிகமுக்கிய** காலகட்டமாகும்.

புதிய அரசமைப்பொன்றை உருவாக்குவதற்கான முயற்சி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதுநிறைவேற்றப்பட்டால் தமிழ் பேசும் மக்களுக்கு ஓரளவேனும் நிவாரணம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், இந்த முயற்சியைகுழப்பியடிப்பதற்குசிலபேரினவாதிகள் முயற்சிக்கின்றனர். அத்துடன், தமிழ், முஸ்லிம் மக்களை பிரித்தாள்வதற்காக தமிழ் பேசும் மக்களிடையே முரண்பாடுகளைஉருவாக்கமுற்படுகின்றனர். இந்த இனவாத பொறிக்குள் நாம் சிக்கவிடக்கூடாது. நாம் விழிப்பா கவே இருக்கவேண்டும். ஆகவேதான், இந்தக் காலகட்டம் எமக்கு முக்கியம் என நான் குறிப்பிட்டிருந்தேன்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோகணேசன், முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் அன்று முதல் இன்றுவரை தமிழ் பேசும் மக்களுக்காக கொள்கை ரீதியில் இணைந்தேசெயற்பட்டுவருகின்றனர். அரசியல்ரீதியில்கருத்துமுரண்பாடுகள் இருந்தாலும், மக்கள் என வரும்போது இருவரும் நீதியின் பக்கமே நிற்பார்கள். **ஆட்சிகவிழ்ப்பு சூழ்ச்சியின்போது ஜனநாயகத்துக்காக இருவரும் செயற்பட்ட** விதம் இதற்குச் சிறந்த சான்றாகும்.

எனவே, கண்டி மாவட்டத்திலும் தமிழ் பேசும் மக்களுக்காக கொள்கை ரீதியில் நாமும் ஒரு தளத்தில் பயணிப்போம். தமிழ் பேசும் மக்களின் இருப்பை உறுதிப்படுத்துவதற்காககுரல்கொடுப்போம். அடக்குமுறைகட்டவிழ்த்துவிடப்பட்டால் இணைந்து முறியடிப்போம்.

இணைந்துசெயற்படுவதென்பதுதனித்துவத்தை இழப்பது என்று அர்த்தமாகாது. அது எமக்கான பேரம் பேசும் சக்தியை மேலும் அதிகரிக்கும். எம்மிடையிலும்பிரிவினைஇல்லை. இணைந்தே செயற்பட்டுவருகின்றோம். எதிர்காலத்திலும் அதே வழியைப் பின்பற்றுவோம்.

தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்வதுதான் பேரினவாதிகளுக்கு இன்று சகித்துகொள்ள முடியாத விடயமாக இருக்கின்றது. கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்களிடையே முறுகலை ஏற்படுத்துவதற்கு வகுக்கப்பட்ட சூழ்ச்சி அண்மையில் அம்பலமானது. எனவே, பேரினவாதிகளின் அகோர இனவாதப் பசிக்கு நாமே போடும்தரப்பாகமாறிவிடக்கூடாதுஎன்பதையும் நினைவில் கொள்வோம்." - என்றார். (ம)

## பிலிப்பைன்ஸ் பயணத்தின்போது ஒப்பந்தங்கள் பல கைச்சாத்து

கொழும்பு, ஜன. 18

இலங்கைக்கும் பிலிப்பைன்ஸுக்கும் இடையில் 6 உடன்படிக்கைகள் கைசாத்திடப்பட்டுள்ளன. அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பிலிப்பைன்ஸ் பயணத்தின் போது இருதரப்பு நட்புறவு புரிந்துணர்வு மற்றும் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு இந்த ஆறு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

உத்தியோகப்பூர்வ பயணம் மேற்கொண்டு பிலிப்பைன்ஸ் சென்றுள்ள மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழு இந்த ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டது.

இதனடிப்படையில் சுற்றுலாத்துறை ஆய்வு மற்றும் அபிவிருத்தி, கல்வி, பயிற்சி சுற்றுலா மேம்பாட்டு வேலைத்திட்டம், முதலீடு மற்றும் இருதரப்பினரால் தீர்மானிக்கப்படும் ஏனைய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தம்,

இரு நாடுகளுக்குமிடையில் ஊழியர் சேமலாபம் மற்றும் உரிமைகளை பாதுகாத்தல் திறனாற்றல் சேவைநிலை தொழில் ரீதியில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்தல், குடியகல்வு பணியாளர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் உறுதி செய்தல் மற்றும் ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகச் சட்ட உதவிகளை வழங்குதல் போன்ற துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தம்,

உயர்கல்வித்துறையில் இரு நாடுகளுக்கிடையில் ஒத்துழைப்பை மேம்படுத்தும்நோக்கில்பிலிப்பைன்ஸ் குடியரசின் உயர்கல்வி ஆணைக்குழுவுக்கும் இலங்கையின் நகர திட்டமிடல் நீர் விநியோகம் மற்றும் உயர்கல்வி அமைச்சுக்குமிடையிலான ஒப்பந்தம்,

பயிர் உற்பத்தி கடற்றொழில் துறை கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு விவசாய தயாரிப்பு மற்றும் பெறுமதி சேர் உற்பத்திகளை விநியோகித்தல் மற்றும் விற்பனை போன்ற துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கிலான ஒப்பந்தம்,

தேசிய விவசாய தொழில் துறையில் ஆய்வு கட்டமைப்பின் ஆய்வாளர்கள் வெளிநாட்டு பட்டப்படிப்பைத் தொடரத் தேவையான வசதிகளை செய்வது குறித்து பிலிப்பைன்ஸ்சில் லோஸ் பானோஸ் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையை எட்டுவதற்கான ஒப்பந்தம்,

இரு தரப்புக்கிடையில் பாதுகாப்புத்துறை கல்வி பயிற்சி, பாதுகாப்பு தூதுக்குழுவினரைப் பரிமாறுதல், கூட்டுப் பயிற்சி, நட்புறவு சுற்றுலா மற்றும் மாநாடு ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்குடன் இலங்கைக்கும் பிலிப்பைன்ஸுக்கும் இடையிலான ஒப்பந்தம் ஆகியன கைசாத்திடப்பட்டுள்ளன.

இதேவேளை, எதிர்காலத்தில் இலங்கையுடன் விரிவான தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள தமது நாடு எதிர்பார்ப்பதாக பிலிப்பைன்ஸ் அரசதலைவர் தெரிவித்துள்ளார் என்று இலங்கை அரசதலைவரின் ஊடகப் பிரிவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

இரு நாடுகளுக்குமிடையிலான தொடர்புகளில் வரலாற்று முக்கியத்துவமுடைய சந்தர்ப்பமாகும் எனக் குறிப்பிட்ட பிலிப்பைன்ஸ் அரசதலைவர் ரொட்ரிகோ டியுடேர்ட் அந்த நம்பிக்கையான நட்புறவுடன் இரு நாடுகளுக்குமிடையிலான தொடர்புகளைப் பலப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என்றும் சந்திப்பில் அந்த நாட்டு அரசதலைவர் வலியுறுத்தினார்.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் என்ற வகையில் இரு நாடுகளுக்கும் காணப்படும் சவால்கள் பொதுவானவை. இரு நாடுகளுக்கும் பொதுவான பிரச்சினையாகக் காணப்படும் போதைப் பொருள் கடத்தலைத் தடுத்தல் போன்ற சவால்களிலும் பன்னாட்டு மட்டத்திலும் இலங்கையுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள பிலிப்பைன்ஸ் தயாராக உள்ளது.

கைச்சாத்திடப்பட்ட புதிய புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் ஊடாக எதிர்காலத்தில் இரு நாடுகளும் பல நன்மைகளை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று பிலிப்பைன்ஸ் அரச தலைவர் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த மைத்திரிபால சிறிசேன, இலங்கைக்கும் பிலிப்பைன்ஸுக்கும் இடையிலான தொடர்புகளைப் பலப்படுத்தி புதிய தோர் பாதையில் பயணிக்க எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார் என்று அரசதலைவர் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

(த-31)

# புதிய அரசமைப்பு இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த மாட்டாது

## மகிந்த ஆதரவு சட்டத்தரணிகள் கூறுகின்றனர்

கொழும்பு, ஜன. 18

**புதிய அரசமைப்பு இனங்களுக்கிடையில் ஒருபோதும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது. மாறாக எதிர்காலத்தில் அரசமைப்பு ரீதியில் பிரச்சினைகளையே ஏற்படுத்தும் என்று பொதுமக்கள் முன்னணியின் சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம் வெளியிட்டுள்ளது.**

முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சங்கத்தின் செயலர் அதுல த சில்வா மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பைக் காரணம் காட்டி மாகாண சபைத் தேர்தலைப் பிற்போடும் முயற்சிகளே இடம் பெறுகின்றன. மாகாண சபைத் தேர்தலைப் பழைய முறையில் நடத்துவதற்கே அதிகம் வாய்ப்புக் காணப்படுகின்றது

ஒட்டுமொத்த மக்களும் மாகாண சபைத் தேர்தலைக் கோரும் பொழுது அரசு தேவையற்ற ஒரு அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இன்று முன்னணியே முதன்மைக் கட்சியாகக் காணப்படுகின்றது. எதிர்காலத்தில் இந்தக் கட்சியே அரசியலில் அதிகாரம் செலுத்தும். ஐக்கிய தேசியக் கட்சியிலான அரசு ஒரு தரப்பினரது தேவைகளுக்காகவே செயற்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியிலான அரசில் தொடர்ச்சியாக ஊடகத்துறைக்கு எதிரான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. ரணில் விக்ரமசிங்க பெயர் குறிப்பிட்டு ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தமை முறையற்ற செயற்பாடு.

ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில் இதுவரையில் எவ்வித மறுப்புக்களையும், முறையான காரணத்தையும் ரணில் விக்கிரம சிங்க குறிப்பிடவில்லை. இந்தவிடயம் தொடர்பில் அவர் பகிரங்கமாகத் தெளிவுப்படுத்த வேண்டும் - என்றார். (த-61)

## பத்து லட்சம் சுற்றுலாப் பயணிகளை இந்த வருடம் வரவழைக்கத் திட்டம்

கொழும்பு, ஜன. 18

நாட்டின் சுற்றுலாத்துறைக்கான மிகப்பெரிய சந்தையான இந்தியாவில் இருந்து இந்தவருடத்துக்கு 10 லட்சம் சுற்றுலாப்பயணிகளை வரவழைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி, வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவமத அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தவருடத்தில் இலங்கையின் சுற்றுலாப் பயணத்துறைக்கான பெரும் சந்தையான இந்தியாவிலிருந்து 10 லட்சம் சுற்றுலாப்பயணிகளை வரவழைப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். இது கடந்த வருடத்தில் வருகை தந்த இந்திய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையின் இரண்டு மடங்கு அதிகரிப்பாக அமையும். மேலும் இருநாடுகளுக்கு இடையிலான வானூர்திப் பயணத்துறை நலன்களை மேம்படுத்துவதன் மூலமாக இந்த விடயத்தில் உச்ச பயனைப் பெற்றுக் கொள்வதற்குத் திட்டமிடப்படுகின்றது.

கடந்த வருடம் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு 4 லட்சத்து 24 ஆயிரத்து 887 சுற்றுலாப் பயணிகள் வந்திருந்தனர்.

கடந்த வருடத்தில் இலங்கைக்கு வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளில் 18 சதவீதமாக இது அமைந்திருந்தது. இந்த நிலையில் இந்தவருடம் இலங்கைக்கான மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகை 30 லட்சமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதில் 33 சதவீத பங்களிப்பை இந்திய சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவு செய்ய வேண்டும் எனவும் திட்டமிடப்பட்டு, அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தவருட இறுதியில் நாட்டுக்கு அதிகளவிலான அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் இரண்டாவது பெரிய துறையாக சுற்றுலாத்துறை அமையும். கடந்த வருட இறுதியிலேயே இத்தகைய அடைவை எட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நாட்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி காரணமாக அதனை அடையமுடியாது போனது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த வாரம் இந்தியாவின் மும்பை நகரில் நடைபெற்ற பன்னாட்டுப் பயண மற்றும் சுற்றுலாத்துறைக் கண்காட்சியில் அமைச்சர் ஜோன் அமரதுங்க கலந்துகொண்டிருந்தார்.

(த-61)

## பழைய முறையிலாவது அரசே! மாகாணத் தேர்தலையே நடத்தவும்

### நீதிக்கான பெண்கள் அமைப்பு வலியுறுத்து

கொழும்பு, ஜன. 18

மாகாணசபைத் தேர்தலை புதிய முறையில் நடத்துவது சாத்தியமற்றதாகக் காணப்படுமாயின் பழைய தேர்தல் முறையிலே அரசு விரைவாக நடத்த வேண்டும். புதிய தேர்தல் முறையில் அறிமுகம் செய்யப்பட்ட 25 சதவீத பெண் பிரதிநிதித்துவத்தைப் பழைய தேர்தல் முறையினுள் இணைத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு நீதிக்கான பெண்கள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பு சனசமூக கேந்திர மத்திய நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போது அந்த அமைப்பின் தலைவர் சாவித்ரி குணசேகர மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய சூழ்நிலைக்குத் தேவையற்ற தேர்தலான அரசதலைவர் தேர்தலையும், பொதுத் தேர்தலையும் நடத்துவது பற்றி அரசு குறிப்பிட்டு வருகின்றது. பதவிக் காலம் முடிவடைந்த மாகாண சபைத் தேர்தலை நடத்தாதிருக்கின்றமை காலவரையறையின்றிப் பிற்போட்டுள்ளமை தனிமனித அடிப்படை உரிமை மீறல். பன்னாடுகளில் இலங்கையில் மாத்திரமே தேர்தலை நடத்துமாறு கோரி வீதிக்கு இறங்கிப் பொது மக்கள் போராட வேண்டிய நிலை 2015ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏற்பட்டுள்ளது.

புதிய தேர்தல் முறைமை முழுமையாகக் குறைபாடுகள் நிறைந்தது என்று குறிப்பிட முடியாது. பல்வேறு புதிய அம்சங்களும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக 25 சதவீத பெண் பிரதிநிதித்துவ முறையை அறிமுகம் செய்துள்ளமையைக் குறிப்பிட வேண்டும்.

மாகாண சபை தேர்தலை காலவரையறையின்றிப் பிற்போடுவதற்குத் தேர்தல் முறையைக் காரணமாக வைத்துக் கொண்டு அரசு அரசியல் கட்சிகளைக் குற்றஞ்சாட்டுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர்த்து பிற கட்சியினர் மாகாண சபைத் தேர்தலை பழைய முறையில் நடத்த இணக்கம் தெரிவித்துள்ளனர்.

பழைய தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலை நடத்தும் பொழுது அந்தத் தேர்தல் முறையில் 25 சதவீத பெண் பிரதிநிதித்துவ முறையை உள்ளடக்க வேண்டும்.

மாகாண சபைத் தேர்தலை இந்தவருடத்தில் நடத்தாமல் தொடர்ந்து பிற்போடுவதற்கே அரசு புதிய அரசமைப்பை உருவாக்க முயற்சிக்கின்றது. இந்தப் புதிய அரசமைப்பு ஒட்டுமொத்த மக்களையும் ஏமாற்றும் செயற்பாடாகவே கருதப்படுகின்றது. தேர்தலைப் பிற்போட முயற்சித்தால் அரசுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுப்போம் என்றார். (த-31)

# இந்திய மத்திய வங்கியிடம் 100 கோடி பெறப் பேச்சு

கொழும்பு, ஜன. 18

கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை அரசு இந்தியாவின் மத்திய வங்கியிடம் இருந்து ஒரு பில்லியன் (100 கோடி) டொலரை நாணயப் பரிமாற்றத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சில் ஈடுபட்டுள்ளதாக பதில் நிதியமைச்சர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு இந்த ஆண்டில் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன்கள் மற்றும் கடந்த ஆண்டு இறுதியில் ஏற்பட்ட ஆட்சிக் குழப்பங்களால் ஏற்பட்ட பொருளாதார இழப்புக்களைச் சமாளிக்க இந்தியா, சீனா, ஜப்பான், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிடம் உதவி கோரியுள்ளது.

இந்தியாவின் மத்திய வங்கியான ரிசர்வ் வங்கியிடமிருந்து நாணயப் பரிமாற்றங்களின் மூலமாக 400 மில்லியன் டொலரைப் பெற்றுக் கொள்ள இலங்கை அரசு ஏற்கனவே பேச்சு நடத்தியிருந்தது. இந்தியாவின் ரிசர்வ் வங்கியும் அதற்கு இணக்கம் தெரிவித்திருந்தது. இந்த நிலையில், இந்தியாவின் ரிசர்வ் வங்கியிடமிருந்து ஆயிரம் மில்லியன் டொலரை நாணயப் பரிமாற்றங்களின் மூலமாகப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(த)

# யாழ். குடாவில் அதிகரிக்கிறது டெங்கு நேற்றுமுன்தினம்வரை 422 பேர் பாதிப்பு

## காய்ச்சல் 3 நாள்களுக்குமேல் நீடித்தால் மருத்துமனைக்குச் செல்லுமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.18

டிசம்பர் மாதத்தைத் தொடர்ந்து ஜனவரி மாதமும் டெங்குநோயின் தாக்கம் யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்குநோயால்பாதிக்கப்பட்டிருக்கலாம்என்றசந்தேகத்தில்காய்ச்சலுடன் ஜனவரியில் முதல் 16 நாள்களில் மட்டும் 499 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

காய்ச்சல் மூன்று நாள்களுக்கு மேலாக நீடிக்குமாயின் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

யாழ்ப்பாணம்மற்றும்கொழும்புமாவட்டங்களில்டெங்குநோய்தீவிரமாகபரவிவருவதால்டெங்குநுளம்புகள்பெருகுவதைத் தடுக்கும் வழிமுறைகளை உடனடியாகப் பின்பற்றுமாறு அவசர எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

க்டந்த 16 நாள்களில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர் என்றும் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஆகக்கூடுதலாக கொழும்பு மாவட்டத்தில் 625 நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். அதற்கு அடுத்தகட்டமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 499 நோயாளிகளும், கம்பஹாமாவட்டத்தில் 180 நோயாளர்களும் அடையாளங்காணப்பட்டுள்ளனர்என்றுதொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கண்டி, மாத்தறை, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலும்டெங்குநோயாளிகள் கூடுதலாக இனங்காணப்பட்டுள்ளனர் என்று தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவின் சமூகச்சுகாதாரச்சிறப்புநிபுணர், மருத்துவர் பிரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

காய்ச்சல் 3 நாள்களாகத் தொடர்ந்தால் தாமதமின்றி மருத்துவமனைக்குச் சென்றுசிகிச்சைபெறுங்கள்என்றுதொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

கடந்த ஆண்டு டெங்குநோய்க்கான விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு, டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளும் நாடு முழுவதும் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன. எனினும் டெங்கு ஒழிக்கப்பட்டதாகத் தகவல்கள் இல்லை. கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில்அதனுடையஆதிக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. பார்த்தீனியச் செடியைப் போன்றே டெங்கு நோயும் ஒழிக்கமுடியாதஒன்றாகஉருவெடுத்துள்ளதுஎன்று தெரிவிக்கப்படுகிறது.

(த-21)

# விபத்து ஏற்படுத்தினாரென்று பொலிஸ் அலுவலர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ்ப்பாணம்இணுவிலில் இடம்பெற்ற விபத்தில் சிறுவன்உயிரிழந்தநிலையில், விபத்தை ஏற்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்படும் பொலிஸ் அலுவலர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இணுவில் 7 ஆம் கட்டைப் பகுதியில் தைப்பொங்கல் தினத்தன்று முச்சக்கரவண்டிவிபத்தில்ஒரேகுடும்பத்தைச்சேர்ந்த4பேர்படுகாயமடைந்திருந்தனர். அவர்களில் 12 வயதுச் சிறுவனும் அடங்குவார். சிகிச்சைபயனளிக்காது சிறுவன் பின்னர் உயிரிழந்தார்.

இந்த விபத்தில் பொலிஸ் அலுவலரும் படுகாயமடைந்து தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில்சேர்க்கப்பட்டிருந்தார்.

விபத்தின்பின்னர், பொலிஸ் விசாரணையின் போது, பொலிஸ் அலுவலர் செலுத்திச்சென்றமுச்சக்கரவண்டி எதிரேவந்துகொண்டிருந்த முச்சக்கரவண்டியைமோதியதால்விபத்துஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதன்போது மூன்றாவதாக மற்றொருமுச்சக்கரவண்டியும் விபத்துக்குள்ளாகியது.

படுகாயமடைந்த சிறுவன் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் அலுவலர் நுவரெலியாமாவட்டத்திலிருந்து இடமாற்றம்பெற்றுயாழ்ப்பாணத்துக்குவந்திருந்தநிலையில் விபத்து இடம்பெற்றுள்ளது. அவரைச் சுன்னாகம் பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர்.விசாரணையின் பின்னர் அவர் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும்தெரிவித்தனர்.

(த-106)

# தமிழர் பிரச்சினைக்கும் குரல்கொடுக்க வேண்டும்

## மகிந்தவிடம் ஈ.பி.டி.பி கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 18

தமிழ்மக்களின்பிரச்சினைகளுக்காகவும் குரல் கொடுங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர்மகிந்தராஜபக்சவிடம் ஈ.பி.டி.பியினர் நேரில் சந்தித்துக்கோரிக்கைவிடுத்துள்ளனர்.

இதுகுறித்துஈ.பி.டி.பிஅனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கொழும்பு அரசால் மீளப்பறிக்க முடியாத, நிலையான அரசியல் தீர்வையே நாம் வரவேற்போம். சிங்களமக்களுக்கும், தமிழ் மக்களுக்கும்திருப்தியற்றதும், சந்தேகத்தைத்தருவதுமானஎந்தவொருதீர்வுத்திணிப்பையும் ஈ.பி.டி.பி ஏற்றுக்கொள்ளப் போவதில்லை..

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்வாக்குறுதிகள்மீதும், செயற்பாடுகள் மீதும் தமிழ் மக்கள் முற்றிலும் நம்பிக்கை இழந்துள்ளனர். இந்த ஆட்சியில் எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தன் இருந்த காலத்தில் நாட்டுக்கும் நன்மையில்லை, தமிழ் மக்களுக்கும் பயனில்லை என்ற நிலைமையேதொடர்கின்றதுஎன்றுள்ளது.

(த)

# இலங்கையுடனானதொடர்புகளை பிலிப்பைன்ஸ் அரசு எதிர்பார்ப்பு

கொழும்பு, ஜன. 18

எதிர்காலத்தில் இலங்கையுடன் விரிவான தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள தமது நாடு எதிர்பார்ப்பதாக பிலிப்பைன்ஸ் அரசதலைவர்தெரிவித்துள்ளார்என்று இலங்கைஅரசதலைவரின் ஊடகப் பிரிவு விடுத்த செய்திக்குறிப்பில்தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

அரசதலைவர் மைத்ரிபால சிறிசேனபிலிப்பைன்ஸுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை பயணமாகியிருந்தார்.

அவர்நேற்றுமுன்தினம்சந்திப்பில்ஈடுபட்டார். இருநாடுகளுக்குமிடையிலான தொடர்புகளில் வரலாற்று முக்கியத்துவ முடைய சந்தர்ப்பமாகும் எனக் குறிப்பிட்ட பிலிப்பைன்ஸ் அரசதலைவர் ரொட்ரிகோ டியுடேர்ட் அந்த நம்பிக்கையானநட்புறவுடன்இருநாடுகளுக்குமிடையிலான தொடர்புகளைப்பலப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என்றும் சந்திப்பில் அந்த நாட்டு அரசதலைவர்வலியுறுத்தினார்.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் என்ற வகையில் இரு நாடுகளுக்கும் காணப்படும் சவால்கள் பொதுவானவை. இரு நாடுகளுக்கும் பொதுவான பிரச்சினையா கக் காணப்படும் போதைப்பொருள் கடத்தலைத் தடுத்தல் போன்ற சவால்களிலும் பன்னாட்டு மட்டத்திலும் இலங்கையுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள பிலிப்பைன்ஸ் தயாராக உள்ளது.

தமக்கும் மைத்ரிபால சிறிசேனவுக்கும் இடையில் இடம்பெற்ற உத்தியோக பூர்வசந்திப்பின்போதுஇடம்பெற்ற கலந்துரையாடலில் இரு நாடுகளினதும் நன்மைக்கானகருத்துப்பாரிமாறல்கள் இடம்பெற்றன. இதன்போது கைச்சாத்திடப்பட்ட புதிய புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் ஊடாக எதிர்காலத்தில் இரு நாடுகளும் பல நன்மைகளை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று பிலிப்பைன்ஸ் அரச தலைவர் தெரிவித்தார்.


அதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த மைத்ரிபால சிறிசேன, இலங்கைக்கும் பிலிப்பைன்ஸுக்கும்இடையிலான தொடர்புகளைப் பலப்படுத்தி புதியதோர் பாதையில் பயணிக்க எதிர்பார்ப்பதாகத்தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் ஊடாக இலங்கைக்கும் பிலிப்பைன்ஸுக்கும்இடையேநீண்டகால நம்பிக்கையான நட்புறவொன்று கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்குமிடையே கட்டியெழுப்பப்பட்டஅந்தபுதியநட்புறவினூடாக இரு நாட்டு மக்களினதும் சௌபாக்கியம் மற்றும் முன்னேற்றத்துக்காக இணைந்து பயணிக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

வெகு விரைவில் இலங்கைக்கு வருகை தருமாறு பிலிப்பைன்ஸ் அரசலைவருக்கு அழைப்பு விடுத்த மைத்திரிபால, இடம்பெற்ற கலந்துரையாடல்களின் முன்னேற்றத்தைமதிப்பிடுவதற்கான சிறந்ததோர் சந்தர்ப்பமாக அது அமையும் என்றும் தெரிவித்தார் என்றுள்ளது.

(த)

# உழவர் திருநாளும் பட்டிப் பொங்கலும் சாவகச்சேரியில் நேற்றுச் சிறப்புற்றன





சாவகச்சேரி, ஜன. 18

தமிழர் மரபுவழி உழவர் திருநாளும் பட்டிப் பொங்கலும்சாவகச்சேரியில்நேற்று இடம்பெற்றன.

தென்மராட்சிப்பிரதேசபொது அமைப்புகள்ஒன்றிணைந்து இவற்றை ஏற்பாடு செய்திருந்தன.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன், சாவகச்சேரிநகரசபைத்தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன், சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தன், தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு, ஆளுநரின் செயலர் இ. இளங்கோவன், மதகுருமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சாவகச்சேரி சங்கத்தானை முருகமூர்த்தி ஆலயத்திலிருந்து மாட்டு வண்டில்கள் சகிதம் பவனி ஆரம்பமாகி அதனைத்தொடர்ந்துவிருந்தினர்கள் பவனியாக வந்தனர். சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்ட் பந்தலுக்கு அனைவரும்அழைத்துவரப்பட்டனர். மங்கல விளக்கேற்றலுடனும் மதகுருமாரின் ஆசியுரைகளுடனும் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

(த-9)

# வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கு காணி வழங்க கிழக்கு ஆளுநர் மறுப்பு

மட்டக்களப்பு, ஜன. 18

அட்டாளைச்சேனைபிரதேச செயலர்பிரிவில்இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த 38 ஏக்கர் காணி விடுவிக் கப்பட்டு வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கு ஒப்படைக்கப்படவிருந்த நிலையில், அதனைக் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்இடைநிறுத்தியுள்ளார்.

குறித்த காணியின் பூர்வீக உரிமையாளர்களுடன் தான் கலந்துரையாடிய பின்னரேஇதுதொடர்பில்இறுதித் தீர்மானம்எடுக்கவேண்டும் என்று மாகாணக் காணி ஆணையாளருக்குஆளுநர் ஹிஸ்புல்லாஹ் பணித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

அட்டாளைச்சேனைபிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அஸ்ரப் நகர் கிராம சேவகர் பிரிவின் பல்லகாடு கிராமத்தில்இராணுவத்தின்கட்டுப்பாட்டில் இருந்த 38 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டு அதனை வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கு நேற்று உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கப்படவிருந்தது.

இந்தநிலையில், குறித்த காணிஅந்தப்பிரதேசத்தைச் சேர்ந்த 69 குடும்பங்களின் பூர்வீகக் காணி எனவும், அதற்கான ஆவணங்கள் தம்மிடம் இருப்பதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுசென்றனர்.

இதனையடுத்து, இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ளகாணியைவனஜீவராசிகள் திணைக்களத்துக்கு வழங்குமாறு முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எடுத்த தீர்மானத்தை இடைநிறுத்துமாறும், எதிர்வரும் இரண்டு வாரங்களில் குறித்த பகுதிக்குத் தான் பயணம் செய்து பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய பின்னரே அது சம்பந்தமான இறுதித் தீர்மானம் எடுக்க வேண்டும் எனவும் மாகாணக் காணி ஆணையாளருக்குகிழக்குமாகாண ஆளுநர் பணிப்புரை வழங்கியுள்ளார்என்றுதெரிவிக்கப்பட்டது.

(த)

# யாழ். போதனா மருத்துவமனை சி.ரி. ஸ்கானர் பழுது! கொடையாளிகள் எவராவது அன்பளிப்புச் செய்யுங்கள்

## மருத்துவமனைப் பணிப்பாளர் அவசரக் கோரிக்கை
## சுகாதார அமைச்சிடமிருந்து சாதகமான பதில் இன்னுமில்லை

**யாழ்ப்பாணம், ஜன. 18**

**யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் உள்ள சி.ரி ஸ்கானர் பழுதடைந்துள்ளது. அதனால் நோயாளர்கள் அவதிப்படுகின்றனர். அதனைப் பெற்றுத்தர கொடையாளிகள் யாராவது முன்வருமாறு வேண்டுகோள் விடுக்கிறோம். இந்த விடயத்தில் கொழும்பு சுகாதார அமைச்சு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவசர கோரிக்கையை விடுக்கிறோம். என்று யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார். குறித்த இயந்திரம் பழுதடைந்துள்ளதால் நோயாளர்களுக்கு சி.ரி.ஸ்கான் செய்வதில் சிரமத்தை எதிர்நோக்குகிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.**

கடந்த 8 வருடங்களாகப் பாவிக்கப்பட்ட சி.ரி. ஸ்கானர் இயந்திரத்தில் ரியூப் என்று அழைக்கப்படும் ஒரு வகை குழாய் பழுதடைந்துள்ளதால், நோயாளர்களுக்கு உரிய ஸ்கான் செய்வதற்கு வவுனியா மற்றும் ஏனைய மருத்துவமனைகளை நாட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த ஸ்கானருடைய பகுதியைத் திருத்த 3 வாரங்களுக்கு மேல் நீடிக்கும். இதனால், பெரும் சிரமத்தை எதிர்நோக்குகிறோம் என்றும் பணிப்பாளர் தெரிவித்தார்.

புதிய சி.ரி ஸ்கானர் பெற்றுக்கொள்வதற்கான வழிகள் தற்போது மருத்துவமனை நிர்வாகத்தினரிடம் இல்லாத காரணத்தால், நோயாளிகளை ஏனைய மருத்துவமனைகளுக்கு அனுப்பி சி.ரி. ஸ்கான் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

புதிய சி.ரி.ஸ்கானர் வழங்குவதாக கொழும்பு சுகாதார அமைச்சு உறுதியளித்திருந்தாலும், அதனைக்கொழும்புசுகாதாரஅமைச்சு உடனடியாக வழங்குவதாகவும் இல்லை. இந்த சி.ரி. ஸ்கானரைக் கொள்வனவு செய்ய 75 மில்லியன் தொடக்கம் 100 மில்லியன் ரூபா வரை தேவை. பன்னாட்டு அன்பளிப்பாளர்கள் யாராவது, உதவி செய்தால் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்குப் புதிய சி.ரி. ஸ்கானர் ஒன்றைக் கொள்வனவு செய்ய முடியும்.

தனியார் மருத்துவமனைகளில் நோயாளி ஒருவர் சி.ரி. ஸ்கான் செய்வதற்குச் சுமார் 7 ஆயிரம் ரூபா தொடக்கம் 15 ஆயிரம் ரூபா வரையில் தேவைப்படும்.

நோயாளிகள் பணம் செலவழிக்க வேண்டிய நிலையைத் தவிர்க்க ஏனைய மருத்துவமனைகளை நாட வேண்டியுள்ளது. எனவே, கொழும்பு அரசு உரிய நேரத்தில் சி.ரி ஸ்கானரை வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிப்பாளர் சத்தியமூர்த்தி வேண்டுகோள் விடுத்துள்ளார். (த-106)

## வேளாண் அபிவிருத்தி ஒன்றியம் வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்டது

வவுனியா, ஜன. 18

வவுனியா ஓமந்தை பொதுநோக்கு மண்டபத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 அளவில் வன்னிப் பிராந்திய வேளாண் அபிவிருத்தி ஒன்றியம் என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கோவில்குளம், செட்டிகுளம், ஓமந்தைப் பகுதிகளை உள்ளடக்கிய விவசாயிகளை இணைத்துக் குறித்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

வன்னி மாவட்டத்திலுள்ள விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றைத் தீர்க்கும் நோக்குடன் குறித்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை உறுப்பினர் திருமதி அஞ்சலா கோகிலகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அமைப்புக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. அதன்படி செயலராக க.அமிர்தலிங்கம், தலைவராக செ.சிறிதரன், பொருளாளராக நா. நாகேந்திரா, உப தலைவராக ச. பூலோகசிங்கம், உப செயலாளராக கு. இராசேந்திரகுமார், போசகர்களாக வே. கேதீஸ்வரன், பிரதேச சபை உறுப்பினர் கோ.அஞ்சலா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (த-110)

## நீதிமன்றுக்கு வெளியே நின்று சத்தமிட்டதால் இருவர் கைது

*எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னர் பிணை*

நீதிமன்ற நடவடிக்கையின் போது வளாகத்துக்கு வெளியில் நின்று சத்தமிட்ட பெண் உட்பட இருவரை எச்சரித்துப் பிணை வழங்கியது கிளிநொச்சி மாவட்ட நீதிமன்று.

கிளிநொச்சி நீதிமன்றத்தில் நேற்று வழக்கு நடவடிக்கைகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது வழக்குடன் தொடர்புடைய ஒருவரைப் பொலிஸார் முற்படுத்திய போது ஆரம்ப விசாரணையின் பின்னர் மன்றுபிணைவழங்கியது. ஆனால் வேறொரு வழக்கில் அவரைக் கைது செய்வதற்காக மன்னார் பொலிஸார் நீதிமன்றுக்கு வந்திருந்தனர். பிணை வழங்கப்பட்டதுடன் அவரைக் கைது செய்ய பொலிஸார் முற்பட்டனர்.

அவருக்கு எதிராகப் பல வழக்குகள் உள்ளன. அவரைக் கைது செய்ய வேண்டும் என்றும் சந்தேகநபரின் உறவினர்களிடம் பொலிஸாருடன் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரின் தாய் மற்று சகோதரன் பொலிஸாரிடம் முரண்பட்டனர். நீதிமன்ற வளாகத்துக்கு வெளியில் நின்று சத்தமிட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். எனினும் சந்தேகநபரை மன்னார் பொலிஸார் கைது செய்தனர். அவரது உறவினர்களான தாய் மற்றும் சகோதரன் இருவரும் சத்தமிட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் என்று கூறி நீதிமன்றப் பொலிஸார் அந்த இருவரையும்கைதுசெய்துநீதிமன்றில் முற்படுத்தினர். அவர்களை எச்சரித்துப் பிணையில் விடுவித்தது நீதிமன்று. (த-6)



## வடமாகாணத்தில் தமிழ்ப்பாட மேம்பாட்டுக்கு கல்வி அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை!

*யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 18

வடக்கின் தமிழ்ப்பாட மேம்பாட்டுக்கு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுடன் இணைந்து யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் செயற்பாடுகளை முன்னெடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தின் தமிழ்ப்பாட மேம்பாட்டுக்காக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்குப் பயன்தரக் கூடிய செயற்பாடுகளை முன்னெடுப்பதென்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு அதிகாரிகளுக்கும் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்க முக்கியஸ்த்தர்களுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் கல்வி அமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.கந்ததாசன், மாகாணப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கமலராஜன், மாகாணத் தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வசந்தகுமார் ஆகியோர் கொண்ட குழுவினருக்கும் தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், தலைவர் ச.லலீசன், உபதலைவர் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், பொருளாளர் பேராசிரியர் தி.வேல்நம்பி, செயலாளர் இ.சர்வேஸ்வரா ஆகியோரைக் கொண்ட குழுவினருக்கும் இடையில் மாகாணக் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் சந்திப்பு இடம்பெற்றது.

உயர்தர தமிழ் ஆசிரியர்களுக்கான வாண்மைத்துவப் பயிற்சி, மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் செயற்பாடுகள், மாகாணம் தழுவிய தமிழறிவுத் தேர்வு, தமிழாசிரியர்களுக்கான உயர் கல்வி வாய்ப்புக்கள் வழங்கல் முதலிய விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டதாகத் தமிழ்ச்சங்கத்தினர் தெரிவித்தனர். (த)

# உலக மக்களின் பசியைப் போக்க விவசாயிகளால் மட்டுமே முடியும்

## அதிகாரிகளால் கையெழுத்திட மட்டுமே முடியும்: மாவட்டச் செயலர் எடுத்துரைப்பு

மன்னார், ஜன. 18

உலகம் முழுவதும் பசியைப் போக்க விவசாயிகளால் மட்டுமே முடியும். எம் போன்ற அதிகாரிகள் கையெழுத்துப் போட்டால் அரிசி வந்து விடாது .அவர்கள் விவசாயத் தொழிலை செவ்வனே செய்வதற்கு வழி வகுக்கும் கையெழுத்துக்களை மட்டுமே நாங்கள் போடமுடியும்.

இவ்வாறு மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் உழவர் விழாவும் உழவர் மதிப்பளிப்பு நிகழ்வும் மாவட்டச் செயலக முன்றலில் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இந்த நிகழ்வை ஆரம்பித்துவைத்து உரையாற்றியபோது மாவட்டச் செயலர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொங்கல் விழா என்பது எந்த ஒரு மதத்தையும் சார்ந்ததல்ல. அது விவசாயம் செய்யும் அனைவரும் கொண்டாடப்பட வேண்டிய விழா. உழவர்கள் தங்கள் விளைநிலங்களில் விளைச்சல்களை அதிகமாகத் தந்தமைக்காக சூரியனுக்கு நன்றி செலுத்துகிறார்கள். நமக்கு உணவு தந்தபடியால் உழவர்களை நாம் மதிப்பளித்துக் கொண்டாடுகின்றோம்.



எனவே இந்த உழவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். பாராட்டப்பட வேண்டியவர்கள். பொதுவாக எமது உழவர்கள் நலிவடைந்தவர்கள். அவர்களையும் வாழ்வில் முன்னேற்றம் அடைய செய்வது நம் ஒவ்வொருவரின் கடமை - என்றார்.

இந்த நிகழ்வின்போது மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலகங்களில் சிறந்த மற்றும் நலிந்த விவசாயிகள் பிரதேச செயலர்களால் பரிந்துரை செய்யப்பட்டு மதிப்பளிக்கப்பட்டனர். ஒவ்வொருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா பணம் மாவட்டச் செயலரால் வழங்கப்பட்டது.

அத்துடன் கலாச்சார அபிவிருத்தி அலுவலர் திருமதி ரஞ்சனாவின் மாணவிகள் பங்குபற்றிய சிறப்பு நடனங்களும், மன்னார் மாவட்ட செயலகத்தின் தலைமைக் கணக்காளர் செல்வரெத்தினம் அவர்களின் பொங்கல் விழா பற்றிய சிறப்புரையும், மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸின் தலைமையில் நவீன முறை விவசாயமா? பாரம்பரிய விவசாயமா சிறந்தது எனும் தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றமும் நடைபெற்றன.

பொங்கல் விழாவுக்கான அனுசரணையை மன்னார் மாவட்டச் செயலக ஊழியர் நலன் புரிச் சங்கம் வழங்கியிருந்தது. (த-213)

# கொழும்பு சுற்றிவளைப்புகளில் ஹெரோய்னுடன் மூவர் கைது

கொழும்பு, ஜன. 18

கொழும்பு உட்பட நாட்டின் முக்கிய பகுதிகளில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்புக்களில் ஹெரோய்ன் போதைப்பொருளை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சுற்றிவளைப்பு நடத்தப்பட்டது. முகத்துவாரம், வெலிகடை மற்றும் பதுளை கிய இடங்களில் அவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் பெண்.

முகத்துவாரம் காளி கோவிலுக்கு அண்மையில் 7கிராம் 960 மில்லிகிராம், வெலிகடை அருநோதைய மாவத்தை பகுதியில் 4 கிராம் 100 மில்லிகிராம், பதுளையில் 2 கிராம் 80 மில்லிகிராம் ஹெரோய்ன் பொதைப்பொருள் மீட்கப்பட்டது. என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(த-71)

## பொறுப்புக்கூறல்...

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

நீதி வழங்கல் தொடர்பான வாக்குறுதிகளை நிறைவேற்றும் கடப்பாடு அரசியல் நெருக்கடியினால் வலுவிழந்துள்ள நிலையில் நீண்டகாலமாக துன்பங்களை அனுபவித்துவரும் மக்கள் தொடர்பான தமது கடப்பாடுகளை விரைந்து நிறைவேற்றுவது தொடர்பில் இலங்கையின் நட்புறவு நாடுகள் மற்றும் அமைப்புக்கள் இலங்கை அரசுக்கு அழுத்தம் வழங்க வேண்டும் - என்றுள்ளது. (ம)

## தனது...

களை விசாரிப்பதற்காகத் தானே ஆணைக்குழுவை அமைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி முதல் 2018ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி வரை நாட்டில் இடம்பெற்றன என்று கூறப்படும் மோசடிகள் குறித்து விசாரிக்க இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. அரச தலைவர் மைத்திரியின் உத்தரவின் பிரகாரம் இந்த ஆணைக்குழு நேற்று நியமிக்கப்பட்டது என்று அரச தலைவரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த ஆணைக்குழுவுக்குத் தலைவராக ஓய்வுபெற்ற நீதியரசர் உபாலி அபேரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். அத்தோடு சரோஜினி வீரவர்தன, எல்.ஆர்.டி.சில்வா மற்றும் கே.ஏ.பிரேமதிலக, விஜே அமரசிங்க ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த அரசுகளில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பாக ஆராய அரச தலைவரால் பல ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும் கூட்டு அரசிலும் ஊழல் மோசடிகள் இடம்பெற்றன என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இந்தப் பின்னணியில் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## திறைசேரிக்கு...

நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த ஆண்டுக்காகத் திறைசேரிக்குக் கிடைக்க வேண்டிய பன்னாட்டு நிதி உரிய நேரத்தில் கிடைக்காத காரணத்தினாலேயே இந்த ஆண்டுக்கான அரச செலவீனங்களுக்காக மத்திய வங்கியிடமிருந்து இந்த நிதி பெறப்பட்டுள்ளது என்றும் நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கடந்த கால அரசியல் நெருக்கடிகள் காரணமாக இலங்கைக்கு கிடைக்க வேண்டிய பெருந்தொகையான நிதி கிடைக்காது போயுள்ளதாகவும், இதனாலேயே கடந்த ஆண்டு இறுதியில் வரவு - செலவு திட்டத்தையும் தயாரிக்க முடியாது போனது என்றும் பன்னாட்டுக் கடன் உதவிகள் கிடைக்கப் பெற்றவுடன், மத்திய வங்கிக்கு இந்தக் கடன் தொகை திருப்பிச் செலுத்தப்படும் என்றும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம)

## ஐ.நா.மனித...

நேற்று அவர் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போது, ஜெனிவா வாக்குறுதிகள் தொடர்பான விவகாரம் தொடர்பில் மார்க் பீல்ட் அழுத்தம் கொடுத்துள்ளார்.

'இலங்கை நாடாளுமன்றின் சபாநாயகர் கரு ஜெயசூரியவை லண்டனில் இன்று (நேற்று) வரவேற்றேன். இலங்கையின் அண்மைய அரசியல் நிலமைகள் தொடர்பாக நாங்கள் பயனுள்ள கலந்துரையாடலை நடத்தினோம். ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30/1 மற்றும் 34/1 தீர்மானங்கள் தொடர்பான வாக்குறுதிகளை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தினேன்' என்று மார்க் பீல்ட் தனது கீச்சகத்தில் குறிப்பிட்டுள்ளார். பிரிட்டனுக்கான இலங்கையின் தூதுவர் மனிசா குணசேகரவும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தார். (ம)

## அரசதலைவர்...

துக்குள் உச்சக்கட்ட மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. கோத்தபாய ராஜபக்ச மற்றும் சமல் ராஜபக்ச ஆகியோர் தேர்தலில் போட்டியிடத் தாம் தயார் என்று ஏற்கனவே தெரிவித்துள்ளனர். இதனால் பசிலின் முடிவு எவ்வாறு இருக்கும் என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவியது. இந்த நிலையில் அடுத்த அரச தலைவர் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு உயர்நீதிமன்றத்தில் இடம்பெறும் வழக்கு ஒன்றுக்காக வருகைதந்த போது ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார் அவர்.

எனது முதல் முயற்சி மாகாண சபைத் தேர்தல் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காகவே காணப்படுகின்றது. மூன்று மாகாண சபைகளின் ஆட்சிக்காலம் நிறைவடைந்து ஒரு வருடத்தைத் தாண்டியுள்ளது. இந்த நிலையில், தேர்தலை நடத்தாமல் இருப்பது ஜனநாயகத்துக்கு முரணான செயற்பாடாகும் என்று பசில் மேலும் தெரிவித்தார்.

(ம)

## 300 மில்லியன்...

கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. தனது கடன் தொகையில் 5.9 பில்லியன் டொலரை இந்த ஆண்டு திருப்பிச் செலுத்த வேண்டிய நிலையில் இலங்கை உள்ளது. இதில், 2.6 பில்லியன் டொலர் வரும் மார்ச் மாதத்துக்குள் திரும்பிச் செலுத்த வேண்டியுள்ளது. இதில், 1 பில்லியன் டொலர் மாத்திரம், திரும்பிச் செலுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், சீன வங்கி இலங்கைக்கு 300 மில்லியன் டொலர் கடனை வழங்க முன்வந்துள்ளது. அதேவேளை, சீன வங்கி வழங்க முன்வந்துள்ள கடனுக்கு மேலதிகமாக 700 மில்லியன் டொலர் கடனை பெறுவதற்கு, இலங்கை அரசு முயற்சிகளை முன்னெடுத்து வருவதாக பதில் நிதியமைச்சர் எரான் விக்ரமரட்ன தெரிவித்துள்ளார். (ம)

## குடியுரிமை...

என்று தெரிவித்தார் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச.

கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் டீ.ஏ.ராஜபக்ச நினைவு அருங்காட்சியகத்தை அமைக்க அரச நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அது தொடர்பான விசாரணைக்கு நேற்று வியாழக்கிழமை மேல் நீதிமன்றத்தில் கோத்தபாய ராஜபக்ச முன்னிலையாகியிருந்தார். அதன் பின்னர் செய்தியாளர்கள், அவரிடம் அமெரிக்கக் குடியுரிமை தொடர்பாகக் கேள்வியெழுப்பினர். அதற்கு பதிலளித்தபோதே கோத்தபாய இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, "குடியுரிமை என்பது எனது தனிப்பட்ட விடயம். அதனை வைத்துக்கொள்ளவும் முடியும், நீக்கிக் கொள்ளவும் முடியும். அதனால் யாருக்கும் பிரச்சினையில்லை. ஒரு மனிதனைக் கட்டிவைக்க முடியாதுதானே?. ஜனநாயகத்தின் உயரிய நிலையில் இருப்பதாக அமெரிக்கா கூறுகிறது. அவ்வாறு கூறுபவர்கள் ஒரு மனிதனின் அடிப்படை உரிமையைக் கட்டிவைக்க மாட்டார்கள்" - என்றார்.

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச களமிறக்கப்படலாம் என்ற கருத்துக்கள் அண்மைக் காலமாக வெளிவந்தவண்ணமுள்ளன. சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேராவும் இதனைத் தெரிவித்திருந்தார். ஆனால், இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றால் அவர்களது நியமனங்கள் செல்லுபடியாகாது. கோத்தபாய அமெரிக்கக் குடியுரிமை பெற்றவர் என்ற ரீதியில், அவரது அமெரிக்க குடியுரிமையைக் கைவிட்டால் மாத்திரமே தேர்தலில் போட்டியிடலாம் என ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிட்டு வருகின்றது. இத்தகையதொரு பின்னணியிலேயே கோத்தா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன - தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைக்கப்பட்ட கூட்டு அரசில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற கீதா குமாரசிங்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமை, இரட்டைக் குடியுரிமை காரணமாக பறிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இலங்கை...

இலங்கை கிரிக்கெட் சபையின் தேர்தல் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி நடைபெறும் என்று ஹரின் பெர்னான்டோ ஏற்கனவே அறிவித்திருந்தார். இந்த நிலையில் இந்தத் தேர்தல் சுமார் இரண்டு வாரங்களுக்குப் பிற்போடப்பட்டுள்ளது. இதன்படி பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று விளையாட்டுத்துறை அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம)

## சவேந்திர...

பிரதானியாக நியமிக்கப்பட்டுள்ளமை கவலையை ஏற்படுத்துகிறது. இது அமெரிக்கா - இலங்கை இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும். போர்க்குற்றவாளி என்று ஐ.நா நம்புகின்ற ஒருவரை, படைகளின் பிரதானியாக நியமித்துள்ள நிலையில், போர்க்குற்றவாளிகள் பொறுப்புக்கூற வைப்பதில் உங்களின் நேர்மை எப்படி நிரூபிக்கப்படும்" என்றும் எலியட் கேள்வி எழுப்பியுள்ளார்.

(ம)

## மீண்டும்...

யின் பிரதித் தலைவரும் வீடமைப்பு மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"சர்வாதிகாரப் போக்குடைய ராஜபக்ச அணியினர் மீண்டும் ஆட்சிப்பீடம் ஏற நாம் ஒருபோதும் இடமளியோம். அவர்களின் திட்டங்களை முளையிலேயே கிள்ளிவிடுவோம். அதிகார வெறி பிடித்தவர்கள் பதவி ஆசை பிடித்தவர்கள் வெட்கம் இன்றி ஜனநாயகத் தீர்ப்புக்கு முரணாக குறுக்கு வழியில் திருட்டுத்தனமாக ஆட்சியைப் பிடிக்க முயல்வது வழமை. அவர்களுக்கு தோல்வி என்பது சகஜமாகிவிடும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த ஆட்சி, தடைகளைத் தகர்த்தெறிந்து தொடரும். எமது ஆட்சியை எவரும் இனிமேல் கவிழ்க்க முடியாது. நாடாளுமன்றத் தேர்தலோ அரச தலைவர் தேர்தலோ எந்தத் தேர்தலையும் அரசமைப்பு விதிமுறைகளுக்கமைய எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கின்றோம். அனைத்துத் தேர்தல்களிலும் நாமே வெற்றிவாகை சூடுவோம். நாட்டு மக்கள் உண்மை நிலையைப் புரிந்துவிட்டார்கள். அவர்கள் எமது பக்கமே நிற்கின்றார்கள்.

'ஒக்டோபர் 26 அரசியல் சூழ்ச்சி' போன்று மீண்டும் ஒரு அரசியல் சூழ்ச்சி அரங்கேறினால் நாம் மட்டுமல்ல நாட்டு மக்களே அணிதிரண்டு முறியடிப்பார்கள். ஒக்டோபர் 26 அரசியல் சூழ்ச்சியை முறியடித்ததில் நாட்டு மக்களுக்கும் பெரும் பங்கு உண்டு - என்றார். (22)

## மகாநாயக்க...

அவர்களின் இந்த அறிவுரையை ரணில் அரசு கேட்க வேண்டும். அதற்கேற்ற மாதிரி இந்த அரசு நடக்க வேண்டும்.' இவ்வாறு மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

"நாட்டில் குருதி ஆறு ஓடக் காரணமாக இருந்த பயங்கரவாதிகளுக்கு கடந்த 2009ஆம் ஆண்டு மகிந்த அரசு முடிவு காட்டியது. எனினும், புலம்பெயர் தேசங்களில் பயங்கரவாதிகளின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. அவர்களின் நிகழ்ச்சி நிரலுக்கமைய புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிகளில் சம்பந்தன் தலைமையிலான குழுவினரும், ரணில் தரப்பினரும் ஈடுபட்டுள்ளனர். புதிய அரசமைப்பின் ஊடாக இலங்கையில் பயங்கரவாதிகள் மீண்டும் புத்துயிர் பெறுவதற்கு நாங்கள் இடமளிக்க மாட்டோம். நாட்டைப் பல துண்டுகளாகப் பிரிக்கும் புதிய அரசமைப்பு எமக்குத் தேவையில்லை. இது நிறைவேற நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்" - என்றார். (ம-22)

## ராஜபக்ச...

என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச நேற்றுத் தெரிவித்தார். "2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் சீரழிந்த இந்த நாட்டை ராஜபக்ச குடும்பம் மீண்டும் கட்டியெழுப்பும்" எனவும் அவர் கூறியுள்ளார்.

சிங்கள ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் நாமல் மேலும் தெரிவித்ததாவது:

"ராஜபக்ச குடும்பம் ஒருபோதும் நாட்டையும், 'போர் வீரர்களான' இராணுவத்தினரையும் பன்னாட்டுச் சமூகத்துக்குக் காட்டிக் கொடுக்காது. நாட்டிலுள்ள அனைத்து இன மக்களும் நிம்மதியுடன் சுதந்திரமாகவும் வாழ வேண்டும் என்பதே ராஜபக்ச குடும்பத்தின் நோக்கம். ராஜபக்ச குடும்பத்தை ஊழல் பேர்வழிகள், மோசடியாளர்கள் என்று பொய்யுரைப்பவர்கள் தாங்கள் செய்த ஊழல், மோசடிகளை மறந்துவிடக்கூடாது" - என்றார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரச தலைவருக்கான வேட்பாளர் ராஜபக்சவின் குடும்பத்திலிருந்தே தெரிவுசெய்யப்படுவார். என்று நாடாளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ச அண்மையில் தெரிவித்திருந்தார். இதைத் தொடர்ந்து நாமல் ராஜபக்சவும் அதே போன்றதொரு கருத்தைக் குறிப்பிட்டுள்ளார். (ம-22)

## ஐ.எஸ்.ஐ.எஸ்...

அம்பாறை, ஜன. 18

அக்கரைப்பற்று மாநகரசபை பிரதி முதல்வர் மொகமட் கபூர் அஸ்மி, பயங்கரவாதத் தடுப்புப் பிரிவால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார். ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுதக் குழுவுடன் தொடர்பு என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டார் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. தீவிரவாதக் குழுக்களுடன் அவருக்குத் தொடர்புள்ளது என்று பயங்கரவாத தடுப்புப் பிரிவினர்களுக்கு கிடைக்கப்பட்ட இரகசிய முறைப்பாட்டினையடுத்து நீதிமன்ற பிடியாணைக்கு அமைவாக பயங்கரவாத தடுப்பு விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறு அவருக்கு ஏற்கனவே உத்தரவிடப்பட்டிருந்தது. எனினும் அவர் முன்னிலையாகவில்லை. இதையடுத்தே அவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார். மாலை அவர் விடுவிக்கப்பட்டார். (ம)

# பொன்னாலைச் சந்தியில் கட்டி முடிக்காத வீடு ஒன்றைப் பறித்தது பிரதேச செயலகம்

## மேலும் பல வீடுகளைப் பறிக்கவும் திட்டம்

**யாழ்ப்பணம், ஜன.18**

**பொன்னாலைச் சந்தி மூளாயில் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தில் இதுவரை வீடுகளைக் கட்டி முடிக்காத பயனாளிகளின் வீடுகளைப் பறிமுதல் செய்ய சங்கானைப் பிரதேச செயலகம் முடிவு செய்துள்ளது. இதுவரை வீடு கட்டி முடிக்காத பயனாளி ஒருவருடைய வீடு பறிமுதல் செய்யப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.**

பொன்னாலை, மூளாய் குடியேற்றத்திட்டம் 1980 அண்டுகளில் 65 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. 1980ஆம் ஆண்டு காலப்படுகிதியில் இருந்து 1990ஆம் ஆண்டு வரை அந்த காணிகளிலேயே மக்கள் வாழ்ந்து வந்தனர். 1990ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இடம்பெற்ற போர்ச்சூழல் காரணமாக அங்கிருந்த மக்களும் இடம்பெயர்ந்து சென்றனர். அவர்களது வீடுகள் உடைக்கப்பட்டன. பின்னர் சமாதான காலத்தின் போது மீண்டும் அந்தந்தக் காணி உரிமையாளர்களுக்கு அரசால் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டன.

அதன் பின்னர் ஏற்பட்ட இறுதிக்கட்ட போரினாலும், இராணுவ ஆக்கிரமிப்பாலும் அங்கு மக்கள் வாழ முடியாது மீண்டும் இடம்பெயர்ந்தனர். கடந்த பல வருடங்களாக அவர்கள் திக்குத் திக்காகச் சென்று குடியமர்ந்தனர். கடந்த 2017ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அந்த காணிகளுக்கான வீட்டுத்திட்டங்கள் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வழங்கப்பட்டன. சொந்த வீடுகள் இன்றி இருக்கும் காணிக்குரியவர்கள் மற்றும், ஏனையவர்களுக்கும் வீடுகள் வழங்கப்பட்டன. இரண்டு வருடங்கள் ஆகின்ற போதும் கட்டப்பட்ட வீடுகள் மக்களிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படவில்லை.

இந்த நிலையிலேயே வீடுகளைக் கட்டி முடிக்காத பயனாளிகளின் வீடுகளைப் பறிமுதல் செய்வதற்கு பிரதேச செயலகம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான கடிதங்கள் கட்டிமுடிக்கப்படாத, கட்டப்பட்ட வீடுகளில் குடியமராத பயனாளிகளுக்கு பிரதேச செயலகத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக சங்கானைப் பிரதேச செயலர் பி.பிறேமினியிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது; " வீடுகள் வழங்கப்பட்டு நீண்ட காலமாகியும் பல வீடுகள் இதுவரை முழுமைப் படுத்தப்படவில்லை. முழுமைப்படுத்தாத வீடுகளின் பயனாளிகளுக்கு ஏற்கனவே கால அவகாசங்கள் வழங்கப்பட்டுள்ளன. அப்படிப்பட்டவர்களுக்கு மீண்டும் காலஅவகாசத்தை வழங்கி அதன் பின்னரும் வீடுகள் முடிவுறுத்தப்படாது விட்டால் அந்த வீடுகளைப் பறிமுதல் செய்ய முடிவ் செய்யப்பட்டுள்ளது. வீடுகள் அற்ற பலர் பிரதேசத்தில் உள்ளனர். அவர்களுக்கு அந்த வீடுகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள் ளது. வீட்டுத் திட்டத்தில் குடியமராத குடும்பங்களுக்கும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. ஒருவருடைய வீடு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அவருக்கு ஏற்கனவே பல முறை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அந்த வீட்டில் பல வேலைகள் இதுவரை முடிவுறுத்தப்படவில்லை" -என்றார். (21)



## ஒலிபெருக்கி சாதனங்கள் வழங்கல்

மருதங்கேணி,ஜன.18

மருதங்கேணி வடக்கு கலைச்சுடர் கலாமன்றத்துக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கிச் சாதனங்கள் வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தனால் நேற்றுமுன்தினம் வழங்கிவைக்கப்பட்டன. நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச சபைத் தவிசாளர் ச.அரியகுமார் ,பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர் (ஐ-160)

## வற்றாப்பளை கண்ணகைக்கு சங்காபிசேகம்

வடமராட்சி,ஜன.18

வடமராட்சி புலோலி காந்தியூர் வற்றாப்பளை கன்னகை ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த10 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. 10 ஆவது நாளான நாளை சனிக்கிழமை காலை 8 மணியளவில் 1008 சங்காபிசேகமும் சிறப்பு பூசைகளும் இடம்பெற்று அன்னதானம் வழங்கப்படும். மாலை சிறப்பு சொற்பொழிவும் நடைபெறும் என்று அறிவித்துள்ளனர். (ஐ-173)

## பெருந்திருவிழா

கொடிகாமம்,ஜன.18

காரைநகர் பயிரிக்கூடல் அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இன்று வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும்,நாளை சப்பறத் திருவிழாவும், நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் நடைபெறும். தினமும் பகல்த் திருவிழா காலை 8.30 தொடக்கம் 12 மணிவரையும்,இரவுத்திருவிழா 6 மணி தொடக்கம் 9 மணி வரை நடைபெறும் என்று ஆலயப் பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ-159)

## ஆண்டு நிறைவும் நூல்நிலையத் திறப்பும்

யாழ்ப்பாணம்,ஜன.18

இணுவில் அறிவாலயத்தின் 14 ஆம் ஆண்டு நிறைவும், மண்டபம் பெயர்ப்பலகைத்திரை நீக்கமும், அறிவாலய நூல்நிலையத்தின் திறப்பு ஆகிய நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் அறிவாலயத்தின் தலைவர் செ.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்துகொண்டு நூல்நிலையத்தைத்திறந்து வைத்தார்.

சிறப்பு விருந்தினர்ாக வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், மதிப்புறுவிருந்தினர்களாக கலாநிதி ஆறு.திருமுருகன்,யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துணைவேந்தர் பேராசிரியர். விக்கினேஸ்வரன், பேராசிரியர் தேவராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இணுவில்கந்தசாமி ஆலயத்திலிருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்ட விருந்தினர்கள் மற்றும் மூத்தோர்கள் நிகழ்வில் பொன்னாடை போர்த்திமதிப்பளிக்கப்பட்டனர். நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் நிதியொதுக்கீட்டின் கீழ் அறிவாலய நூல்நிலையம் சீரமைக்கப்பட்டது. (ஐ)

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம்,ஜன.18



வறிய நிலையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. ஆழியவளை சி.சி.ரி எம் மகா வித்தியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிமை 10 மணியளவில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் உடுத்துறை மகா வித்தியாலயம் மற்றும் யாழ்பாணம் ஆழியவளை சி.சி.ரி எம் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் கல்விகற்கும் 40 மாணவர்களுக்கும், பாதிக்கப்பட்ட மாணவர்கள் 7 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியின் கட்டளைக்கு அமைய 55 ஆவதுபடை தளபதியின் வழிகாட்டலின் கீழ் 553 ஆவது படை தளபதியின் முழு ஒத்துளைப்புடன் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ)



*சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில் கடற்கரையோரத்தில் மழை காலங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்படும் 68 குடும்பங்களின் காணிகளுக்கு பிரதேச செயலகத்தினால் மணல் பறிக்கப்பட்டு வருகின்றது. (ஐ– 9)*

## வர்த்தகருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி, ஜன. 18

வர்த்தக நிலையத்தில் அசிட் ஊற்றினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வர்த்தகரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை உத்தரவிடப்பட்டது. கைதடிப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை வர்த்தக நிலையத்தினுள் புகுந்து வர்த்தகரைத் தாக்கி வியாபாரப் பணத்தைக் கொள்ளையிட முயன்றவர் மீது வர்த்தகர் அசீட்டை ஊற்றியுள்ளார். இதனால் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட திருடனுக்கு எரிகாயமேற்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அசீட் ஊற்றியதில் வர்த்தகருக்கும் காயம் ஏற்பட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். இந்நிலையில் வர்த்தகரைச் சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்திய போது எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஐ-9)


## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம்,ஜன 18

அழகுக்கலை நிபுணர் சங்கத்தின் 2019ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு அறிவித்துள்ளது. யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்துக்கு அருகாமையில் உள்ள மாவட்ட முகாமைத்துவ திறன் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் அழகுக்கலை நிபுணர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர். (ஐ-7)





## கால்கோள் விழாக்கள்



கொடிகாமம். ஜன. 18
கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் தரம் 6 இல் புதிய மாணவர்களை இணைப்பதற்கான கால்கோள் விழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியின் பொன் சபாபதி மண்டபத்தில் தரம் 6, 7 வகுப்புக்களின் பகுதித் தலைவர் திருமதி நா. கஜேந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயத்தின் அதிபர் பா. கணேசமூர்த்தி, பிரதி அதிபர் திருமதி வ. சிம்மேந்திரன் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.
மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றதுடன், புகுமுக மாணவர்கள் மாலை அணிவித்து மதிப்பளிக்கப்பட்டனர். (ஐ-159)



சாவகச்சேரி. ஜன. 18
சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் கால்கோள் விழா கல்லூரி மண்டபத்தில் நேற்று முற்பகல் 9 மணியளவில் அதிபர் திருமதி ல. முகுந்தன் தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராகத் தென்மராட்சிக் கல்வி வலய அழகியற் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி விஜிதா சுனில் ஆரியரத்ன, சிறப்பு விருந்தினர்களாக தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் அ. கெங்காதரம், ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி இ. ஜீவேந்திரா, சாவகச்சேரிகத்தோலிக்கப் பங்குத்தந்தை அருட்பணி றெக்ஸ் சௌந்தரா ஆகியோர் கலந்து கொண்டனர்.
கல்லூரியில் தரம் ஒன்று வகுப்பில் புதிதாக இணைந்த 55 மாணவர்களுக்கு தேசிய சேமிப்பு வங்கியினர் பரிசுப் பொருள்களை வழங்கினர். (ஐ-9)



சாவகச்சேரி ஜன. 18
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் கால்கோள் விழா கல்லூரி மண்டபத்தில் நேற்றுக் காலை அதிபர் செ. பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கல்லூரியில் இயங்கும் பாடசாலை பற்சிகிச்சையாளர் திருமதி சு. துளசி கலந்து கொண்டார். ஆசியுரைகளை சிவசிறி வீ. பாலகுமாரக்குருக்கள், சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை போதகர் அருட்பணி என். ரி. ஜெபநேசன் ஆகியோர் நிகழ்த்தினர்.
பாடசாலைச்சமூகத்தினரால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஐ-9)

### பச்சிலைப்பள்ளி மேற்கில்

# வெடிபொருள்கள் அகற்றப்பட்ட 225 ஏக்கர் விரைவில் விடுவிப்பு

**பளை ஜன. 18**
**பச்சிலைப்பள்ளி மேற்குப் பகுதியில் வெடிப் பொருள்கள் அகற்றப்பட்ட அம்பளாவளை, இந்திராபுரம் மற்றும் இத்தாவில் ஆகிய கிராமங்களின் ஒரு பகுதியில் வெடிப் பொருள்கள் அகற்றும் பிரிவினரால் அகற்றப்பட்ட 225 ஏக்கர் நிலப் பரப்பு விடுவிக்கப்படவுள்ளது.**

இப் பகுதிகள் விரைவில் விடுவிக்கப்படவுள்ளதால் அங்கு மீளக்குடியமரவுள்ள குடும்பங்கள் பிரதேச செயலகத்தில் பதிவினை மேற்கொள்ளுமாறு பிரதேசசெயலர் திருமதி ஜெ. பரமோதயன் அறிவித்துள்ளார்.
முகமாலை கிராமத்தின் வடக்குப் புறத்தில் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட 200 மீற்றர் தூரத்திலிருந்து மேலும் 172 மீற்றர் தூரம் அம்பளாவளை பகுதியின் ஒரு பகுதியும், இத்தாவில் கிராமத்தில் இத்தாவில் வீதியின் மேற்குப் புறத்தில் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட 200 மீற்றர் தூரத்திலிருந்து மேலும் 883 மீற்றர் தூரமும், இந்திராபுரம் கிராமத்தில் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட 200 மீற்றர் தூரத்திலிருந்து மேலும் 300 மீற்றர் தூரமும் விடுவிக்கப்படவுள்ளன.
அதற்கான வேலி அடைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அவை முடிவடைந்ததும் மக்கள் மீளக் குடியமர்த்தப்படுவர் எனவும் தெரிவித்தார்.
இக்கிராமங்களைச்சேர்ந்த 300 க்கு மேற்பட்ட குடும்பங்கள் கடந்த 2000 ஆம் ஆண்டு போர் காரணமாக இடம்பெயர்ந்து வன்னி மற்றும் யாழ்ப்பாண மாவட்ட பிரதேசங்களிலும் தங்கியுள்ளனர். கடந்த 2012 ஆம் ஆண்டு தொடருந்து வீதி மற்றும் ஏ9 முதன்மைச் வீதி சீரமைக்கும் பணிகளுக்காக இரண்டு கிலோ மீற்றர் நீளமும் 500 மீற்றர் அகலமும் கொண்ட பகுதிகளில் வெடிப் பொருள்கள் அகற்றப்பட்டன.
பின்னர் பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க இத்தாவில் தொடக்கம் முகமாலை வரையான பகுதிகளில் இந்திராபுரம் கிராமத்தில் வெடிப்பொருள்கள் அகற்றப்பட்ட 200 மீற்றர் தூரத்தில் 150 மீற்றர் தூரம் விடுவிக்கப்பட்டு கடந்த 2015 மற்றும் 2016 டிசம்பர் மாதம் 12 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டன. (ஐ-9)

## தாதியை அச்சுறுத்தி அடாவடிபுரிந்த நோயாளர்கள் இருவர் தப்பியோட்டம்

தென்மராட்சி ஜன. 18
மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இரு நோயாளர்கள் பெண் தாதிய அலுவலரை அச்சுறுத்தித் தாக்க முற்பட்டுள்ளனர். அதனைத் தடுக்கச் சென்ற சக நோயாளர்களையும் பணியாளர்களையும் அச்சுறுத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளனர். இந்தச்சம்பவம் யாழ்ப்பாணம் மந்திகை மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது என்று விடுதியில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்கள் தெரிவித்தனர்.
காலில் காயங்களுடன் சிகிச்சை பெறுவதற்காக விடுதிக்குள் இருவர் வந்தனர். அவ்வேளையில் வேறு நோயாளிக்கு தாதிய அலுவலரும் பணியாளர்களும் சிகிச்சை வழங்கிக் கொண்டிருந்தனர். முதலில் தமக்கு சிகிச்சை வழங்குமாறு தாதிய அலுவலரை அச்சுறுத்தியதுடன் பெண் தாதிய அலுவலரைத் தாக்க முற்பட்டுள்ளனர்.
அங்கு நின்ற பணியாளர்களும் சக நோயாளர்களும் தடுத்ததால் விடுதி கதவின் கண்ணாடிகளை உடைத்துவிட்டு வெளியே ஓடித் தப்பிச் சென்றுள்ளனர்.
இந்த விடயம் தொடர்பாக மருத்துவமனை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது சம்பவத்தை உறுதிப்படுத்தியதுடன் சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் தெரிவித்தனர். (ஐ-9)

## பணமோசடியில் ஈடுபட்டவர் 3 வருடங்களின் பின்னர் கைது

சாவகச்சேரி. ஜன. 18
கூரைவேலை செய்து தருவதாகக்கூறி பணத்தைப்பெற்றுச்சென்று மூன்று வருடங்களாக தலைமறைவாக இருந்த நபரை சாவகச்சேரி நீதிமன்றம் எச்சரிக்கை செய்ததுடன் வீட்டு உரிமையாளரிடம் பெற்றுக்கொண்ட பணத்தையும் மீள ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டது.
கடந்த 2016 ஆம் ஆண்டு மிருசுவில் உசன் பகுதியில் வீடொன்றில் கூரை வேலை செய்வதற்காக ஒரு தொகைப்பணத்தினை தருமாறு கூறியதால் வீட்டு உரிமையாளரும் அவர் கேட்ட தொகையினைக் கையளித்துள்ளார்.
ஆறு மாதங்களாக இந்த நபர் வேலைக்கு வராததால் வீட்டு உரிமையாளரால் கொடிகாமம் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் இந்த நபரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியபோது வேலையை முடித்துக் கொடுக்குமாறு அவருக்கு உத்தரவிட்டுப் பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. அதன்பின்னர் வேலை செய்து கொடுக்காமலும் நீதிமன்றுக்கு வராமலும் தலைமறைவாகியுள்ளார் இதனால் நீதிமன்றி னால் பிடியாணை பிறப்பிக்கப் பட்டு பொலிஸார் தேடிவந்துள்ளனர். மூன்று வருடங்களின் பின்னர் கைது செய்யப்பட்ட இந்த நபரை நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்தியபோது கடுமையாக எச்சரிக்கை செய்து வீட்டுக்காரரிடம் பெற்ற தொகையினை உடனடியாகக் கையளிக்க வேண்டும் என எச்சரிக்கை செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். (ஐ-9)

## போர் காலத்தில் அழிவடைந்த பெறுபேறுகள் மீளப்பெறப்பட்டன

பளை ஜன. 18
பளை இத்தாவில் வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலையில் போர் காலத்தில் அழிவடைந்த பரீட்சைப் பெறுபேறுகள் அதிபரின் முயற்சியினால் கொழும்பிலிருந்து எடுத்த வரப்பட்டுள்ளன. 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற போரினால் மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர் பின்னர் 2002 தொடக்கம் 2006 ஆம் ஆண்டு வரை பாடசாலை இயங்கி அக்காலப் பகுதியிலும் ஏற்பட்ட இடப்பெயர்வின்போது அனைத்து ஆவணங்களும் அழிவடைந்தன. பாடசாலைக் கட்டடங்களும் தரைமட்டமாகின. அவற்றுள் ஜி. சி. ஈ சாதாரண தரப் பரீட்சைப் பெறுபெறுகளும் அடங்கியிருந்தன.
இடப்பெயர்வினால் மாணவர்கள் தமது பரீட்சைச்சுட்டெண்ணையும் தொலைத்ததால் வேலைவாய்ப்புகளுக்கு பரீட்சை பெறுபேற்றினைப் பாடசாலையில் பெறமுடியாதநிலை ஏற்பட்டது. பரீட்சைப் பெறுபேறுகளின் பிரதிகளைப் பெற அதிபர் நீண்ட நாள்களாக மேற்கொண்ட முயற்சியின் பயனாக கடந்தவாரம் கொழும்பு பரீட்சைகள் திணைக்களத்துக்குச் சென்று 1993 தொடக்கம் 2006 ஆம் ஆண்டுவரையான 14 வருடங்களின் பரீட்சைப் பெறுபேறுகளை பெற்று வந்துள்ளார். இந்தக் காலப்பகுதியில் பரீட்சை எழுதிய மாணவர்கள் பெறுபேற்றுப்பிரதிகளை வந்துபெற்றுக்கொள்ளுமாறு அதிபர் க. சண்முகதாஸ் அறிவித்துள்ளார். (ஐ-9)

### ஐயப்ப பக்தர்கள் போல் உடையணிந்து பெண்ணைத் தாக்கி நகை அபகரிப்பு

சாவகச்சேரி ஜன. 18
ஐயப்ப பக்தர்கள் போல் கறுப்பு உடையணிந்த இருவர் உந்துருளியில் சென்ற பெண்ணைத் தாக்கி தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில்



வைக்கப்பட்டுள்ளார். இந்த திருட்டுச் சம்பவம் கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்றது.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது. நாவற்குழியில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்று வீடு திரும்பிய பெண்ணை ஏ 9 முதன்மை வீதியில் வைத்து உந்துருளியில் வந்த இருவர் பெண்ணைத் தள்ளி வீழ்த்திவிட்டு அவர் அணிந்திருந்த தங்கச்சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர்.
இதில் காயமடைந்த நிலையில் பெண் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது பொலிஸாருக்குக் கொடுத்த முறைப்பாட்டில் கறுப்புநிற புதிய உந்துருளியில் லெமனேட் செய்யப்பட்ட இலக்கத் தகடு காணப்பட்டதெனத் தெரிவித்திருந்தார். கைதடிப் பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் அதே உந்துருளியை மறித்து சோதனையிட்டு பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர். பொலிஸார் அங்கு சென்று இந்த நபரைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டனர்.
சந்தேகநபரை கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் ப. குகனேஸ்வரன் முன்னிலையில் முற்படுத்தியபோது எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு அன்றைய தினம் அடையாள அணிவகுப்பு நடத்தவும் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டார். (ஐ-9)



# போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணி

**தெல்லிப்பழை,ஜன.18**

**போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பிலான விழிப்புணர்வுப் பேரணி நேற்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணியளவில் தெல்லிப்பழைச் சந்தியில் இருந்து பிரதேச செயலர் காரியாலயம் வரை பேரணி இடம்பெற்றது.**

தெல்லிப்பழை பிரதேச மட்டத்திலான முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த விழிப்புணர்வுப் பேரணி இடம்பெற்றது.

இக் கவனவீர்ப்பு பேரணியில் தெல்லிப்பழை பிரதேச செயலகம் .பிரதேச சபை மற்றும் அயல்ப்பாடசாலைகள், சுகாதாரப் பணிமனை ஊழியர்கள் மற்றும் சமூக நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

போதைக்கு அடிமையாகாதே, மாணவர் சமுகமே கல்வியை சீரழிக்கும் போதைப்பொருளை விரட்டியடியுங்கள் என்ற சுலோகங்களை தாங்கியவாறு இப்பேரணியில் ஈடுபட்டனர். (ஐ-26)






*மறைந்த தியாகராசா மகேஸ்வரன்*

# மக்கள் மனதில் என்றும் நீங்கா இடம்பிடித்தவர்

அமுதகலா சுரபி செ.மோகனதாஸ் சுவாமிகள் தெரிவிப்பு

வடமராட்சி.ஜன.18

மறைந்த தியாகராசா மகேஸ்வரன் இந்து கலாசார அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் சமயம், மொழி, இனம் பிரதேசம் என்னும் எல்லைகள் கடந்து மக்கள் பணியே மகேசன் பணி என்னும் சீரிய நினைவோடு மக்கள் பணி ஆற்றியகாரணத்தினால் அவர் மக்கள் மனதில் இடம் பிடித்து வாழ்கின்றார். என்று சந்நிதியான் ஆச்சிரமப் பொறுப்பாளர் அமுதகலா சுரபி செ.மோகனதாஸ் சுவாமிகள் தெரிவித்தார்.

யாழ்ப்பாண, கொழும்பு மாவட்டங்களின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இந்துகலாசார அமைச்சருமான மறைந்த மகேஸ்வரனின் 10 ஆவது ஆண்டு நினைவு தினம் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் "போர்ச் சூழல் காரணமாக மக்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்த வேளையில் அவரது தீர்க்கமான, திடமான சேவையினால் நோயுற்றவர்களுக்கான மருந்துவகைகளையும், கோவில்களுக்கு விளக்கெரிக்க எண்ணையும் மற்றும் பல வேறு உதவிகளும் கிட்டின என்பதை மறந்துவிட்முடியாது. சந்நிதியான் ஆச்சிரமத்தோடு அவர் கொண்டிருந்த ஈடுபாடும் ஆதரவும் எக்காலமும் மறக்கமுடியாது.

தியாகராசா மகேஸ்வரன் மறைந்து பத்து ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் அன்னார் மக்களுக்கு செய்த உதவிகளும் அவரது நினைவுகளும் காலம் பூராகவும் நிலைத்திருக்கும்" - என்றார்.

மகேஸ்வரனின் நினைவாக வடமராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 5 ஆம் வகுப்பு தொடக்கம் உயர்தர வகுப்புவரை கல்வி பயிலும் வறுமைக்கோட்டு மாணவர்கள் 350 பேருக்கு இருகட்டங்களாக கற்றல் உபகரணங்கள் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டன.

நிகழ்வுகளில் கலந்து கொண்ட நல்லை ஆதினம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியார் சுவாமிகள் இளைப்பாரிய அதிபரும் ஆன்மீக சொற்பொழிவாளருமான ஆ.சிவநாதன் ஆகியோர் கற்றல் உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்கிவைத்தனர். (ஐ-173)

# தபால் கந்தோர் 4 ஆம் வீதி விரைவில் சீரமைக்கப்படும்

*மக்களிடம் உறுதியளித்தார் பிரதேச சபை உறுப்பினர்*

வலி.மேற்கு.ஜன.18


உரும்பிராய் தெற்கு பழைய தபால் கந்தோர் 4ஆம் ஒழுங்கை மீள்சீரமைப்புச் செய்ய வலி.கிழக்கு பிரதேச சபையூடாக வீதி சீரமைப்புத் திட்டம் முன்மொழியப்படும். இவ்வாறு வலி.கிழக்குப் பிரதேச சபை உறுப்பினரும் கோப்பாய் தேசோதய சபைத் தலைவருமான இ.மயில்வாகனம் மக்களிடம் உறுதியளித்தார்.

ஜெ-265 கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட உரும்பிராய் தெற்கு பழைய தபாற்கந்தோர் வீதி கடந்த காலங்களில் நெல்சிப் திட்டத்தில் முதலாவது வீதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்டது.

மேற்படி வீதியின் இருமருங்கிலும் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ள போதும் சீரமைப்பு இன்றி காணப்படுகின்றது.

சுமார் 310 மீற்றர் நீளமானதும் 12 அடி அகலம் கொண்டதுமான வீதியின் அவல நிலை குறித்து கடந்த காலங்களில் பிரதேச சபைத் தலைவர் -செயலர்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட போதும் இதுவரை முன்னுரிமைப்படுத்தப்படவில்லை.

இந்த நிலையிலேயே வலி.கிழக்குப் பிரதேச சபையின் உறுப்பினர் இ.மயில்வாகனம் மேற்படி வீதியின் நிலமைகளை நேரில் அவதானித்ததுடன் உடன் மீள்சீரமைப்புச் செய்து வழங்கத் தவிசாளர் தி.நிரோஷின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார். (ஐ-50)



# குடிதண்ணீர்க் குழாய் விசமிகளால் அழிப்பு

சாவகச்சேரி ஜன. 18

பொதுமக்களின் நலன்கருதி சனசமூக நிலையத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த குடிதண்ணீர்க் குழாய்த் திறப்பு விழாவுக்கு முதல்நாள் விசமிகளால் பிடுங்கி எறியப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையால் கல்வயல் பாரதி படிப்பகத்தில் அமைக்கப்பட்ட குடிதண்ணீர்க் குழாயே கடந்த 14 ஆம் திகதி இரவு பிடுங்கி எறியப்பட்டது. பொதுமக்களின் பயன்பாட்டுக்கென அமைக்கப்பட்ட குடிதண்ணீர்க் குழாயைச் சேதமாக்கியமை குறித்து அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர். (ஐ - 9)

# உண்ணிக் காய்ச்சலால் இரு பிள்ளைகளின் தாய் சாவு

யாழ்ப்பாணம் ஜன.18

உண்ணிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த செ.ஜெனனி (வயது-46) என்ற பெண்னே உயிரிழந்துள்ளார்.

கடந்த மாதம் 30ஆம் திகதி இரணைமடுவில் உள்ள உறவினரிடம் சென்ற திரும்பிய பெண்ணுக்கு அன்றைய தினமே காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. மறுநாள் அருகில் உள்ள தனியார் மருத்துவமனையில் தொடர் சிகிச்சை பெற்றுள்ளார். கடந்த ஏழாம் திகதி சிகிச்சை பெறச் சென்ற வேளையில் மயங்கி வீழ்ந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அங்கு பரிசோதனைகளை மேற்கொண்ட மருத்துவர்கள் உண்ணிக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளதென தெரிவித்து சிகிச்சை வழங்கியபோதிலும் சிகிச்சை பயனின்றி கடந்த 13 ஆம் திகதி உயிரிழந்துள்ளார். (ஐ-9)

*சடலத்தை எடுத்துச் செல்ல பேரம் பேசினர் என்று*

# மருத்துவமனைப்பணியாளர்கள் நால்வருக்கு கட்டாய விடுமுறை

*யாழ்.போதனா மருத்துவமனையில் சம்பவம்*

யாழ்ப்பாணம்.ஜன.18

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இருந்து இறந்தவர்களின் சடலத்தை வெளியே கொண்டு செல்வதற்கு வாகன உரிமையாளர்கள் மற்றும் பெட்டி விற்பனையாளர்களுடன் பேரம் பேசும் தொடர்பை பேணிய குற்றச் சாட்டில் நால்வருக்கு கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ளது

இது தொடர்பில் மருத்துவமனை நிர்வாகத்தினால் சுகாதார அமைச்சுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனையின் சடல அறைக்குக் கொண்டு செல்லப்படும் சடலங்களை உறவுகளிடம் ஒப்படைப்பதற்காக காத்திருக்கும் சந்தர்ப்பங்களில் இறந்தவர்களின் உறவினர்களிடம் மருத்துவமனையின் சில பணியாளர்கள் உடலைக் கொண்டு செல்வதற்கு குறைந்த விலையில் சவப்பெட்டியினை கொண்டு செல்வதற்குமான வாகன வசதியினையும் ஏற்படுத்தி தருவதாகக் கூறி தமக்கு இசைவான வர்த்தகர்களிடம் அனுப்பி வைத்து அதன் மூலம் தரகுப்பணம் பெற்று வந்துள்ளனர்.

மருத்துவமனை நிர்வாகம் இதனை ஆராய்ந்த சமயம் அச் செயலில் நால்வர் தொடர்ச்சியாக ஈடுபடுவது உறுதி செய்யப்பட்ட நிலையில் குறித்த நால்வரையும் கட்டாய ஓய்வில் அனுப்புமாறு மத்திய சுகாதார அமைச்சுக்குப் பரிந்துரைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தியிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது:

பாமர மக்களின் சேவையே மருத்துவமனையில் மிக முக்கியம் என்பதனால் முன்பும் இவர்கள் மருத்துவமனை நிர்வாகத்தால் எச்சரிக்கை செய்யப்பட்டனர். அதன் பின்னரும் இவ்வாறன செயற்பாடுகளில் ஈடுபடுவதாக கண்டறியப்பட்டதையடுத்து சுகாதார அமைச்சுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ-105)

# சிறுமிக்கு வன்கொடுமை 18 வயதுச் சிறுவன் கைது!

## மல்லாவியில் சம்பவம்

முல்லைத்தீவு, ஜன.18
**11 வயதுச் சிறுமி ஒருவரைப் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் 18 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மல்லாவிப் பொலிஸார் தெரிவித்தனர்.**

மல்லாவிப் பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வீதியில் சென்ற மாணவியைக் குளம் காண்பிப்பதாகத் தெரிவித்த சிறுவன் அருகிலுள்ள குளத்துக்கு அழைத்துச் சென்று அங்கு மாணவியைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தினார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீடு திரும்பிய சிறுமி பெற்றோரிடம் சம்பவத்தைத் தெரிவித்துள்ளார். அவர்கள் மல்லாவிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கினர்.

சிறுமி வழங்கிய தகவலின் அடிப்படையில் சிறுவன் நேற்று முன்தினம் இரவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் சிறுமி, மருத்துவ சோதனைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகள் நடைபெறுகின்றன என்றும், சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-21)



## மாணவர்களுக்கு புத்தகப் பைகள்

முல்லைத்தீவு, ஜன.18
முல்லைத்தீவு, முள்ளிவளை தமிழ் மகா வித்தியாலயத்தில் கற்கும் 23 மாணவர்களுக்குப் புத்தகப் பைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்றது.

செங்குந்தா பழைய மாணவர்கள் (லண்டன்-ஐரோப்பா) ஊடாக அமரர் க.கதிரவேலு என்பவரின் நினைவாக இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-222)



## விளையாட்டுக் கழகத்துக்கு உபகரணங்கள் கையளிப்பு

முல்லைத்தீவு, ஜன.18
புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் நிதியொதுக்கீட்டில் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. புதுக்குடியிருப்புப் பிரதேச உப தவிசாளர் க.ஜனமேஜயத் உபகரணங்களை விளையாட்டுக் கழகச் செயலாளரிடம் கையளித்துள்ளார். இந்த நிகழ்வு புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. (எ-ரி3)

## முல்லை. மாவட்டத்தில் 48 கிணறுகள் துப்புரவு

### படையினர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன.18
முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 48 கிணறுகள் படையினரால் துப்புரவாக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த டிசெம்பர் மாதம் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக கிணறுகளுக்குள் வெள்ள நீர் உட்புகுந்தது. அதனால் மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள படையினர் அங்குள்ள 48 கிணறுகளில் வெள்ள நீரை அகற்றி மக்கள் பாவனைக்குக் கையளித்துள்ளனர் என்று முல்லைத்தீவு மாவட்டப் படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஒட்டுசுட்டானில் 30 கிணறுகளும், புதுக்குடியிருப்பில் 18 கிணறுகளும் துப்புரவாக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி3)





## வவு. மருத்துவமனைக்கு நவீன உபகரணங்கள்

வவுனியா, ஜன.17
வவுனியா பொது மருத்துவமனையின் குழந்தைகள் அதி தீவிர சிகிச்சை பிரிவுக்கு 25 லட்சம் ரூபா பெறுமதியான நவீன உபகரணங்கள் அண்மையில் கைளிக்கப்பட்டுள்ளன.

பிரிட்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் தமிழர் மருத்துவ அறிஞர் நிறுவனத்தின் வேல்ஸ் கிளையால் இவை வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் வவுனியா பொதுமருத்துவமனையின் உதவி அத்தியட்சகர் மருத்து கலாநிதி செந்தூர் பதிராஜா, மருத்துவ நிபுணர் ஜெயபாலன், தமிழர் மருத்துவ அறிஞர் நிறுவன உறுப்பினரான விபுலேந்திரன், தாதிய பரிபாலகர் மாலா அலோசியஸ், விடுதி சகோதரி உருத்திராதேவி ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-110)

## மதுபான நிலையம் அமைந்தால் எதிர்ப்பை வெளிக்காட்டுவோம்

### ஓமந்தை கிராம அபிவிருத்தி சங்கத்தினர் தெரிவிப்பு

வவுனியா, ஜன.18
வவுனியா, ஓமந்தையில் மதுபான விற்பனை நிலையம் திறக்கப்பட்டால் கடுமையாக எதிர்ப்போம் என்று ஓமந்தை கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சங்கத்தின் பொருளாளர் ந.விஜயகுமார் தெரிவித்ததாவது:

ஓமந்தை அம்மாச்சி உணவகத்துக்கு அருகே மதுபான விற்பனை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதற்குப் பிரதேச மக்களும், வவுனியா பொது அமைப்புக்களும், மகளிர் அமைப்புக்களும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. அந்தப் பகுதியில் மதுபான விற்பனை நிலையம் அமைக்க வேண்டிய தேவை இல்லை. அதற்குக் கிராம அபிவிருத்திச் சங்கம் அனுமதிக்காது. அங்கு மதுபான நிலையம் அமைப்பதற்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவிப்போம் -என்றார். வவுனியா புதிய பேருந்து நிலையத்துக்கு முன்பாகவும் கடந்த இரு வாரங்களுக்கு முன் புதிதாக மதுபான நிலையம் ஒன்று திறக்கபட்டிருந்தது. அதற்குப் பிரதேச மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். (எ-110)

## முல்லை. மாவட்டத்தில் 663 கசிப்பு வழக்குகள்



முல்லைத்தீவு, ஜன.18
முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஆண்டு கசிப்பு உற்பத்தி தொடர்பில் 663 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்டப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவுமாவட்டத்தில் 2018 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 209 லீற்றர் கசிப்புப் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலேயே அதிகளவான கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. முல்லைத்தீவில் 73 வழக்குகளும், மாங்குளத்தில் 50 வழக்குகளும், புதுக்குடியிருப்பில் 268 வழக்குகளும், ஒட்டுசுட்டானில் 38 வழக்குகளும், முள்ளியவளையில் 112 வழக்குகளும், வெலிஓயாவில் 79 வழக்குகளும், மல்லாவியில் 43 வழக்குகளும் பதிவாகியுள்ளன என்று மாவட்டப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது. (எ-ரி3)

## பல்வேறு சம்பவங்களில் 8 பேர் காயம்

வவுனியா, ஜன.18
வவுனியாவில் கடந்த 13ஆம் திகதி நடந்த வெவ்வேறு சம்பவங்களில் ஒன்பது பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஓமந்தை, பாலமோட்டையில் மோட்டார் சைக்கிளும், ஈருருளியும் விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்தனர். ஏ9 வீதி, பன்றிக்கெய்தகுளத்தில் மோட்டார் சைக்கிளும், ஈருருளிளும் விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்தார்.

வவுனியா நகரப் பகுதியில் வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் விபத்துக்குள்ளாகினர். அதில் அவர்கள் சிறு காயங்களுக்கு உள்ளாகினர். வைரவப்புளியங்குளத்தில் ஈருருளி விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.


திரையரங்கொன்றில் திரைப்படம் பார்க்கச் சென்ற இளைஞர்களிடையே ஏற்பட்ட முரண்பாட்டில் இருவர் காயமடைந்தனர். சேமமடுவில் நடந்த கைகலப்பில் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளார். (எ-110)


## கஞ்சாவுடன் ஒருவர் கைது

கஞ்சாவை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கிளிநொச்சி மாவட்டப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்துள்ளார்.

இரணைமடுப் பிரதேசத்தில் கள் விற்பனை நிலையம் ஒன்றில் கஞ்சாப் பாவனை நடைபெறுகின்றது என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய எடுக்கப்பட்ட நடவடிக்கையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபரிடம் இருந்து 2 கிராம் 360 மில்லிக்கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என்றும், விசாரணைகளின் பின்னர் சந்தேநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது.(எ-6)





# வீதியை மூடியுள்ளதால் விவசாயத்துக்குப் பாதிப்பு

### கிளி. விவசாயிகள் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன.12
**வயல்களுக்குச் செல்லும் முதன்மை வீதி மூடப்பட்டுள்ளதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று கரடிப்போக்கு, பரந்தன் போன்ற பகுதிகளில் ஏ- 9 வீதிக்கு அருகாகப் பயிர்ச் செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகள் தெரிவித்தனர்.**

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் பெய்த மழையால் விவசாய நிலங்கள் அழிவடைந்துள்ளன. எஞ்சியுள்ளவற்றைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் தற்போது விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

கரடிப்போக்கு, பரந்தன் ஆகிய இடங்களில் விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகள் டி4ஏ வீதி மூடப்பட்டுள்ளதால் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று கூறுகின்றனர்.

ஏ-9 வீதிக்கு அருகே விவசாயம் செய்யும் தாம் பாதிக்கப்படுகின்றோம் என்றும், விவசாயத் திணைக்களத்தினர் அந்த வீதியை மூடித் தமது வயல் நிலங்களுக்கு நீர் பாய்ச்சுகின்றனர் என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

கடந்த ஓராண்டுக்கு மேலாக அந்த வீதி மூடப்பட்டுள்ளது என்றும், அது தொடர்பாகப் பல சந்தர்ப்பங்களில் பல தரப்புடன் கலந்துரையாடியபோதும் தீர்வு கிடைக்கவில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.


இது தொடர்பாகக் கிளிநொச்சி மாவட்ட விதைகள் உற்பத்திப் பிரதிப் பணிப்பாளரிடம் கேட்டபோது, "மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைவாக இந்த வீதி மூடப்பட்டுள்ளது என்றும், அந்தக் குழு பரிந்துரைத்தால் அதைத் திறந்துவிடத் தயராக உள்ளோம்" என்றும் தெரிவித்தார்.

அந்த வீதி ஊடாக மணல் கடத்தப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்தே அந்த வீதி மூடப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

நீர் வாய்க்காலில் அணைகள் போடப்பட்டு நீர் மறிக்கப்படுகின்றமை தொடர்பாகக் கேட்டபோது, "நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் அட்டவணை வழங்கப்பட்டு அதற்கேற்ப நீர் பெறப்படுகின்றது.

உயர்ந்த பிரதேசங்களுக்கு நீரைக் கொண்டு செல்வதற்காக அவ்வாறு அணைகள் போடப்படுகின்றன. விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இவை மேற்கொள்ளப்படுகின்றன" என்று தெரிவிக்கப்பட்டது. (எ-6)





## மாற்றுத் தேவையுடைய குழந்தைகளின் பொங்கல்

மன்னார், ஜன.17
மன்னார் மாவட்டத்தில் மாற்றுத் தேவை உடைய மாணவர்கள் பயிலும் மாடப் நிறுவனத்தின் பொங்கல் விழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. மன்னார் தமிழமுது நண்பர் வட்டம் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் மாற்றுவலுவுடைய 20க்கும் மேற்பட்ட குழந்தைகளும், அவர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், தமிழமுது நண்பர் வட்ட அமைப்பினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-56)



## புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்குக் கதிரைகள்

முல்லைத்தீவு, ஜன.18
புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்குக் கலையரங்கக் கதிரைகள் வழங்கப்பட்டுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் நிதி ஒதுக்கீட்டில் இவை வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் புதுக்குடியிருப்புப் பிரதேச சபை உப தவிசாளர் க.ஜெனமேஜயத் அவற்றைக் கையளித்தார். (எ-ரி3)

## மூத்த விவசாயிகளுக்கு மாந்தையில் மதிப்பளிப்பு

மன்னார், ஜன.18
மாந்தை மேற்குப் பிரதேச் செயலகத்தின் ஏற்பாட்டில் உழவர் விழாவும், மூத்த விவசாயிகள் மதிப்பளிப்பும் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் எஸ்.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த மூத்த விவசாயிகள் 15 பேர் மதிப்பளிக்கப்பட்டனர்.

நிகழ்வில் அனைத்து மதத் தலைவர்கள், அடம்பன் பொலிஸ் நிலைய அதிகாரி, மாந்தை மேற்குப் பிரதேச செயலகப் பணியாளர்கள், விவசாயிகள், கிராம மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-56)



## 20 போத்தல் கசிப்பை விற்க வந்தோர் கைது

கிளிநொச்சி, ஜன.18
விற்பனை செய்யும் நோக்கத்துடன் எடுத்துச் செல்லப்பட்ட 20 போத்தல் கசிப்புக் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், அவற்றைக் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்டப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

கிளிநொச்சி, உருத்திரபுரத்தில் கசிப்பு விற்பனை செய்யப்படுகின்றது என்று கிராம மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கசிப்பு மோட்டார் சைக்கிளில் எடுத்துச் செல்லப்பட்டபோது கைப்பற்றப்பட்டது. மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பெரியகுளத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், கசிப்பை விற்பனை செய்யும் நோக்கத்துடன் அவர்கள் உருத்திரபுரம் கொண்டு வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார். (எ-6)



## புதுக்குடியிருப்புப் பொலிஸ் பொறுப்பதிகாரிக்குப் பாராட்டு

முல்லைத்தீவு, ஜன.18
புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜ.பி.சந்திரபாலவுக்கு, கடந்த ஆண்டு அதிகளவு குற்றங்களைப் பிடித்துச் சிறந்த சேவையாற்றியமைக்குப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பொலிஸ் சேவையில் சிறந்த சேவையாற்றியோரைப் பாராட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகிந்த குணரத்தின கலந்துகொண்டார். அதன்போதே புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையைப் பொறுப்பதிகாரிக்குப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி3)




முல்லைத்தீவு பேராறு ஜி.ரி.எம்.எஸ். மற்றும் முல்லைத்தீவு பண்டாரவன்னியன் மகா வித்தியாலயம் என்பவற்றில் நேற்றுக் கால்கோள் விழா நடைபெற்றது. அதில் துணுக்காய் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சக்திதரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

## ஜோசப்வாஸ் தினமும் கால்கோள் விழாவும்




மன்னார், ஜன.18

மடு. விடத்தல் தீவு தூய ஜோசப்வாஸ் மகா வித்தியாலயத்தின் 'ஜோசப்வாஸ் தினம்' மற்றும் 'கால் கோள் விழா' நேற்றுமுன் தினம் புதன் கிழமை காலை பாடசாலையின் அதிபர் தலைமையில் இடம் பெற்றன.

நிகழ்வுக்கு விருந்தினர்களான பங்குத் தந்தை அருட்குமரன் அடிகளார், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மடு வலயக் கல்வி பணிமனை அதிகாரி ஏ.ஜே. குரூஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜோசப்வாஸ் தினம் கொண்டாடப்பட்டதோடு, புதிதாக தரம் 1க்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களை வரவேற்கும் 'கால் கோள்' விழா இடம் பெற்றது.

தரம் 1 மாணவர்கள் வரவேற்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்றன. தரம் 1 மாணவர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பாடசாலை கற்றல் உபகரணங்களை வழங்கினார்.

அத்துடன் தனது நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு தொகுதி கணினிகளைப் பாடசாலை அதிபரிடம் கையளித்தார். நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். (எ-56)

# உறுதிமொழிக்கு அமைய காணிகளை விடுவியுங்கள்

### காணி உரிமைக்கான மக்கள் கூட்டணி மைத்திரியிடம் கோரிக்கை

கொழும்பு, ஜன.18

**வழங்கிய உறுதிமொழிக்கு அமைவாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணிகளை விடுவிக்க வேண்டும். முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கேப்பாபிலவுக் கிராமக் காணிகளின் விடுவிப்புத் தொடர்பில் சுட்டிக்காட்டுகின்றோம். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கோரியுள்ளது காணி உரிமைக்கான மக்கள் கூட்டணி.**

கடந்த வருடம் டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் வடக்கு, கிழக்கில் படையினர் வசமுள்ள காணிகளை மீளவும் மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அரச தலைவர் பணிப்புரை விடுத்திருந்தார். எனினும் அது முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. இது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

நீங்கள் வழங்கிய உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாவிட்டால் மக்கள் மோசமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வாய்ப்புண்டு. அவர்கள் அத்தகைய இறுதிநிலைக்குத் தள்ளப்படுவதற்கு முன்னர் நீங்கள் வழங்கிய உறுதிமொழிக்கு அமைய, விடு விக்கப்படாதுள்ள காணிகளை விடுவிக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கண்காணிக்கும் அரச தலைவர் சிறப்புச் செயலணியுடன் நடத்திய சந்திப்பின் போது வடக்கு, கிழக்கில் உள்ள காணிகளில் காணப்படும் சகல பிரச்சினைகளையும் முடிவுக்குக் கொண்டு வந்து 2018 டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் அவற்றை காணிகளின் உரிமையாளர்களிடம் கையளிக்க வேண்டும் என்று அரச தலைவராகிய நீங்கள் அறிவுறுத்தினீர்கள் என்று அரச தலைவர் ஊடகப்பிரிவு கடந்த ஆண்டு ஒக்டோபர் 4ஆம் திகதி அறிக்கையிட்டிருந்தது.

நீங்கள் வழங்கிய இந்த உறுதிமொழியை நிறைவேற்றுமாறு கோரி வடக்கு, கிழக்கில் இடம்பெயர்ந்த மக்கள், அக்கறையுள்ள நபர்கள் மற்றும் பல்வேறு சிவில் சமூக அமைப்புக்கள் கடந்த டிசெம்பர் மாதம் 27ஆம் திகதி உங்களுக்கு கடிதமொன்றை எழுதியிருந்தன.

எனினும் இன்றுவரை எமது அந்தக் கடிதத்துக்குப் பதில் வழங்கப்படவில்லை. பல தசாப்தங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்த காணிகளின் உரிமையாளர்கள் தற்போதுவரை தமது நிலப்பரப்புக்குள் நுழைய முடியாத சூழ்நிலையை எதிர்நோக்கியுள்ளனர்.

நீங்கள் வழங்கிய உறுதிமொழிக்கு அமைவாக வடக்கு, கிழக்கில் காணிகளை விடுவிக்கும் செயற்பாட்டைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று நாம் மீண்டும் ஒருமுறை உங்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம். குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கேப்பாபிலவு கிராமத்திலுள்ள காணிகளின் விடுவிப்புத் தொடர்பில் நாம் சுட்டிக்காட்டுகின்றோம். 2017 டிசம்பர் மாதம் இந்தக் கிராமத்தின் சில காணிகள் விடுவிக்கப்பட்ட போதும் பல ஏக்கர் காணிகள் இன்னமும் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் களப்பை அண்டியதாகத் தமது வாழ்வாதாரத்தைக் கொண்டவர்களின் காணிகள், விவசாயக் காணிகள், கிராமப் பாடசாலைகள், இந்துக் கோவில் மற்றும் மயானம் என்பன உள்ளடங்குகின்றன.

தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேப்பாபிலவு கிராமத்தைச் சேர்ந்த மக்கள் கடந்த 22 மாதங்களாக இராணுவ முகாமின் நுழைவாயிலுக்கு அருகில் இரவு பகலாகத் தொடர்ச்சியான அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளுடன் பல்வேறுபட்ட கலந்துரையாடல்களையும் நடத்தி வருகின்றனர். தமது காணிகள் விடுவிக்கப்படும் வரை சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப் போகின்றோம் என்று இந்தக் கிராமத்தின் தலைவர்கள் கடந்த காலத்தில் எச்சரித்திருந்திருந்தனர்.

நீங்கள் வழங்கிய உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாது, காணிகள் தொடர்ந்தும் விடுவிக்கப்படாமல் இருந்தால் அவர்கள் மோசமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வாய்ப்புண்டு என்று நாங்கள் கவலையடைகின்றோம். அவர்கள் அத்தகைய இறுதி நிலைக்குத் தள்ளப்படுவதற்கு முன்னர் நீங்கள் வழங்கிய உறுதிமொழிக்கு அமைய, விடுவிக்கப்படாதுள்ள கா்ணிகளை விடுவிக்க வேண்டும் என்று கோருகின்றோம் -என்றுள்ளது. (எ-61)

## சஜித்தின் பிறந்தநாளுக்காக மன்னாரில் பல நிகழ்வுகள்

மன்னார், ஜன.18

வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாசவின் பிறந்த தினத்தை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை மன்னார் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டுள்ளன.



மடுத் திருத்தலத்தில் சிறப்பு ஆராதனைகள் நடத்தப்பட்டன. மாவட்ட அலுவலகத்தில் கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது. ஊழியர் நலன்புரிச் சங்கத்தால் 10 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நானாட்டான், அருவிமோட்டை, பேசாலை, செல்வேரி ஆகிய இரு கிராமங்களில் மாதிரிக் கிராமத்துக்கான அடிக்கல் நடப்பட்டது.

இந்த நிகழ்வுகளில் மன்னார் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ஜே.நோயல் ஜெயச்சந்திரன், முகாமையாளர் மற்றும் அலுவலர்கள், பிரதேச செயலர், பிரதேச சபை உறுப்பினர்கள், கிராம அலுவலர் எனப் பலர் கலந்தது கொண்டனர். (எ-56)



# கூட்டு ஒப்பந்தத்தை கேள்விக்குட்படுத்த முடியாது

### உயர் நீதிமன்றம் தெரிவிப்பு


கூட்டு ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருக்கும்போது அதை நீதிமன்றத்தினூடாகக் கேள்விக்குட்படுத்த முடியாது. கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் அல்லது முதலாளிமார் சம்மேளனம் தொழில் ஆணையாளருக்கு அறிவிப்பதன் மூலமே அதை முடிவுறுத்த முடியும் என உயர்நீதிமன்றம் தெரிவித்தது.

மக்கள் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலர், சட்டத்தரணி இ. தம்பையா தாக்கல் செய்திருந்த சிறப்பு மேன்முறையீடு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே உயர் நீதிமன்ற நீதியரசர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

2016ஆம்ஆண்டுசெய்துகொள்ளப்பட்டதோட்டத்தொழிலாளர்களுக்கான சம்பளக் கூட்டு ஒப்பந்தம் தொழிற்சட்டங்களுக்கு முரணானது, அடிப்படைக் கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிரானது ஆகையால் அதை நீக்கிப் புதிய கூட்டுஒப்பந்தத்தைச் செய்வதற்குத் தொழில் ஆணையாளர் ஊடாக இலங்கை முதலாளிமார்சம்மேளனத்தையும், இலங்கைதொழிலாளர் காங்கிரஸ், இலங்கைதேசிய தோட்டத்தொழிலாளர்சங்கம் மற்றும் தொழிற்சங்கக் கூட்டு ஆகியவற்றுக்குக் கட்டளையிடுமாறுஇ. தம்பையாமேன்முறையீட்டுநீதிமன்றத்தில்மனுத் தாக்கல் செய்திருந்தார். குறித்த மேன்முறையீடு மீது விசாரணைகளைமேற்கொண்ட உயர்நீதிமன்றநீதியரசர்களான பிரியந்த ஜயவர்தன, விஜித மல்லகொட மற்றும் முருது பெர்ணான்டோ ஆகியோரே அவரின்மனுவைநிராகரித்து, கூட்டு ஒப்பந்தத்தை நீதிமன்றம் கேள்விக்குட்படுத்த முடியாது என்று தெரிவித்தனர்.

# படைப்புழுவின் தாக்கம் அதிகரித்துள்ளது நெற் செய்கையையும் இது பாதிக்கலாம்

### விவசாயத் திணைக்களம் தகவல்



கொழும்பு.ஜன.18

**அம்பாறையின் சோளச் செய்கையை நாசப்படுத்தியுள்ள படைப்புழுக்கள் தற்போது அநுராதபுரம், குருநாகல், காலி, மாத்தறை மாவட்டங்களிலும் வியாப்பித்துள்ளன. சோளப் பயிர்ச் செய்கையை அதிகம் தாக்கிவரும் இந்தப் படைப்புழுக்கள் ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள்தொடர்பானமதிப்பீட்டைமுன்னெடுப்பதற்குத் திட்ட மிட்டுள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்தது.**


இன்று முதல் இந்த மதிப்பீட்டு நடவடிக்கையை முன்னெடுக்கத் திட்டமிட் டுள்ளதாக விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர்பேராசிரியர்எம்.டபிள்யூ. வீரக்கோன் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

படைப்புழுவின்தாக்கம்சோளப்பயிர்ச் செய்கையையே அதிகம் பாதித்துள்ளது. சோளத்தைத் தொடர்ந்து கீரி சம்பாவை அதிகம் தாக்கியுள்ளது.

இனி ஏனைய பயிர்ச் செய்கைகளையும் இது பாதிக்கலாம். இது தொடர்பில் விவசாயிகள் அவதானமாக இருக்க வேண்டும். குறிப்பாக நெற்செய்கை பாதிக்கப்படலாம்.

இந்தஅழிவுதொடர்பிலும், அதிலிருந்து பாதுகாப்புப் பெறுவது தொடர்பிலும் இரண்டு கிழமைகளுக்குள் விவசாயிகளை அறிவுறுத்துவதற்கு நாங்கள் எதிர்பார்த்துள்ளோம். இந்த அழிவு தொடர்பில் முழுமையான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கும் எதிர்பார்த்துள்ளோம். எதிர்வரும் 18ஆம் திகதியிலிருந்து இந்த மதிப்பீட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நாங்கள் எதிர்பார்த்துள்ளோம். மதிப்பீட்டுப் பணிகளுக்காகப் பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் குழு நியமிக்கப்படும் - என்றார்.




நன்றி: நாமல் அமரசிங்க

# ஆசிரியர்கள் இன்றி அல்லாடும் மட்டக்களப்பின் கல்வி வலயம்

### மட்டு. மேற்குவாழ் மக்கள் விசனம்

மட்டக்களப்பு.ஜன.18


கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் மேற்கொண்ட ஆசிரியர் இடம் மாற்றத்தால் மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்திலிருந்து102ஆசிரியர்கள்வெளிவலயங்களுக்குச் சென்றனர். அதேவேளை இடமாற்றம்பெற்றுமட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்துக்கு வருகை தந்தவர்கள் 28ஆசிரியர்களே. இதனால் மட்டக்களப்பின் பல பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின்றன என்பதைக் கல்வியலாளர்கள்சுட்டிக்காட்டுகின்றனர். இதன்படிகுறித்தகல்வி வலயத்தில் ஆரம்பப் பிரிவுக்குக் கற்பிப்பதற்கு 68ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளதுடன், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவு கின்றது.

அதிகஸ்ர, கஸ்ரப் பாடசாலைகளைக் கொண்ட வலயமாக மட்டக்களப்புமேற்குகல்விவலயம்உள்ளது. இங்குநிலவும் ஆசிரியர் பற்றாக்குறையானது இந்தக் கல்வி வலயத்துக்குட்பட்ட மாணவர்களின் கல்வியை மிகவும் பாதிக்கின்றது என்பதாகக் குறித்த கல்வி வலயத்துக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படாமை குறித்து மட்டக்களப்பு மேற்குச் சமூக ஆர்வலர்கள் பலரும் விசனமடைகின்றனர்.

# மட்டக்களப்பில் புத்தர் சிலை!

மட்டக்களப்பு - கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள மயிலங்கரச்சை ஸ்ரீ மகிந்தாராமய விகாரையில் 60 அடி உயரமான புத்தர் சிலை ஒன்றைஇன்றையதினம்நிறுவஇருப்பதாக அந்த விகரையின் விகராதிபதி கட்டுகஸ்தோட்டே மகிந்தாலங்கார தேரர் தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்டத்தின் மிக உயரமான புத்தர் சிலையாகஇதுஅமையவுள்ளது. இந்த நிகழ்வில்விவசாயநீர்ப்பாசனகிராமிய பொருளாதார மற்றும் கால்நடை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் எம். எஸ்.எஸ். அமீர் அலி, மாவட்டப் படை மற்றும்பொலிஸ்அதிகாரிகள், பௌத்த பீடங்களின் துறவிகள், பிரதேச மக்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதாக விகாராதிபதி மேலும் தெரிவித்தார்.

மயிலங்கரச்சை கிராமத்தில் தமிழ், முஸ்லிம், சிங்களமக்கள்வாழ்கின்றார்கள். இது அனைத்துமக்களும்அமைதியாக வாழும் ஒரு கிராமமாக இன்றளவும் இருந்து வருகிறது என மயிலங்கரச்சை கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் டபிள்யூ. லலித் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.





# கத்திக் குத்துக்கு இலக்கான இளைஞர் ஒருவர் சாவு

மட்டக்களப்பு.ஜன.18

வாழைச்சேனைமீராவோடையில் கடந்த புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்ற கைகலப்புச் சம்பவம் ஒன்றில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டதாக வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர். மீராவோடை கிராமத்தைச் சேர்ந்த சனூஸ் முஹம்மத் ஸக்கீல் (வயது 16) என்பவரே இதில் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

குறித்த பகுதியைச் சேர்ந்த இளைஞர் அணிகள் இரண்டுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியது. அதன்போது கூரிய ஆயுதமொன்றால் குத்தப்பட்ட மேற்படி இளைஞர் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்ததில் அதிக குருதி வெளியேறிய நிலையில் கத்திக்குத்துக்கு இலக்கான இளைஞனைச்சந்தேகநபர்கள் தாங்கள் பயணம் செய்த முச்சக்கரவண்டியில் ஏற்றிச் சென்று வாழைச்சேனை மருத்துவமனையில் கிடத்தி விட்டுத் தலைமறைவாகினர். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் ஏற்கெனவே சாவடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச்சம்பவம்தொடர்பாகவிசாரணைகளைமுன்னெடுத்துவரும் பொலிஸார் இதுவரையில் நால்வரைக் கைது செய்ததாகவும், முச்சக்கர வண்டி ஒன்றையும், கொலைக்குப் பயன்படுத்திய கத்தியையும் கைப்பற்றியதாகவும் மேலும் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில்இருவர்சகோதரர்கள்என்பது குறிப்பிடத்தக்கது. இந்தச்சம்பவம்பற்றிவாழைச்சேனைப் பொலிஸார்மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டனர்.



# தலவாக்கலை தொழிற்சாலையை அண்மித்த காட்டுப்பகுதியில் தீ

தலவாக்கலை தேயிலைத் தொழிற்சாலையை அண்மித்துள்ள காட்டுப் பகுதியில் நேற்றைய தினம் தீ பரவியது. இந்தத் தீயால் 2 ஏக்கர்களுக்கு மேற்பட்ட காட்டுப்பகுதிஎரிந்துநாசமடைந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். தற்போது கடும் வெயில், கடும் காற்றுடன் கூடிய காலநிலை நிலவி வருவதால்இந்தத்தீயைக்கட்டுப்பாட்டுக்குள்கொண்டுவர முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தலவாக்கலை பொலிஸார், சிறப்புஅதிரடிப்படையினர், இராணுவத்தினர், பொது மக்கள் இணைந்து இந்தத் தீயை அணைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். தற்போது பல பிரதேசங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் காடுகளுக்குத் தீ வைப்பதால் மழைவீழ்ச்சி குன்றி நீர்த்தட்டுப்பாடு அதிகரிப்பதற்கு வாய்ப்பிருக்கின்றது.

ஆகவே இவ்வாறு காடுகளுக்குத் தீ வைப்பவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தவேண்டுமென அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.



# ‘பிரெக்சிட்’ ஒப்பந்தம் தோல்வி

## 'தெரசா மே'யுக்கு எதிராக் கொண்டு வந்த தீர்மானமும் தோல்வி

லண்டன்.ஜன.18

பிரிட்டன் நாடாளுமன்றத்தில் ‘பிரெக்சிட்’ ஒப்பந்தம் தோல்வியடைந்ததையடுத்து. அதைக்கொண்டுவந்தபிரிட்டனின்தலைமைஅமைச்சர்தெரசாமே மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அந்தத்தீர்மானமும் தோல்வி அடைந்தது.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுவதற்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய ‘பிரெக்சிட்’ ஒப்பந்தத்தை அந்த நாட்டின் தலைமை அமைச்சர் தரப்பினர் முன்வைத்தனர்.

இந்த ஒப்பந்தம் தொடர்பாகப் பிரிட்டனின் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புநடந்தது.

இதில் ஒப்பந்தத்துக்கு எதிராக 432 நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஆதரவாக 202 உறுப்பினர்களும் வாக்களித்தனர். அதன் மூலம் தலைமை அமைச்சர் தரப்பு தோல்வி அடைந்தது.

இந்த வாக்கெடுப்பில்தெரசா மேயின் கட்சியைப் பிரதி பலிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களே அவருக்கு எதிராக வாக்களித்து நெருக்கடியை ஏற்படுத்தினர்.

தெரசா மே கொண்டு வந்த பிரெக்சிட் ஒப்பந்தம் பாராளுமன்றத்தில் தோல்வியடைந்த நிலையில், எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி தலைவர் ஜெர்மி கார்பைன் தெரசா மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்தார்.

இந்தத்தீர்மானத்தின்மீதுவிவாதமும், வாக்கெடுப்பும்நடைபெற்றது. வாக்கெடுப்பின் முடிவில் தெரசாமேக்குஎதிராகக் கொண்டு வந்த அந்தத் தீர்மானம் தோல்வியில் முடிந்தது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக 306பேரும்எதிராக325பேரும்வாக்களித்தனர்.

### பின்னணி

ஐரோப்பாவின் 28 நாடுகள் ஒன்றிணைந்து ஐரோப்பிய ஒன்றியத்தை அமைத்துள்ளன. அதில் பிரிட்டனும் அங்கம் வகித்து வருகிறது.

ஐரோப்பா முழுவதும்ஒரேநாடுஎன்ற சித்தாந்தத்தின்அடிப்படையில்ஐரோப்பிய ஒன்றியம் செயல்படுகிறது. அதில் இணைந்துள்ளதால் பிரிட்டன் தனது தனித்தன்மையையும் இறையாண்மையையும் இழந்துவிட்டதாக ஒரு பிரிவினர் குற்றம்சாட்டினர். அதைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறுவது தொடர்பான 'பிரெக்சிட்' வாக்கெடுப்பு 2016ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடந்தது.

பெரும்பாலானமக்கள்பிரெக்சிட்டுக்கு ஆதரவாக வாக்களித்தனர். எனவே ‘பிரெக்சிட்’வெற்றிபெற்றதாகஅறிவிக்கப்பட்டது.

இதனால் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் எந்த மாதிரியான ஒப்பந்தம், உடன்பாட்டுடன்வெளியேறும் என்பது குறித்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.





# ஆயுததாரிகள் தாக்கு[தல்] சிரியாவில் 30 பேர் ச[ாவு]

## அமெரிக்கா படைகளைத் திரும்ப பெற்றதன் எதிரொலி என்று வர்ணிப்பு

டமாஸ்கஸ்.ஜன.18

வடகிழக்குச்சிரியாவில் ஆயுததாரிகள்நடத்தியதாக்குதலில் அப்பாவிப்பொதுமக்கள் … சாவடைந்தனர் என அங்குள்ள செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டன. அங்… அமெரிக்கத்துருப்புகள்வெளியேறுவதான அமெரிக்கத்தீர்மானத்தின் எதிரொலி என்… சம்பவம் கருதப்படுகிறது.



வடகிழக்குச் சிரியாவில் இருந்து ஐ.எஸ். ஆயுதாரிகளைஅகற்றுவதற்காகச்சுமார் 2ஆயிரம் வரையான அமெரிக்கப் படையினர் சிரியாவில் முகாமிட்டிருந்தனர். சிரியாவின் குறித்த பகுதிகளில் ஐ.எஸ். அமைப்பினருக்குஎதிராகச்சிரியா, அமெரிக்கா, குர்திஷ் போராளிகள் எனப் பல தரப்பினர் போரிட்டு ஐ.எஸ் அமைப்பினரின் ஆதிக்கத்தை வலுவிழக்கச் செய்து வந்த நிலையில், ஐ.எஸ். அமைப்பினர் தோற்கடிக்கப்பட்டுவிட்டதாகத்தெரிவித்து அங்கிருக்கின்ற அமெரிக்கத் துருப்புகள் வெளியேறும்உத்தரவைஅமெரிக்கஅதிபர் ட்ரம்ப் பிறப்பித்தார். இதற்குப் பரவலாகப் பல தரப்பினராலும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இந்த நிலையில் தற்போதுசிரியாவின்வடபகுதியில்உள்ள அலெப்போமாகாணத்தின்மன்பிஜ்பகுதியில் ஐ.எஸ் அமைப்பினர் நேற்று வெடிகுண்டுகள் வீசித் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் 30 பேர் பரிதாபமாகச் சாவடைந்தனர். ஐ.எஸ். அமைப்பினரைத் தோற்கடித்துவிட்டதாகப்பொய்கூறிச்சிரியாவிலிருந்து அமெரிக்கப் படைகளை வெளியேறுமாறு உத்தரவு பிறப்பித்த ட்ரம்பின் முகத்திரையை இந்தத் தாக்குதல் சம்ப…

வம் கிழித்துள்ளதாக…
னங்கள் எழுந்துள்ள…
அமெரிக்காவின் ஆ…
குர்திஷ் போராளிக…
தமை குறிப்பிடத்தக…



## கென்யாவில் விடுதி மீது தாக்குதல்

# சாவு எண்ணிக்கை 21 ஆக[…] ஐக்கிய நாடுகள் சபை கண்[…]

நைரோபி.18

கென்யாவில் விடுதி மீது ஆயுதாரிகள்நடத்திய தாக்குதலில் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 21ஆக உயர்ந்துள்ளது.

இந்தத்தாக்குதல்சம்பவத்துக்குஐக்கியநாடுகள் சபை தன்னுடைய கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

கென்யாவின்தலைநகர்நைரோபியில்அமைந்துள்ள விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் ஆயுதாரிகள் சிலர் அதிரடியாக புகுந்து தாக்குதல் நடத்தினர்.

துப்பாக்கியால்சுட்டும், வெடிகுண்டுகள்வீசியும், தற்கொலைப்படைத் தாக்குதலும் நடத்தினர். தாக்குதலைஅடுத்து, அங்குவிரைந்தகென்யப் பொலிஸார்விடுதியில்இருந்தவர்களைமீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

அத்தோடு பதுங்கியிரு…
குறிவைத்துத் தாக்குத…
அமெரிக்காவைச் சேர்…
பேர் கொல்லப்பட்டதா…
வெளியானது. அதன்பி…
தொடங்கியபோது, மே…
பட்டன.

இதன்மூலம்சாவுஎண்…
தது. தாக்குதல் நடத்திய…
கொல்லப்பட்டனர். பல…
ளான28பேர்மீட்கப்பட்…
சேர்க்கப்பட்டனர்.

இந்ததாக்குதலுக்குஅல்…
பொறுப்பேற்றுள்ளது. இ…
கிய நாடுகள் சபை கஎ…
துள்ளது.



...குதல்
...சாவு

...மக்கள் 30பேர்
...ன. அங்கிருந்து
...லிஎன்று இந்தச்



...துள்ளதாகப் பரவலாக விமர்ச
...ழுந்துள்ளன. இந்தப்பகுதியில்
...வின் ஆதரவுடன் இதுவரை
...போராளிகள் செயற்பட்டு வந்
...ப்பிடத்தக்கது.

## ...ஆக உயர்வு
## ...கண்டனம்

...ங்கியிருந்த ஆயுததாரிகளைக்
...தாக்குதலும் நடத்தினர். இதில்,
...வச்சேர்ந்த ஒருவர் உள்ளிட்ட 14
...ப்பட்டதாக முதலில் அறிவிப்பு
... அதன்பின்னர், மீட்பு பணியை
...போது, மேலும் 7 உடல்கள் மீட்கப்

...வுஎண்ணிக்கை21ஆகஉயர்ந்
... நடத்திய 5 பயங்கரவாதிகளும்
...டனர். பலத்த காயங்களுக்குள்
...மீட்கப்பட்டுமருத்துவமனையில்
...னர்.
...லுக்குஅல்ஷபாப்ஆயுதஅமைப்பு
...ள்ளது. இந்தத்தாக்குதலுக்குஐக்
... சபை கண்டனத்தை தெரிவித்

## கமரூனில் கடத்தப்பட்டவர்கள் விடுவிப்பு



யாவுண்டே.ஜன.18
கமரூனின் தென்மேற்குப் பிராந்தியத்தில் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்ட பயணிகள் 36 பேரும் விடுவிக்கப்பட்டனர்.
மத்திய ஆப்பிரிக்க நாடான கேமரூனின் தென்மேற்கு பிராந்தியத்தில், பியூவாகும்பா நெடுஞ்சாலையில் சென்ற பயணிகள்பேருந்தை, ஆயுதம்தாங்கியகுழுவினர்தடுத்து நிறுத்தினர். அதில் 36 பயணிகள் இருந்தனர். அவர்களை ஆயுத முனையில் கடத்திச் சென்று பேருந்துச் சாரதியை மட்டும் விடுவித்தனர் என்று கமரூனின் அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
இந்த நிலையில், கடத்தப்பட்ட 36 பேரும் மறுநாள், அதாவது நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டனர். நீண்டதூரம் தங்களை கடத்தல் கும்பலைச் சேர்ந்தவர்கள் அழைத்துச் சென்றதாகவும், தங்களிடம்இருந்தபணம், செல்போன்கள் மற்றும் பொருள்களை பறித்துக்கொண்டு பின்னர் விடுவித்ததாகவும் பயணிகள் தெரிவித்தனர்.

### பின்னணி

ஆங்கிலம் பேசும் மக்கள் அதிகம் வாழும் தென்மேற்கு மற்றும் வடமேற்கு பிராந்தியங்களைத் தனி நாடாக அறிவிக்க வலியுறுத்தி, கமரூனில் ஆயுதப் போராட்டம் நடந்து வருகிறது.
அவர்களைஅரசுஒடுக்கிவருகிறது. இந்தப்பிராந்தியங்களில் ஆட்கடத்தல் சம்பவம் அதிகரித்து வருகிறது. இதற்கு ஆயுதம் தாங்கியவர்கள் தான் காரணம் என அரசு குற்றம்சாட்டுகிறது.
ஆனால், தங்கள் சுதந்திரப் போராட்டத்தைப் பன்னாட்டு அளவில் களங்கப்படுத்தும் வகையில், அரசால் இந்தக் கடத்தல் சம்பவம் திட்டமிட்டு நடத்தப்படுவதாக ஆயுத மேந்தியவர்கள் கூறுகின்றனர்.



சபரிமலை விவகாரம்

## திருப்பி அனுப்பப்பட்ட பெண்கள் உணவு தவிர்ப்பு; தரிசனம் செய்த பெண்கள் பாதுகாப்புக் கோரல்

திருவானந்தபுரம்.ஜன.18
சபரிமலைக்குத் தரிசனத்துக்குச் சென்றபோது திருப்பி அனுப்பப்பட்ட பெண்கள் இரண்டு பேரும் காலவரையற்ற உணவு தவிர்ப்புப்போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.
சபரிமலை ஐயப்பன் கோவிலில் அனைத்து வயதுப் பெண்களும் சாமி தரிசனம் செய்யலாம் என்று இந்திய உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்திருந்தது. இதைத்தொடர்ந்து இளம் பெண்கள் சபரிமலைக்கு சென்றபோது அவர்களை இந்து அமைப்புகள் தடுத்து நிறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
இதனால்சபரிமலையில்சாமிதரிசனம்செய்யும்பெண்களுக்குப்பொலிஸ்பாதுகாப்பு வழங்குவதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுத்தது. இதைத்தொடர்ந்து கேரளாவைச்சேர்ந்த பிந்து, கனகதுர்கா ஆகியபெண்கள்பொலிஸ்பாதுகாப்புடன் சென்றுசாமிதரிசனம்செய்தனர். இதன் பிறகும்சபரிமலைசெல்லும்இளம்பெண்களை ஐயப்ப பக்தர்கள் போராட்டம் நடத்தி திருப்பி அனுப்பும் சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன.
கண்ணூரைச் சேர்ந்த ரேஷ்மா, ஷனிலா ஆகிய பெண்கள் சபரிமலைக்குச் சென்றபோதுதடுத்துநிறுத்தப்பட்டனர். அவர்கள்தற்போதுகாலவரையறையற்றஉணவு தவிர்ப்புப்போராட்டத்தைத்தொடங்கிஉள்ளனர்.
இதன்காரணமாகஇந்தவிடயத்தில்மீண்டும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கு முன்பதாகப் பொலிஸ்பாதுகாப்புடன்சபரிமலையில்தரிசனம்மேற்கொண்டுதிரும்பியஇரண்டுபெண்களும் தமக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதால் பாதுகாப்ப அளிக்குமாறு கோரி நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.





## பாகிஸ்தான் இராணுவத்தினர் அதிரடி நான்கு தலிபான்கள் சுட்டுக் கொலை

பெஷாவர்.ஜன.18
பாகிஸ்தான் இராணுவத்துக்கும் தலிபான் ஆயுததாரிகளுக்கும் இடையேநடந்ததுப்பாக்கிச்சூட்டுத்தாக்குதலில் தலிபான் தளபதி உட்பட 4 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர்.
பாகிஸ்தானில் காஜி பம்ப் பகுதியில் உள்ள ஒரு வீட்டுக்குள் ஆயுததாரிகள்பதுங்கி இருப்பதாக இராணுவத்தினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.
இதையடுத்து அந்த வீட்டை இராணுவத்தினர் சுற்றி வளைத்தனர். அவர்களைக் கண்டதும் அங்கு பதுங்கி இருந்தஆயததாரிகள்துப்பாக்கியால்சரமாரியாகச்சுடத் தொடங்கினர்.
இராணுவத்தினர் சுற்றி வளைத்துத் தாக்கினர். இதன் முடிவில் 4 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர். பாகிஸ்தானில் கைபர் பக்துங்வா மாகாணத்தின் ஜுமா பஜார் பகுதியில் ஷியா பிரிவினரின் வழிபாட்டுத்தலத்தில் கடந்த நவம்பர் மாதம் ஆயுததாரிகள் நடத்திய அதிரடி தாக்குதலில் 3 சீக்கியர்கள் உள்பட 31பேர் கொல்லப்பட்டனர்.
40 பேர் படுகாயம் அடைந்தனர். இந்தத் தாக்குதலில் பங்கெடுத்த பாகிஸ்தான் தலீபான் இயக்கத்தின் தளபதியான இஸ்லாம்உள்ளிட்ட4பேர்தான்இந்தத்துப்பாக்கிச் சண்டையில் கொல்லப்பட்டுள்ளனர் எனப் பாகிஸ்தான் அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



## கனடியருக்குச் சீனாவில் தூக்கு கனடா – சீனா உறவில் பதற்றம்

பீஜிங்.ஜன.18
2014ஆம் ஆண்டில் கனடாவைச் சேர்ந்த ரொபர்ட்(வயது34)என்பவர்சீனாவில்இருந்து ஆஸ்திரேலியாவுக்கு 227 கிலோ எடையுள்ள போதைப் பொருளைக் கடத்த முயன்ற குற்றத்தில் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் கடந்த நவம்பர் மாதத்தில் அவருக்கு 15 ஆண்டுகள்சிறைத்தண்டனைவிதிக்கப்பட்டது.
ஆனால், தற்போது சீனாவின் தாலியன் நகரைச் சேர்ந்த உயர் நீதிமன்றம் அவருக்குச் சாவுத்தண்டனை விதித்துத்தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பு சீனா மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்கு இடையேயான உறவைப் பாதிக்கக்கூடும்என்றுகூறப்படுகிறது. இதற்குஏற்றாற்போல் கனடாவின் தலைமை அமைச்சர் ஜஸ்டின் ட்ரூடோதனதுகண்டனங்களைதெரிவித்தார்.
இதுகுறித்துஅவர்வெளியிட்டஅறிக்கையொன்றில், "இந்தத்தீர்ப்புஎங்களுக்குமிகவும்கவலை அளிப்பதாக உள்ளது. இது எங்கள் தோழமை நாடுகளுக்கும் கவலை அளிப்பதாக அமைகிறது" என்று கூறியுள்ளார். அமெரிக்காவின் வேண்டுகோளுக்கு இணங்க சீனாவின் பெரு நிறுவனமான ஹுவாவியைச் சேர்ந்த ஒரு முக்கிய அதிகாரியைக்கனடாகைதுசெய்ததை அடுத்தே விதமாக ரொபர்ட் மீதான வழக்கு மீண்டும் விசாரிக்கப்பட்டமையும் சுட்டிக் காட்டப்படுகிறது.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அப்பாவி மீனவர்களின் அநியாயச் சாவுகளை நிறுத்துங்கள்

இந்திய மீனவர் ஒருவர் கொல்லப்பட்டிருக்கிறார். இலங்கைக் கடற்படையினரின் டோறாப் படகு அவர் பயணித்த மீன்பிடிப் படகுடன் மோதியதில் நசியுண்டு அவர் இறந்திருக்கிறார். எல்லை கடந்து மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் உயிர்கள் காவுகொள்ளப்படுவது, இலங்கையில் போர் நின்ற பின்பும் நிற்காமல் தொடர்வது கவலை தருகின்றது.

சில வாரங்களுக்கு முன்னர் எல்லை தாண்டி வந்து மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்களைப் பிடிப்பதற்குச் சென்ற கடற்படைப் படகில் இருந்த கடற் படைச் சிப்பாய் ஒருவர் மீனவர்கள் படகுக்குத் தாவி அந்தப் படகைக் கரை நோக்கிச் செலுத்தி வருவதற்கு எத்தனித்தபோது அவரைநடுக்கடலில்தள்ளிவிட்டு இந்திய மீனவர்கள்தப்பிவிட்டார்கள் என்று ஒரு செய்தி உலாவியது. இலங்கைக் கடற்படையினர் அத்தகைய ஒரு சம்பவம் நடக்கவேயில்லை என்று அடியோடு மறுத்தார்கள். அதன் பின்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

இந்திய மீனவரின்சாவு திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டுவதற்கு இடமில்லை என்பது அவருடன் கூட வந்தவர்களின்வாக்குமூலங்களில் இருந்து தெரிகிறது. கடற்படையினர்தமது பெரிய டோறாபடகை மீனவர்களின் சிறிய படகுடன் அணைக்க முற்படும்போது கடல் அலைகளால் நிகழும் மோதலின் வேகத்தைத் தாங்க முடியாமல் மீன்பிடிப் படகு உடைந்து நொருங்கத் தொடங்கியிருக்கிறது, படகின் மேல் பகுதியில் இருந்த மூவர் கடற்படையினரால் காப்பாற்றப்பட, படகின் உள்ளே இருந்த மற்றொருவர் நசியுண்டு நீரில் மூழ்கிப் போனார் என்கிறார்கள் உயிர் தப்பிய மீனவர்கள்.

கடற்படையினர் தமது பெரிய படகை மீனவப் படகுடன் அணைக்க முற்பட்டதால் இந்த விபத்து நேர்ந்தது என்பது ஒரு பக்கம் இருக்க, மீனவர் ஒருவர் உள்ளே அகப்பட்டுள்ளார் என்பதை மற்றையவர்கள் கடற்படையினருக்கு எடுத்துச் சொன்னபோது அதனைப் புரிந்துகொள்வதற்கு மொழி ஒருதடையாக இருந்தது என்பதும் இந்த அநியாய உயிரிழப்புக்கான முக்கிய காரணி. மீனவர்கள் தமிழில் கூறியதை, அங்கிருந்த குறைந்தபட்ச தமிழ் அறிவு கொண்டிருந்த கடற்படைச் சிப்பாய் புரிந்துகொண்ட பின்னர் எடுத்த முயற்சிகளால் மீனவரின் சடலத்தைத்தான் மீட்க முடிந்தது.

எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபடுவது அதிலும் இழுவை மடி முறையில் மீன்பிடியில் ஈடுபடுவது இலங்கையில் தண்டனைக்குரிய கடும் குற்றம் என்கிறபோதும் இந்தத் தவறைச் செய்யும் பெரும்பாலான மீனவர்கள் விடுவிக்கப்படுவதே இங்கு நடைமுறையில் இருக்கின்றது என்கிறபோது, ஒரு மீனவரின் உயிரிழப்பு என்பது கவலையளிக்கக்கூடிய பெரும் சம்பவம்தான்.

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடியால் வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. தமது வயிற்றுப் பிழைப்புக்காக எல்லைதாண்டி வந்து இங்குள்ள மீனவர்களின் வயிற்றில் அடிப்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. அதேநேரத்தில் இந்தப் பிரச்சினைக்காக அநியாய உயிரிழப்புக்கள் ஏற்படுவதையும் சகித்துக் கொள்ள முடியவில்லை. போர் முடிந்து 10 வருடங்களாகி விட்ட பின்னரும் தமிழக மீனவர்கள் கொல்லப்படுவது இரு நாட்டு அரசுகளினது கண்களையும் உறுத்தாது இருப்பது விசனத்தை அளிக்கிறது.


இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக இலங்கை இந்தியத் தரப்புகள் இடையே பல வருடங்களாகப் பேச்சுக்கள் நடத்தப்படுவதாகக் காட்டப்பட்டாலும் தீர்வு ஏதும் எட்டப்படுவதாக இல்லை. இரு நாட்டு அரசுகளும் ஏமாற்றிக்கொண்டே இருக்கின்றன. இதில் அப்பாவி மீனவர்களின் உயிர்களே காவு கொள்ளப்படுகின்றன. இந்த நிலமை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

உயிரிழப்பை நிறுத்த வேண்டுமானால் முதலில் இந்திய மீனவர்கள் எல்லைதாண்டுவது நிறுத்தப்பட வேண்டும். நடைமுறையில் உள்ள சட்டத்தை இறுக்கமாக நடைமுறைப்படுத்துவதன் மூலமே அது ஓரளவுக்கு சாத்தியமாகும். கைது செய்யப்படும் மீனவர்கள் முதலிலும் படகுகள் பின்னருமாக விடுவிக்கப்பட்டு வருமானால் இந்தப் பிரச்சி னைக்குத் தீர்வு வராது. இரு நாட்டு அரசுகளும் தத்தமது ஆட்சிகளைப் பாதுகாத்துக்கொள்வதற்காகத் தொடர்ந்தும் இந்தப் பிரச்சினையைக் கண்டும் காணாமல் இருப்பதை விடுத்து உடனடியாக இதற்கொரு தீர்வைக் காணவேண்டும்.

# அதிரடியை ஆரம்பிப்பாரா ஆளுநர்?

## ஏக்கத்துடன் எதிர்பார்த்திருக்கின்றனர் தமிழ் மக்கள்

■ இந்துமதி



தமிழர்களின் பூர்வீகப் பூமியில், பரம்பரை யாக, தொண்டு தொற்று வழிபாடு நடத்தி வருகின்ற ஆலயத்தில் பொங்கல் நிகழ்வைக் கூட நிம்மதியாக நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பிக்குகளும், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களும் அரங்கேற்றிய அடாவடியால் இந்த நிலமை உருவானது.


முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசின் ஆதரவுடன் இடம்பெறுகின்ற சிங்களக் குடியேற்றங்க ளால், அந்த மண்ணுக்குச் சொந்தக்காரர்களான தமிழ்மக்களின் இருப்புக் கேள்விக்குறியாக மாறியுள்ளது.

முல்லைத்தீவின் எல்லைக் கிராமங்களைக் கறையான் அரித்ததைப் போன்று அரித்தெடுத்துள்ளார்கள் பெரும்பான்மை இன மக்கள். அரச தலைமைகளின் ஆசீர்வாதத்துடன் இது நிறைவேற்றப்படுகின்றது.

### தமிழர்களின் இருப்பை அகற்றுவதில் அக்கறை காட்டப்படுகின்றது

தமிழ் மக்களின் வணக்கத் தலங்களுக்கு மிக அருகாக விகாரைகளை அமைப்பதும் பின்னர் தமிழர்களை அங்கிருந்து விரட்டியடிப்பதும் வழக்கமான நடைமுறைகளாக மாறிவிட்டன. இதுதான் தற்போதும் அரங்கேற்றப்பட்டுள்ளது.

ஓர் இனத்தின் பூர்வீக நிலங்களைப் பறித்தெடுப்பது, அந்த இனத்தின் இருப்பையே இல்லாமல் செய்து விடும். இது பேரினவாதிகளின் தந்திரமாகவே மாறியுள்ள்து. இந்த நாட்டில் மட்டுமல்லாது பன்னாட்டு அளவிலும் இதைக்காணக்கூடியதாகவுள்ளது. பலஸ்தீன மக்களும் இத்தகையதொரு நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர். பலஸ்தீனர்களின் நிலங்களை ஆக்கரமித்து யூதக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டு வருவதால் அந்த



மக்களின் இருப்புக்கு மிகப்பெரிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

சுதந்திரத்துக்கு முந்திய காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் காணப்பட்ட இனப்பரம்பல் சிங்கள அரசுகளால் திட்டமிட்டு மாற்றியமைக்கப்பட்டது. தமிழ் மக்கள் அதிகம் வாழ்ந்த அந்த மாகாணம், இன்று தமிழர்களின் கைகளிலிருந்து பறிபோகும் நிலையிலே உள்ளது.

நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றிய டி.எஸ்.சேனநாயக்க, கிழக்கில் ஏற்படுத்திய திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களே இனப்பரம்பல் மாற்றியமைக்கப்படக் காரணம்.

இனப்பரம்பலை மாற்றியமைக்க வடக்கிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டே வருகின்றன. புத்தரின் போதனைகளைப் பின்பற்றுகின்றோம் என்கின்ற பிக்குகளே அதற்கு மூல காரணமாக இருக்கின்றனர் என்பதுதான் வேதனைக்குரியது. முல்லைத் தீவில் நடந்ததும் அதுவேதான்.

வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராகப் பதவியேற்றுள்ள சுரேன் ராகவன் கொழும்பு ஆங்கில ஊடகமாக சிலோன்ருடேக்குத் தெரிவித்த கருத்து இப்போது முக்கியத்துவம் பெறுகின்றது. தமிழர் பகுதிகளில் அரசியல் இலக்குடன் முன்னெ டுக்கப்படும் பௌத்தமயமாக்கல் நிறுத்தப் படவேண்டும் என்று அதற்கான முயற்சிகளை எடுப்பேன் என்றும் கூறியுள்ளார்.

### பேச்சுக்குச் செயல்வடிவம் கொடுப்பாரா?

எல்லோரைப் போன்றும் பேச்சு வேறு செயல் வேறாக இருக்கப்போகின்றதா? அல்லது சொன்னதைச் செய்யும் ஆளுநராக இருக்கப் போகின்றாரா என்பதே இப்போதைய கேள்வி.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் நோக்குடனும், தமிழர் பாரம்பரியக் கொண்டாட்ட நிகழ்வை முடக்கும் நோக்குடனும் முன்னெடுக்கப்பட்ட பிக்குவின் நடவடிக்கை தொடர்பில் ஆளுநர் விசாரணைகளை முன்னெடுப்பாரா? அரசியல் நோக்குடன் முன்னெடுக்கப்படும் இத்தகைய பௌத்தமயமாக்கலுக்கு எதிராக ஆளுநர் தனது அதிகாரத்துக்கு உட்பட்ட வகையில், தனது செயற்பாட்டை ஆரம்பிப்பாரா? அரச தலைவர் மைத்திரிபாலவின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட ஆளுநர் ராகவன், இதனைச் செய்வாரா?

அவரும் ஒரு தமிழர் என்ற வகையில், தாம் சார்ந்துள்ள இனமக்கள் அனுபவிக்கின்ற அவலங்களைப் புரிந்துகொள்ளாதவராக இருக்க முடியாது. அரசியல் தீர்வு, இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பன ஒருபுறமிருக்க அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் தமிழர் பகுதிகளை பௌத்த மயமாக்கும் முயற்சிகள் தொடர்பாக அவர் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதுவே அவரது பதவிக்குப் பெருமை சேர்க்கும் என்பதோடு வடக்குத் தமிழர்களின் எதிர்பார்ப்பும்கூட. ■

சேரலாதன்




# மாகாணசபை தேர்தலுக்கான ஆரவாரம்

வடக்கு உள்பட 9 மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தல்களை நடத்தி முடிப்பதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு தயாரக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெற்கைப் பொறுத்தவரையில் அங்கு ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்கள் நிரந்தரமாக முடிவுக்கு வருவதற்கான அறிகுறிகளைக் காண முடிய வில்லை. அரச தலைவருக்கும், தலைமை அமைச்சருக்கும் இடையே நிலவி வருகின்ற பனிப்போர் மோச மான கட்டத்தை எட்டி நிற்கின்றது. அடுத்து இடம்பெறவுள்ள தேர்தல்க ளில் மகிந்த அணியுடன் சிறிலங்கா சுதந்தி ரக்கட்சி இணைந்து போட்டியி டுமென அரச தலைவர் பகி ரங்கமாகத் தெரிவித்துள்ள தால், கடந்த தடவை போன்று சிறி லங்கா சுதந்தி ரக் கட்சியுடனான ஐக்கிய தேசியக் கட்சியின் உறவு நீடிக்காது என்பது தெளிவா கத் தெரிகின்றது.

**அரச தலைவரின் தோல்விக்குப் பின்னரான செயல்கள்**

தலைமை அமைச்சர் பதவி யில் இருந்து ரணில் விக்கிர மசிங்கவை அகற்றிவிட்டு அந்தப் பதவிக்கு மகிந்த ராஜ பக்சவை நியமிப்பதற்குத் தம்மால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் படுதோல்வியில் முடிந்ததால் மைத்திரி கடும் கோபத்தில் உள்ளார். தமக்கு ஏற்பட்ட தோல்விக்குப் பழிவாங் குவதற்கு அவர் தயாராக உள்ளமை அவரது அண்மைக்கால நடவடிக்கைகள் கோடிட்டுக் காட்டுகின்றன. தெற்கில் உள்ள மக்கள் அரச தலைவரின் செயற் பாடுகளால் கடுமையான அதிருப்தியில் உள்ளனர். அரச தலைவரைப் பகிரங்க மாக விமர்சிப்பதில் அவர்கள் தமது வெறுப்பை வெளிக்காட்டி வருகின்றனர்.

வடக்கு மாகாண சபையைத் தமிழர் தரப்புத்தான் கைப்பற்றும் என்பதில் எவ் வித சந்தேகமும் இல்லை. ஆனால் கிழக் கைப் பொறுத்தவரையில் முஸ்லிம் மக் கள் தமது இனத்தைச் சேர்ந்த ஒருவ ரையே முதலமைச்சர் பதவியில் அமர்ந் துகொள்ள வேண்டுமென்று விரும்பு கின்றனர். இந்தப் பதவியைத் தமிழர் ஒருவரே வகிக்க வேண்டுமெனத் தமிழர் தரப்பும் விருப்பம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக இணைக்கப்படுமாயின் தமிழ ரின் விருப்பம் இலகுவாக நிறைவேறி விடும். ஆனால், வடக்கையும் கிழக்கை யும் இணைப்பதற்குத் தெற்கில் கடுமை யான எதிர்ப்புத் தெரிவிக்கப்படுவதால் இணைப்புச் சாத்தியப்படுமென எதிர் பார்க்க முடியவில்லை. மாறாக முஸ் லிம் தரப்பும் தமிழர் தரப்பும் இணைந்து செயற்பட்டால் பேரினவாதக் கட்சிகள் தமிழர் பிரதேசங்களில் ஊடுருவுவதைத் தடுத்துநிறுத்திவிட முடியும். கடந்த உள் ளூராட்சித் தேர்தல் முடிவுகள் பேரினவா தக் கட்சிகள் இங்கு காலூன்றியதைத் தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டன. வடக் கில் உள்ள தமிழர்கள் ஆளுக்கொரு கட்சியை ஆரம்பித்துத் தமக்குள் பிரிந்து நிற்பது பேரினவாதிகளுக்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது.

தெற்கில் நிலவிய அரசியல் குழப்பங்கள் கூட்டமைப்பின் தலைமையின் இராஜ தந்திர நடவடிக்கை காரணமாக ஓய்ந்து போயுள்ளதை தெற்கிலுள்ள மக்கள் வரவேற்றுள்ளனர்.

இதனால் கூட்டமைப்பின் செல்வாக்கு தெற்கிலும் இருக்கின்றது. வடக்கிலும், கிழக்கிலும் வாழ்கின்ற தமிழ் மக்க ளும் கூட்டமைப்பின் நடவடிக்கை சரியாதென்பதை ஏற்றுக்கொண்டுள் ளனர். ஓரளவு சரிவடைந்த நிலை யில் காணப்பட்ட கூட்டமைப்பின் செல்வாக்கு மீண்டும் அதிகரித்துள்ள தைக் காண முடிகின்றது.

**வடக்கு மாகாணத் தேர்தலில் கடும் போட்டி நிலவும்**

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் கடுமையான போட்டி நிலவு மென் பதை இப்போதே கூறிவிட முடியும். முன்னாள் முதலமைச்சரான சி.வி. விக்னேஸ்வரன் தனிக்கட்சி யொன்றை ஆரம்பித்து விட் டார். முன்னாள் அமைச்ச ரான அனந்தியும் தமது பங் குக்கு கட்சியொன்றை ஆரம் பித்துள்ளார். பெரும் ஆரவா ரத்துக்கு மத்தியில் ஆரம்பிக் கப்பட்ட தமிழ்மக்கள் பேரவை யும் பிளவுபடுவதற்கான அறி குறிகள் தென்படுகின்றன.

பேரவையின் முக்கிய பங்கா ளியான கஜேந்திரகுமார், ஈ.பி. ஆர்.எல்.எவ் பேரவையில் அங்கம் வகிப்பதை எதிர்த்து வருகின்றார். புளொட்டையும் பேரவையிலிருந்து நீக்கி விட வேண்டுமென்ற கோரிக்கை யும் வலுப்பெற்று வருகின்றது. பேரவை பலவீனமடைந்து வருவதைக் காண முடிகின்றது. கூட்ட மைப்பைப் பொறுத்த வரையில் கருத்து வேறுபாடுகளுக்கு மத்தியில் ரெலோ, புளொட், இலங்கை தமிழ் அரசுக்கட்சி ஆகிய அங்கம் வகிக்கின்றன. கூட்ட மைப்பிலிருந்து விலகிச் சென்ற ஆ.பி. ஆர்.எல்.எவ். மீது கஜேந்திரகுமார் மிகக் கடுமையான கோபத்தில் உள்ளதால் அந்தக் கட்சி தேடுவாரற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

**தெற்கு நிலவரம்?**

தெற்கைப் பொறுத்தவரையில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்ட ணிக்கு அதிக மாகாண சபைகளைக் கைப்பற்றக்கூடிய வாய்ப்பு பிரகாசமாகத் தெரிகின்றது. அரச தலைவர் மற்றும் மகிந்த தரப்பின் தவறான செயற்பாடுக ளால் மக்கள் கடுமையான வெறுப்பில் உள்ளதால் மைத்திரியும் மகிந்தவும் எதிர்பார்த்த வெற்றிகளைப் பெறுவது சிர மமான காரியமாகவே அமையப்போகி றது. இதேவேளை மாகாணசபைக்கான தேர்தல் முடிவுகள் அடுத்து இடம்பெறப் போகும் பெரிய தேர்தல்களில் நிச்சயமாகப் பிரதிபலிக்கவே செய்யும். இந்தத் தேர்தல்களில் அரசியல் கட்சிக ளின் அதிக அக்கறை காட்டப்போகின் றன. தெற்கில் மட்டுமல்லாது வடக்கு மற்றும் கிழக்கி லும்கூட மாகாணசபைத் தேர்தல்கள் சூடு பிடிக்கும் என்பதைக் கூறத்தேவையில்லை.



> கூட்டமைப்பின் செல்வாக்கு தெற்கிலும் இருக்கின்றது. வடக் கிலும், கிழக்கிலும் வாழ்கின்ற தமிழ் மக்களும் கூட்டமைப்பின் நடவடிக்கை சரியாதென்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர். ஓர ளவு சரிவடைந்த நிலையில் காணப்பட்ட கூட்டமைப்பின் செல்வாக்கு மீண்டும் அதிகரித் துள்ளதைக் காண முடிகின்றது.

## ஆசிரியருக்கான கடிதம்

# விடுமுறையில் ஒரு விடுதலை வேண்டும்

பாவங்களைச் சுமக்கும் பிள்ளைகளாகத் தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையான பிள்ளைகள் காணப்படுகின்றனர். ஓய்வே இல்லாது சுதந்தி ரத் தையும் விடுமுறையையும் அனுபவிக்க முடியாதவர்க ளாக, படிப்பின் கைதிகளாக, பொழுது விடிந்ததிலி ருந்து படுக்கையறைக்குச் போகும்வரை உளவியல் தாக்கங்களால் பீடிக்கப்பட்டுள்ளார்கள்.


ஒவ்வொரு வருட இறுதியிலாவது, அவர்களின் பெறுமதியான ஆளுமைகருதி ஐந்து நாள்களாவது எந்தவித தனிப்பட்ட வகுப்புக்களும் இன்றி அவர் களுக்குச் சுதந்திரமாக விளையாடவும், சுற்றுலா செல்லவும், புதுவருடத்தை அனுபவிக்கவும், சுற்றத் த வரோடு குலாவி மகிழவும், ஆன்மீக விடுமுறையில் ஒரு விடுதலை வழங்கவேண்டும்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கவனத்தில் எடுத்தால் நல்லது.

கே.எஸ்.சிவஞானராஜா,
கொக்குவில்.

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக் கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவ ராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவ ரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.




## ஓர் எழுத்தால் பொருள் கொள்வோம்

1. அழைப்பேன் நான்- வா
2. கொடுப்பேன் நான்- கை
3. கேட்பேன் நான்- தா
4. மலர்வேன் நான்- பூ
5. பறப்பேன் நான் - ஈ
6. சுடுவேன் நான்- தீ
7. சுட்டுவேன் நான்- நீ
8. வெறுப்பேன் நான்- சீ
9. துரத்துவேன் நான்- போ
10. உமிழ்வேன் நான்- தூ
11. பிறப்பேன் நான் - தை
12. கவிதை நான்- பா
13. பூங்கா நான்- கா
14. அரசன் நான்- கோ
15. பசுவும் நான்- ஆ
16. குதிரை நான்- மா
17. வாழ்வை முடித்திடு - சா
18. புத்தகம் வைத்திட- பை
19. நெற்றியில் பொட்டை- வை
20. கண்களில் பூசு -மை

## பொன்மொழிகள்

எடுத்துச்சொல்வதை விட, எடுத்துக்காட்டாக இருப்பது தான் ஒருவனுக்கு பெருமை.

கோபத்தால் மனிதன் தனக்குத் தானே தீங்கு இழைத்துக் கொள்கிறான். சாந்த குணமே உயர்ந்தது.

போட்டி எண்ணம் இருக்கும் வரையில் மனிதனுக்கு மனநிறைவு உண்டாகாது.

எளிமையும், உழைப்பும் மனதிற்கு நிம்மதியளிக்கும் அருமருந்துகள் என்றால் மிகையில்லை.

பிற்கு பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ண வேண்டாம்.

அலட்சிய குணம் ஆபத்தானது. அதனால், நமக்கு மட்டுமின்றி மற்றவருக்கும் தீங்கு உண்டாகும்.

பணத்தில் மட்டுமல்ல பேச்சிலும் சிக்கனம் தேவை.

மற்றவர் குறைகளை அன்பால் திருத்த முயலுங்கள். அடக்குமுறையால் நிலையான பயன் உண்டாவதில்லை.

உலகில் மிகவும் தெய்வீகமானது எது? சக மனிதனிடம் நீங்கள் காட்டும் அன்புதான்.

அறிவியல் என்பதை எளிமையாகச் சொல்லவேண்டும் என்றால், அது விளைவுகளைப் பற்றிய அறிவு.



## காலைக்காட்சி

- நமது கண்ணுக்கு விருந்தளிக்கும் காட்சிகளுள் காலைக் காட்சியும் ஒன்று.
- காலை வேளையில் பறவைகள் இன்னிசை கீதம் பாடும்.
- அவை தம் கூடுகளை விட்டுச் சிறகடித்து வானில் பறந்து செல்லும்
- சூரியன் தன் செங்கதிர்கள் பரப்பி கிழக்கு வானில் உதயமாவான்.
- அவன் வரவு கண்டு தடாகங்களில் தாமரைகள் மலரும்.
- பூங்காக்களில் பல வர்ண மலர்கள் மலர்ந்து நறுமணம் வீசும்
- தேனீக்களும் வண்டுகளும் வண்ணத்துப்பூச்சிகளும் தேனை உண்ண மலர்களை நாடி வரும்.
- ஆலயங்களில் மணி ஓசை கேட்கும். வழிபாடுகள் நடைபெறும்.
- மக்கள் துயில் நீங்கி எழுந்து காலைக்கடன்களை முடிப்பர்.
- பெண்கள் முற்றத்தைக் கூட்டிப் பெருக்கி வாசலில் கோலம் போடுவர்.
- கால்நடைகள் புல் நிலங்களை நாடிச் செல்லும்.
- உழவர்கள் கலப்பைகளை சுமந்து எருதுகளை ஓட்டியும் வயல் நிலங்களுக்குச் செல்வர்.
- தோட்டங்களில் காய்கறிகளைப் பறித்து சந்தைகளுக்கு கொண்டு செல்வர்.
- மாணவர்கள் சீருடை அணிந்து பாடசாலைக்குச் செல்வர்
- அலுவலகங்கள், தொழிற்சாலைகள் யாவும் செயற்படத் தொடங்கும்.



## பூனைக்கு மணி கட்டுவது யார்?

நகரத்து எலிகள் இரண்டு கிராமத்துக்குச் சென்று அங்குள்ள எலிகளைச் சந்தித்தன. கிராமத்து எலிகளும் நகரத்து எலிகளை அன்புடன் உபசரித்தன. இரண்டு இடத்து எலிகளும் தமது இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொண்டன. அவை கிராமத்தின் பழத் தோட்டங்கள், நெல்வயல்கள், நெற்களஞ்சியங்கள் எங்கும் நகரத்து எலிகளைக் கூட்டிச் சென்று விருப்பம் போல் அவற்றுக்கு வேண்டிய உணவுகளை அளித்தன. இவ்வாறு எலிகள் எல்லாம் நெற்களஞ்சியத்தில் கிளிங் கிளிங் என்று மணி ஓசை கேட்டது. இந்த ஒலி கேட்டதும் கிராமத்து எலிகள் நகரத்து எலிகளையும் சேர்த்துக் கொண்டு நமது வளைக்குள் ஓடி ஒளிந்து கொண்டன.

மணிச் சத்தம் கடந்து போனதும் எலிகள் வெளிப்பட்டு பழைய படி கும்மாளமடிக்கத் தொடங்கின. நகரத்து எலிகளுக்கோ ஒன்றும் புரியவில்லை. அவற்றில் ஒன்று தலைமை எலியிடம் "தற்போது ஒரு மணிச் சத்தம் கேட்டதே. அது என்ன சத்தம்" என்று கேட்டது. "அதுவா எது எங்கள் எதிரியான பூனையார் இவ்விடம் வந்து போனதற்கான முன்னறிவுப்பு" என்றது கிராமத்து எலி. "பூனையார் வரும் போது மணிச் சத்தம். அவர் வருகை அறிந்துதான் எல்லோரும் ஓடி ஒழிந்தீர்களா? கொஞ்சம் விரிவாகக் கூறுங்களேன்?" என்றது நகரத்து எலிகள். இங்கே நாங்கள் வாழும் வீட்டில் இரண்டு சுட்டிப் பையன்கள் ஒரு பூனையை வளர்க்கின்றார்கள். இவர்கள் ஆசையாக வளர்க்கும் இந்தச் செல்லப்பிராணியின் கழுத்தில் இரண்டு மணிகளைக் கட்டிவிட்டுள்ளனர். பூனை ஆசையாக இங்கும் அங்கும் ஓடித் திரியும்போது கேட்கும் மணிச் சத்தம் அவர்களுக்கும் பெரும் மகிழ்ச்சியாகும். பூனையின் இந்த மணிச் சத்தம் பூனையாரிடம் இருந்து நாம் தப்புவதற்கான எச்சரிக்கை மணியாகவும் மாறிவிட்டது" என்றது தலைமை எலி. "அப்படியா? இது நல்ல யோசனையாக இருக்கிறதே. நகரத்தில் நாங்கள் வாழும் வீட்டில் எம்மை ஒழிப்பதற்கென்று எங்கள் எஜமான் பூனை ஒன்றை வளர்க்கின்றார். அந்தப் பூசை அவ்வப்போது சத்தம் போடாது பாய்ந்து வந்து எம்மவர்களைத் தூக்கிச் சென்று விடுகின்றது. இப்படி ஒரு முன் எச்சரிக்கை எமக்குக் கிடைத்தால் நாம் பூனையிடமிருந்து தப்பிக்க முடியுமல்லவா?" என்று நகரத்து எலிகள் தமது நிலமையை மிகக் கவலையுடன் எடுத்துக் கூறின. இதனைக் கேட்ட எலிக்ள் தமது நண்பர்களுக்கு உதவி புரிய எண்ணி அலைந்து அந்த வீட்டின் பழைய பொருள்கள் கொட்டிக் கிடக்கும் அறையில் இருந்து ஒரு சலங்கை மணியை எடுத்து வந்தன. இதோ இதனை நீங்கள் எடுத்துச் சென்று எப்படியாவது முயன்று பூனையாரின் கழுத்தில் கட்டிவிடுங்கள். பிறகு நீங்கள் எதற்கும் பயப்படத் தேவையில்லை" என்றது தலைமை எலி. கிராமத்து எலிகளுக்கு நன்றி தெரிவித்து சலங்கை மணியை எடுத்துச் சென்ற எலிகள் தமது நகரத்து வீட்டி நண்பர்களைக் கூட்டி நடந்தவைகளைக் கூறி ஆலோசனை செய்தன. இப்போது பூனைக்கு மணி கட்டுவது யார்? அதை எப்படிக் கட்டுவது? என்ற இரு வினாக்களுக்கு விடை காணப்பட்டது. அதன்படி பூனை தூங்கும் போதே அந்தக் காரியம் நடைபெறவேண்டும். இதற்கு முன்னர் இந்தக் காரியத்தக்கு ஒரு ஒத்தகை பார்த்து விடுவதென தீர்மானிக்கப்பட்டது. எல்லா எலிகளும் அமைதியாகின. எலி ஒன்று தூங்குவது போன்று பாசாங்கு செய்ய மற்றொரு எலி அதன் கழுத்தில் மணியை வெற்றிகரமாக கட்டி முடித்தது. எல்லா எலிகளும் மகிழ்ச்சிக் களிப்பில் ஆரவாரம் செய்தன. இதனைக் கண்ணுற்ற பூனை சத்தப்படாமல் அங்கே பாய்ந்து வந்து பல எலிகளை ஒரே தடவையில் பந்தாடியது.

எண்ணித் துணிக கருமம்

## தோற்றத்தை வைத்து குறைத்து மதிப்பிடக்கூடாது


விவேகானந்தர் காவியுடை அணிந்து தலைப்பாகையுடன் ஒருமுறை தொடருந்தில் சென்றபோது இரண்டு ஆங்கிலேயர்கள் பயனம் செய்தனர். ஆங்கிலம் தெரியாதவர் என கருதிய அவர்கள் விவேகானந்தரின் துறவுக் கோலத்தைக் கேலி செய்தனர்.

ஒரு ஊரில் தொடருந்து நின்றபோது அங்குள்ள ஒருவரிடம் "குடிக்க தண்ணீர் எங்கு கிடைக்கும்?" என ஆங்கிலத்தில் கேட்டார் விவேகானந்தர். இதைக் கேட்ட ஆங்கிலேயர்கள் அதிர்ச்சிக்குள்ளாயினர்.

"உங்களுக்கு ஆங்கிலம் தெரிந்தும் நாங்கள் கேலி பேசிய போது ஏன் பேசாமல் இருந்தீர்கள்" எனக் கேட்டனர்.

"முட்டாள்களிடம் நான் பேசுவதில்லை. அதில் எனக்கு விருப்பமும் இல்லை" என்றார்.

அவர்கள் தலைகுனிந்தனர். தோற்றத்தை வைத்து யாரையும் குறைத்து மதிப்பிடக் கூடாது என்பதற்கு இந்தச் சம்பவம் உதாரணம்.



# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 . 06 . 1945



உதிர்வு 06 . 02 . 2009

அமரர் சண்முகராசா இலங்கைநாதன்

(அன்னராசா ஸ்ரோர்ஸ்)

திதி:- பூர்வபக்க துவாதசி (18.01.2019)

எம் முகவரிகளுக்கு முதலெழுத்து
எம் அகரங்களுக்கு தலையெழுத்து
நாம் முந்தி நின்று முகங்காட்ட
தன்னைத்தந்து உருவாக்கிய சிற்பி

என்றும் உங்கள் நினைவுகளுடன்

குடும்பத்தினர்

# நினைவஞ்சலி

ஐந்தாம் ஆண்டு முதலாம் ஆண்டு

மலர்வு 08.08.1933

உதிர்வு 29.08.2013



மலர்வு 16.06.1939

உதிர்வு 26.01.2018

திருமதி

சண்முகம் தணிகாசலம் சாந்தநாயகி தணிகாசலம்

[சமாதான நீதவான்] [ஸ்தாபகர் தணிகா நுண்கலைக் கல்லூரி]

ஆண்டொன்று போனதம்மா...
அழுதோம் அழுகின்றோம்
அழுதுகொண்டே இருக்கின்றோம்
அகம்விட்டு நீங்கள்
அப்பாவுடன் சேர்ந்து — ஓர்
ஆண்டு ஆனதம்மா...

அன்புக்கும் பாசத்திற்கும் நீங்கள் இருவர்
எம்மை மட்டும் இல்லாமல்
ஊரவரையும் அணைத்தே வாழ்ந்தீர்
இல்லம் வந்தவர்களுக்கு
இல்லை என்று கூறாது
இறைந்து அவர் இன்முகம் பார்த்தே அனுப்பினீர்
உதவி என்று வந்ததோர்க்கு கரம் கொடுக்க
ஒருவருக்கு ஒருவர் நிகரில்லாதவர்கள் நீங்களே

ஊரார் போற்ற உறவுகள் வாழ்த்த
அன்றில் பறவைகளாய் நீங்கள் வலம் வந்தீர்
தலம்காவற் பிள்ளையார் தலம் — நாள்
தவறாது சென்று வணங்கினீரே
பிள்ளையாரே வரம் தரவேண்டும் — உங்கள்
பிள்ளைகளாக மீண்டும் நாம் பிறந்திடவே
உங்களிருவர் நினைவுகள் சுவாசங்களாக....
எம் உயிர் உள்வரை என்றென்றும் எம்முடன் வாழ்ந்திடுவீர்

கடந்த 26.01.2018 அன்று சிவபதம் அடைந்த எமது தாயார் தணிகாசலம் சாந்தநாயகி அவர்களது முதலாம் ஆண்டு திவசகிரியைகளும் 29.08.2013 அன்று சிவபதம் அடைந்த எமது தந்தையார் சண்முகம் தணிகாசலம் அவர்களது ஐந்தாம் ஆண்டு திவச நிகழ்வும் 19.01.2019 சனிக்கிழமை 11.00 மணியளவில் நடைபெறும் இவர்களது ஆத்மசாந்தி பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தணிகை மஹால்,
151/1 (528), பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(ACO 325/15/17)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# விற்பனைக்கு

புறொயிலர், இறைச்சிக் கோழிகள் மொத்தமாக விற்பனைக்குண்டு.

**1KG - 290/-**

**077 031 3197**

(CS/22634)(11.17)

# மணமகள் தேவை

1985 ஆம் ஆண்டு பட்டதாரி அரச உத்தியோகம் பரணி நட்சத்திரம் உள்ள மணமகனுக்கு பரம்பரை சைவ போசனமுடைய அரச உத்தியோகம் அல்லது பட்டதாரி மணமகள் தேவை.

**குறிப்பு** : சூரியன் + செவ்வாய் 3 ஆம் இடத்தில் உள்ளது.

தொடர்பு-076 695 1481

# மரண அறிவித்தல்

## திருமதி தேவி சிவகுரு

இளவாலையைப் பிறப்பிடமாகவும், இல.30, முதலாம் ஒழுங்கை பிறவுண்வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தேவி சிவகுரு நேற்று (17.01.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுருவின் அன்பு மனைவியும், சிவதர்சன், சிவரஞ்சிதன் (HRDA பிரதேச செயலகம், நல்லூர்) ஆகியோரின் தாயாரும், சசிகலா, சுஜீவா (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாநகரசபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமியாரும், பிரவீனா, கவீனா, மதுசிகா, ஆரணன் ஆகியோரின் பேர்த்தியும், மகாதேவன், பஞ்சவர்ணம், சந்திரன், காலஞ்சென்ற பவளமல்லிகா, தருமு ஆகியோரின் சகோதரியும், செல்லக்கண்டு, சிவபாக்கியம், ஐயாத்துரை, குணரத்தினம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS/22629)(11)

தகவல்: குடும்பத்தினர்.

# நயினாதீவு 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அமரர் உயர்திரு. சங்கரப்பிள்ளை திருநாவுக்கரசு (JP) அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 27 . 12 . 1935



இறப்பு 18 . 12 . 2018

திருநாமம் எனப் போற்றும் பெருநாமம்
திருவைந்தெழுத்தளித்த ஒரு நாமம்
திருநாவுக்கரசர் தந்த தமிழ்ப் பாட்டை
திசை எட்டும் பரவச் செய்த ஒருநாமம்
பரு வற்ற பாழ்பட்ட மக்கள் தம்மை
பதியாள வைத்து நின்ற பண்பாளர்
திருவுருவின் துணையோடு இந்த மண்ணை
துவளாது காத்து நின்ற மா மனிதர்

பசியென்று வந்தோர்க்கு பகிர்ந்தளித்து
புசி யென்று உணவளிக்கும் உத்தமரை
விதி வந்து விரைந்தோடிப் போனாலும்
விண்ணுலகில் பெருவாழ்வு கிடைக்குமையா
நதிவற்றிப் போய்விட்ட மீன்களைப் போல்
நாமிருந்து வருந்துகின்றோம் எம் செய்வோம்
கதியுற்று இருப்போரின் கண்களெல்லாம்
காலமெல்லாம் உமைத்தேடி விழித்திருக்கும்...

குறிப்பு:- நாளை (19.01.2019) சனிக்கிழமை நடைபெறவுள்ள அன்னாரின் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் மேற்படி நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

3ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(CS/22636)(11.17)

குடும்பத்தினர்.

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
## மீள் கேள்வி அறிவித்தல் - 2019
## நெளுக்குளம் கோழியிறைச்சிக்கடை நடத்துதல்

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை எல்லைக்குள் அமைந்த நெளுக்குளம் கோழி யிறைச்சிக்கடை 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை நடாத்துவதற்கான மீள்கேள்வி 2019.01.25ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்கள் கீழ்க்காட்டப்படும் கேள்விப் பிணைப்பணம், கேள்விப் பத்திரக் கட்டணம் ஆகியவைகளைச் செலுத்தி இவ்வலுவலகத்தில் 2019.01.25ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்களில் ஒரு பிரதி **"தலைவர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக் குளம், வவுனியா"** என்ற முகவரிக்கும், ஒரு பிரதி **"பி/உள்ளூராட்சி உதவி ஆணை யாளர், பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்கா வீதி, வவுனியா"** என்ற முகவரிக்கும் இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகக் கையளிக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் எதற்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னரோ நேரத்திற்குப் பின்னரோ கிடைக்கும் கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2019.01.25ஆம் திகதி பிற்பகல் 02.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும். கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும்போது கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்டவர் சமூகமாக இருக்க அனுமதிக் கப்படும்.

தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகை, மாதாந்த வாடகை என்பவற் றுடன் அரசாங்கத்தால் அவ்வப்போது அறவிடப்படும் வரி என்பவற்றை செலுத்துதல் வேண்டும். கேள்வி தொடர்பான நிபந்தனைகள் கேள்விப்படிவத்துடன் வழங்கப் படும்.

| கடை விவரம் | ஒருவருடத்திற்குரிய குறைந்த கேள்வித் தொகை 15% VAT, 2% NBT **நீங்கலாக** | மீளளிக்கப் படும் கேள்வி வைப்பு | கேள்விப் படிவக் கட்டணம் 15% VAT,2% NBT **நீங்கலாக** |
|---|---|---|---|
| நெளுக்குளம் கோழியிறைச்சிக் கடை | 498,300.00 | 25,000.00 | 1,000.00 |

**நேரியகுளம் வீதி, நெளுக்குளம்,**
**வவுனியா.**
**16.01.2019**

(IN/9114)(11.17)

**தலைவர்,**
**வவுனியாதமிழ்பிரதேச சபை.**

## Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

10th EDITION

JITF 2019

25 26 27

ஜனவரி / January

10.00am - 8.00pm

யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில் MUNICIPAL GROUNDS - JAFFNA

# இன்னும் 7 நாட்களில்

## உலகப் பெருமஞ்சம்
## அருள் மிகு இனுவில் கந்தசுவாமி கோயில்



**சிறப்புப் பொங்கல் பால்குடப் பவனி 21.01.2019 காலை 6.00மணிக்கு**

- ★ காலை 6.00 மணிக்கு பால்குடப் பவனி இணுவில் மருதனார்மடம் பல்லப்பவைரவர் ஆலயத்திருந்து ஆரம்பமாகி ஆலயத்தை வந்தடையும் (பால்குடம் எடுக்க விரும்பும் அடியவர்கள் 20.01.2019 இற்குமுன் ஆலயத்தில் முற்பதிவுகளை மேற்கொள்ளவும்)
- ★ மாபெரும் பொங்கல் காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.
- ★ அன்றைய தினம் இரவு 6.00 மணிக்கு வசந்தமண்டப பூசையும் இரவு 7.00 மணிக்கு உலகப் பெருமஞ்சம் வீதியுலா இடம்பெறும் அத்துடன் பாரம்பரிய கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெறும்.

பால்குடம் எடுக்கும் அடியவர்கள்
20.01.2019 ஞாயிற்றுக்கிழமைக்கு முன் ஆலயத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்.

....... விளம்பர அனுசரணையாளர்கள் .......

**குமரன்** கட்டடப் பொருள்கள்
விற்பனையாளர்கள்
கல், மணல், சிமெந்து, கம்பி, பெயின்ற் வகைகளைப் பெற்றிட
**கந்தசுவாமி கோயிலடி, இணுவில்.**
**077 400 2263, 077 175 4667**

**லது டிஜிற்றல் வீடியோ & போட்டோ**
LATHU DIGITAL VIDEO & PHOTO
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
Professional Video Filming & .Video Coverage, Digital Photo Graphing, DVD Conversion, Diary Album Making.
077 711 1009, 021 224 1510
E.Mail:lathushan@gmail.com,
Web:www.lathudigital.com

பெஷன் ஹவுஸ்
**FASHION HOUSE**
பெஷன் ஹவுஸ்
No.203, K.K.S. Road,
Jaffna.
Tel : 021 222 8713
Fax : 021 222 3034
Website : fashionhousejaffna.co

(c.318557) (13.15.17)



# 12 வருடங்கள் கழித்து மீண்டும் இணையும் மாதவன் - அனுஷ்கா

2006ஆம் ஆண்டு வெளியான 'ரெண்டு'படத்தில் நாயகனாக மாதவனும் நாயகியாக அனுஷ்கா வும் நடித்திருந்தார்கள். இந்தப் படத்தை சுந்தர்.சி இயக்கி இருந்தார்.

தற்போது மீண்டும் இந்தக் கூட்டணி 12 ஆண்டு களுக்குப் பிறகு இணைந்துள்ளது. மாதவன், அனுஷ்கா இணைந்து நடிக்கும் இந்தப் படத்துக்கு 'சைலன்ட்' என்று பெயர் வைத்துள்ளார்கள். இந் தப் படத்தை ஹேமந்த் மதுகர் இயக்குகிறார்.


நடிகர்கள் மாதவன், அனுஷ்கா, அஞ்சலி, ஷாலினி பாண்டே, சுபா ராஜு, அவசராலா ஸ்ரீனி வாஸ் உள்ளிட்ட பல நடிகர்கள் நடிக்கவுள்ள இப் படத்தில் மேலும் பிரபல ஹாலிவுட் நடிகர்களும் தொழில்நுட்ப வல்லுநர்களும் பணியாற்றவுள்ள னர்.

திகில் படமாக உருவாகும் இந்தப் படத்தின் படப் பிடிப்பு மார்ச் மாதம் அமெரிக்காவில் தொடங்க வுள்ளதாகவும் இந்த வருடமே வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
















**மேடம்:** சங்கடமான சூழ்நிலை ஏற்படலாம். பொறுமையுடன் செயல்படுவது எதிர்காலத்தில் நன்மை பெற உதவும். தொழில், வியாபார நடைமுறை சீராக கூடுதல் பணிபுரிவீர்கள்.

**இடபம்:** மனதில் அதிக நற்சிந்தனை உண்டாகும். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான உதவி கிடைக்கும். பணப்பரிவர்த்தனையில் நல்ல முன்னேற்றம் உண்டு.

**மிதுனம்:** சிலர் ஏளனமாக பேசுகிற சூழ்நிலை இருக்கும். பணியை நிறைவேற்றுவதில் ஆர்வம் கொள்வது நல்லது. முக்கிய செலவுக்காக கடன் பெறுவீர்கள்.

**கடகம்:** நலம் விரும்புபவரை சந்திப்பீர்கள். அன்றாட பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும்.

**சிங்கம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தனித்திறமை நண்பர்களிடம் வரவேற்பு பெறும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி பெருமளவில் குறையும்.

**கன்னி:** பிரச்னைகளை பிறரிடம் சொல்ல வேண்டாம். புதிய முயற்சியை பின்னொரு அனுகூல நாளில் துவங்கலாம். தொழில், வியாபார நடைமுறை தாமதகதியில் இயங்கும்.

**துலாம்:** தொந்தரவுகளை எதிர்கொள்ள நேரிடலாம். முக்கியப் பணிகளில் கவனம் அவசியம். தொழில், வியா பாரத்தில் ஆரவாரம் தவிர்க்க வேண்டும்.

**விருச்சிகம்:** மனதில் அதிக உற்சாகமுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணி எளிதாக நிறை வேறும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** சமயோசிதமாக செயல்படுவீர்கள். முக்கிய பணிகள் சிறப்பாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்திகரமாகும். மேலதிக வருமானம் கிடைக்கும்.

**மகரம்:** அறிவுத்திறனை பார்த்து சிலர் பொறாமையுடன் பேசுவர். சொந்தப்பணியில் கவனம் கொள்ளவும். தொழில், வியாபாரம் செழிக்க மாற்று உபாயம் உதவும்.

**கும்பம்:** செயல்களில் தற்காப்பு வேண்டும். எவருக்கும் தகுதி மீறிய வாக்குறுதி தரக்கூடாது. தொழில், வியாபாரத்தில் உரு வாகிற குறுக்கீடுகளை உரிய வகையில் சரிசெய்ய வேண்டும்.

**மீனம்:** தியாக மனதுடன் செயல்படுவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை இஷ்ட தெய்வ அருளால் அதிகரிக்கும். குடும்பத்தின் முக்கிய தேவை நிறைவேற்றுவீர்கள்.

# பகைமை கொள்ளாதீர்!

ஒருவர் தன் வீட்டில் மாட்டுவதற்காக ஒரு சுவர் கடிகாரம் வாங்கினார். சுவரில் மாட்ட ஆணி அடிக்க சுத்தியலைத் தேடினார்!

பக்கத்து வீட்டுக்காரரிடம் இரவல் வாங்கலாம் என நினைத்தார். ஆனால் இரவாகிவிட்டதே , காலையில் வாங்கிக் கொள்ளலாம் என்று விட்டுட்டார்..!

காலையில் பக்கத்து வீட்டுக்குச் செல்லும்போது "காலங்காத்தால இரவல் கேக்க வந்துட்டானே" என்று நினைச்சா என்ன செய்வது. பிறகு கேட்கலாம் என்று விட்டுட்டார்..!

இப்படியே ஒவ்வொரு நாளும் 'விளக்கு வைக்கும் நேரத்தில சுத் தியல் கேட்டு வந்துட்டான் பார்" "வெள்ளிக் கிழமையும் அதுவுமா இரவல் கேக்கறானே" பக்கத்து வீட்டுக்காரர் இப்படி எதையாவது சொல்லி விட்டால் அவமானமாகி விடுமே என்ற தயக்கத்திலேயே பல நாள்கள சுத்தியலைக் கேக்காமல் விட்டு விட்டார் அந்த நபர்! மாட்டப்படாத கடிகாரம் அவர் கண்ணில் பட்டுக்கொண்டிருந்த்து ! ஒரு நாள் பக்கத்து வீட்டுக்கு போய் " உன் சுத்தியும் வேணாம் ஒண்ணும் வேணாம் நீயே வைச்சுக்கோ"னு சத்தம் போட ஆரம் பித்து விட்டார். பக்கத்து வீட்டுக்காரருக்கோ ஒண்ணுமே புரியல.. இது மாதிரிதான் !

அடுத்தவரிடம் தங்கள் மனதில் என்ன இருக்கிறது என்று பேசாமல் நாமாகவே அவர் இப்படி சொல்லுவாரோ அப்படி சொல்லுவாரோ? என்று மாட்டப்படாத கடிகாரத்தைப் போல் நாமும் நன்கு பழகிய வர்களிடம் ஏற்படும் சிறு சிறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணா மல் பகைமையை வளர்த்துக் கொண்டு அந்நியமாகிக் கொள்கி றோம். நெருக்கமானவர்களுக்குள் பிரச்சனைகள் வருவதற்கு இது போன்ற முன்முடிவுகளேகாரணம் ! உண்மையான கார ணம் என்ன என்று உட்கார்ந்து பேசினால்தான் தீர்வு கிடைக்கும். பிறர் மீதான முன்முடிவுகள், முன்மதிப்பீடுகள் மற்றும் அபிப்பிரா யங்கள் தவிர்ப்போம் !

# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 6 | | | 9 | | |
| | | | | | 8 | | | 1 |
| | | | | 9 | | | 7 | |
| 5 | | | | | | 2 | 1 | |
| | | 1 | | | 4 | | | 7 |
| | 2 | | | 1 | | 4 | | 3 |
| 9 | | | 1 | 2 | 6 | | 8 | |
| | | 5 | 3 | 8 | 9 | 7 | | 2 |
| | 8 | | | 4 | 7 | 1 | 6 | |

## நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 2 | 3 | 8 | 6 | 9 | 4 | 1 |
| 6 | 8 | 3 | 1 | 9 | 4 | 5 | 7 | 2 |
| 1 | 9 | 4 | 5 | 2 | 7 | 6 | 8 | 3 |
| 4 | 6 | 1 | 8 | 5 | 3 | 7 | 2 | 9 |
| 3 | 2 | 8 | 9 | 7 | 1 | 4 | 6 | 5 |
| 7 | 5 | 9 | 6 | 4 | 2 | 1 | 3 | 8 |
| 8 | 1 | 7 | 2 | 6 | 9 | 3 | 5 | 4 |
| 9 | 4 | 5 | 7 | 3 | 8 | 2 | 1 | 6 |
| 2 | 3 | 6 | 4 | 1 | 5 | 8 | 9 | 7 |

செந்திலின்_கிறுக்கல்கள் @Annaiinpillai



வீட்டின் மூலையில் போடப்பட்ட மண்பானைகள் பியூட்டி பார்லர் போகாமல் புத்துணர்வு பெற்றன பொங்கல் பண்டிகையில்!

அன்புடன் கதிர்@kathir_twits



நகரத்து வாழ்க்கையை கிராமத்திற்கு கொண்டு வந்துவிடுவதே தமிழர் திருநாளின் சிறப்பு !

சிவமயம்

## ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபியில் அடியார்களுக்கு சிறப்பு அன்னதானம்

நயினையில் தைப்பூச விழா



நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் 21.01.2019 திங்கட்கிழமை தைப்பூச விழா மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது. விசேட அபிஷேகங்களைத் தொடர்ந்து அம்பாள் திருமஞ்சத்தில் வீதியுலா வந்து அன்பர்களுக்கு அருள் பாலிப்பாள்.

அன்றைய தினம் நயினாதீவுக்கு வரும் மெய்யடியார்கள் அனைவருக்கும் பிரதான சாலையில் அமைந்துள்ள நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையில் வழமைபோல் சிறப்பு அன்னதானம் வழங்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

நயினாதீவு 02 (CS/22635)(11) நிர்வாகம் அமுதசுரபி

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச சபையில் கடமையாற்றும் உத்தியோகத்தர் **நிரஞ்சன்** அவர்களின் அன்புத் தந்தையார் **சின்னத்தம்பி சிவலிங்கம்** அவர்களின் மறைவினால் துயரடையும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நல்லூர் பிரதேச சபை நலன்புரிச் சங்கம்

## விண்ணக வாழ்வின் மூன்றாம் வருட நினைவாக

அமரர் **கபிரியேல் ஜோஜ்**



மண்ணில் 01 09 1937 — விண்ணில் 18 01 2016

கடவுளே உமது பேரன்புக்கேற்ப எனக்கு இரங்கும்
உமது அளவற்ற இரக்கத்திற்கேற்ப என்குற்றங்களைத் துடைத்தருளும் - திருப்பாடல்

ஆண்டவர் நல்லவர் அவருக்கு நன்றி கூறுங்கள்
அவரது இரக்கம் என்றென்றும் நீடிக்கும் - சங்கீதம்

எங்களை அன்புடனும் பண்புடனும் நல்வழிகாட்டிய
அன்புத் தந்தையே நீங்கள் எங்களை விட்டு விண்ணுலகை
சென்று மூன்றாண்டு கடந்த பின்பும் நாம் என்றும் உங்கள்
நினைவிலே நிலைத்திருப்போம்

இல. 60,டேவிற்வீதி, யாழ்ப்பாணம். (CS 22283)(04.17) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் தியாகலிங்கம்



பயிரிக்கூடல் காரைநகரை பிறந்தர வசிப்பிடமாகவும், குமரபுரம், பரந்தனை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் தியாகலிங்கம் நேற்று (17.01.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான இராசசிங்கம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கிருபானந்தநாயகியின் அன்புக்கணவரும், நடனராணி, சிறிகரன், காலஞ்சென்ற சிறிகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜமாணிக்கம், சிறீவாணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ரமேஷ் மகேந்திரன், காலஞ்சென்ற ஒலிவர்பிரதீப், ஆன்சுசானி, ஆன்விமாலினி, ஹரிகரன், நித்திகா ஆகியோரின் பாசமிகு பேரனும், சோதிலிங்கத்தின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2019) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில்அவரது தற்காலிக வசிப்பிடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பரந்தன் கோரக்கட்டு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.28, குமரபுரம், பரந்தன். (CS/22628)(II) தகவல்: பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

## பொது அறிவித்தல் - 2019

### கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

கரைச்சிப் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட இரணைமடு தொடக்கம் பரந்தன் வரையான A 09 வீதியோர தரிப்பிடங்களுக்குப் பின்வரும் வகையில் நாளொன்றுக்கான தரிப்பிடக் கட்டணங்கள் அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. சிறியரக வாகன தரிப்பிடக் கட்டணம் - இருபது ரூபா (20.00)
2. கனரக வாகன தரிப்பிடக் கட்டணம் - ஐம்பது ரூபா (50.00)

இவ்வாகனத் தரிப்பிடத்துக்கான 18.01.2019 தொடக்கம் 31.12.2019 வரையான காலப்பகுதிக்கான குத்தகைதாரராக நாகலிங்கம் சந்திரகுமார் (792515061V) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அருணாசலம் வேழமாலிகிதன்,
தவிசாளர்,
பிரதேசசபை, கரைச்சி, கிளிநொச்சி. (C/32364)(11)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் முன்னாள் பணிப்பாளரும், சங்கானை ப.நோ.கூ.சங்க பணியாளரும், கூட்டுறவாளருமாகிய **மு.சிதம்பரப்பிள்ளை** அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயரடைகின்றோம். அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!!!

இல.12,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். — தலைவர், பணிப்பாளர், பணியாளர்கள், கூட்டுறவாளர்கள் யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி **புஸ்பதேவி பூதத்தம்பி**



அன்னை மடியில் 19.09.1959

ஆண்டவன் அடியில் 12.12.2018

பத்து திங்கள் சுமந்த உன்னை பத்து தினங்கள் பிரிந்ததில்லை
ஒற்றைத் திங்கள் கடந்த அன்னை நீயின்றி நாமிங்கு வெற்றுக் காகிதமே
உன் பாசம் ஒருநாளும் குறைவில்லை
உன் பாவம் ஒன்றிங்கு ஏதுமில்லை – பிறர் கையால்
உணவு ஒன்றும் உண்டதில்லை
குறையிலா சிற்றோடை கடல்சேர்ந்த நாள் இன்று
உமையிருந்த உயிரொன்று இறைசேர வேண்டுவீர்

எமது அன்னையின் பிரிவுச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி, முகநூலிலும், பிரசுரங்கள் மூலமும், அஞ்சலித்தவர்கள், அனுதாபம் பகிர்ந்தவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (18.01.2019) வெள்ளிக்கிழமை மதியம் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துசிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாலாவி தெற்கு, கொடிகாமம். (CS/22637)(11.17) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### அலன் எற்றிசன் (மாலா)



02ஆம் வட்டாரம் அல்லைப்பிட்டியை வசிப்பிடமாகக் கொண்ட அலன் எற்றிசன் (மாலா) நேற்று (17.01.2019) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (18.01.2019) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று அல்லைப்பிட்டியில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 22649)(15/18) தகவல்: குடும்பத்தினர்.

## வாடகைக்குத் தேவை

யாழ்.நகரை அண்மித்த பகுதியில் 5 அறைகளைக் கொண்ட வாகனத்தரிப்பிடத்துடன் சகல வசதிகளுடன் ஹோட்டல் நடத்தக் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.

077 366 1681 (CS 22624)(11.17)

## சிங்களம் (ORAL & LISTENING)

தேசிய மொழிகள் திணைக்களம் நடாத்தும் OREL & LISTENING பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கான பயிற்சி வகுப்பு சனி மற்றும் ஞாயிறு நாட்களில் பி.ப 3.30-4.30 வரை நடைபெறும்.

**ஆரம்பம் 19.01.2019** (சனி அன்று)

**ஸ்ரீ மாஸ்டர் (அ.ஸ்ரீரஞ்சன்)**

(தேசிய மொழிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஆசிரிய ஆலோசகர்)

இல 164, இராமநாதன் வீதி (Science Faculity Gate இற்கு முன்பாக மேல்மாடி) யாழ்ப்பாணம். 077 703 3729

## சிங்களம் B.Ed

**B.Ed. (கல்விமாணிப் பட்டயக் கற்கைநெறி)**

பங்குனி மாதம் நடைபெறவுள்ள கல்விமாணிப் பட்டக் கற்கைநெறியின் சிங்களப் பாடத்திற்கான விசேட வகுப்பு சனி மற்றும் ஞாயிறு நாள்களில் பி.ப. 5.30 - 6.30 வரை நடைபெறவுள்ளது. (ஆரம்பம் 20.01.2019 ஞாயிறு)

தொடர்புகளுக்கு **ஸ்ரீமாஸ்டர் 0777033729**

**164, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம் (Science Faculty Gate இற்கு முன்பாக (மேல்மாடி)**

## பெண் உதவியாளர் தேவை

யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியில் (நாச்சிமார் வீதி) இயங்கும் கல்வி நிறுவகம் ஒன்றிற்கு பெண் உதவியாளர் ஒருவர் (Clerk) தேவை. யாழ் எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. 19.01.2019 (சனி) காலை 10.00-11.00 நேரில் வரவும்.

161, இராமநாதன் வீதி (Science Faculty Gate இற்கு முன்பாக) யாழ்ப்பாணம்.

தொடர்பு 077 703 3729

## சிங்களம் புதிய பிரிவுகள் ஆரம்பம்

*அரச ஊழியர்/ தனியார் ஊழியர்/ பாடசாலை மாணவர்களுக்குரியது*

சிங்களம் எழுத, பேச , வாசிக்க, இலகுவான முறையில் கற்பிக்கப்படும். பாடசாலை மாணவர்களுக்கு பாடப்புத்தகத்திற்கு அமைவாக கற்பிக்கப்படும். சனி, ஞாயிறு மற்றும் வார நாட்களில் உங்கள் வசதிக்கேற்ப எவரும் எத்தினத்திலும் இணைந்து கொள்ளலாம்.

**ஆரம்பம் 19.01.2019 சனி அன்று**

**ஸ்ரீமாஸ்டர்**

இல 164, இராமனாதன் வீதி (Science Faculity Gate இற்கு முன்பாக மேல்மாடி) யாழ்ப்பாணம். விபரங்களுக்கு 077 703 3729 இல 41, நக்கா லேன் சுண்டுக்குளி யாழ்ப்பாணம்


MAJESTIC CINEPLEX



Jaffna Silver
10.45AM | 1.45PM | 4.45PM | 7.45PM | 10.45PM (Fri/Sat)
Jaffna Bronze
10.15AM | 1.15PM




Jaffna Platinum
1.15PM | 4.15PM | 7.15PM | 10.15PM (Fri/Sat)
Jaffna Bronze
4.15PM | 7.15PM | 10.15PM (Fri/Sat)

மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள் 011 5 999 999
CEYLON THEATRES

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் எமது உத்தியோகத்தர்
**சி. சிவரஞ்சிதன்** அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி சிவகுரு தேவி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,**
**யாழ். மாவட்டம்**

(CS 22656/15/18)

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் வேலை செய்வதற்கு மேசன், மின் இணைப்பாளர்கள் உடன் தேவை.

தொடர்புகளுக்கு
யாழ்வன் கட்டடப் பொருள் வாணிபம் 021 222 8286
இல 168, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 076 826 4859

## பற்றி சைக்கிள் விற்பனை

புத்தம் புதிய சிறிது காலம் பாவித்த பற்றி மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- செல்வம்
இல.107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.
077 910 7153

(CS/22625/11/17)

## யானைகள் அட்டகாசம்

பூநகரி பள்ளிக்குடா பகுதியில் ஐந்து காட்டு யானைகள் உட்புகுந்து நேற்றுக் காலை முதல் மாலை வரை நடமாடியதால் அந்தப் பகுதி மக்கள் அச்சத்தில் உறைந்தனர்.

பள்ளிக்குடா கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட செட்டியார் தரவெளி கிராமத்துக்குள்ளேயே இந்த யானைக்கூட்டம் உட்புகுந்துள்ளது. இவ்வாறு புகுந்த யானைகளை விரட்டுவதற்காக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் பொலிஸார் மற்றும் பிரதேச செயலகத்தினர் எனப் பலரும் முயன்ற போதிலும் யானைகளை விரட்ட முடியவில்லை.

சத்தவெடிகள் மூலம் பகலில் யானையை விரட்டுவது ஆபத்தான காரியம் என்பதால் மாலை வரை காத்திருந்து அவை விரட்டப்பட்டன என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ம-105)

## கொலம்பியாவில் குண்டுவெடிப்பு ஐவர் உயிரிழப்பு

தென்னமரிக்க நாடான கொலம்பியத் தலைநகரான பொகோடாவில் உள்ள பொலிஸ் அக்கடமி அருகே நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களைத் தவிர மேலும் 10 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடம் என்று சொல்லப்படுகிறது. இந்த விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொலம்பிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## மரண அறிவித்தல்கள்

### பெனடிக்ற் பிரான்சிஸ்



தாளையடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பெனடிக்ற் பிரான்சிஸ் நேற்று (17.01.2019) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பெனடிக்ற் - எலிஸ்ரேலியா தம்பதிகளின் அன்பு மகனும் அருளப்பு - சிசிலியா தம்பதிகளின் அன்பு மருமகனும் வனஜாவின் பாசமிகு கணவரும் பிரான்சினி (JSAC நிறுவனம்), காலஞ்சென்ற பிரசாத், பிரமிலா (Teacher) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயசுதர்சன் (விரிவுரையாளர்), றொஷான் (பெல்ஜியம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரசாத், ஹர்னிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற ஆகத்தம்மா, செபஸ்ரியாம்பிள்ளை மற்றும் லோறன்ஸ் (கனடா), ஜெறோசா, கட்சன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று (18.01.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு தாளையடி புனித. அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு தாளையடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 22659/15/18)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் தவரட்ணம்

*(M.K.S. நாவலப்பிட்டி)*

காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகவும் கொத்மலை வீதி, நாவலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் - தவரட்ணம் நேற்று (17.01.2019) வியாழக்கிழமை நாவலப்பிட்டி யில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மீனாட்சி தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் தவமலர், சிவராசா, சிவறஞ்சன், சிவப்பிரியா ஆகியோரின் அன்புத் தந்தையும் நந்தகுமார், சந்திராதேவி, றஞ்சினி, காலஞ்சென்ற சிவனேசன் மற்றும் செந்தில்நாதன் ஆகியோரின் மாமனாரும் தவராசா, இரத்தினராசா, காலஞ்சென்ற தவமணி மற்றும் சிவமணி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற பரஞ்சோதி, சுந்தரராஜா, சிவபாக்கியம, சந்திரா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2019) வெள்ளிக்கிழமை நாவலப்பிட்டியில் பி.ப. 4.00 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவலப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 22657/15/18)

### மரிய கிறிஸ்ரி றொபேட் (அருமை)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய மரியநாயகம் மரிய கிறிஸ்ரி றொபேட் (அருமை) கடந்த 23.12.2018 கனடாவில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான யோசப் மரியநாயகம் மேரி பீலிக்ஸ் நற்குணம் தம்பதிகளின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான அ. பி. முத்தையா (உபதேசியார்), அக்னொஸ் இசபெல்ல தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆன்மரியா சுகந்தினியின் அன்புக் கணவரும் மரின்கோபிகா (வர்த்தக வங்கி, யாழ்.), அருட்சகோதரி வேஜின்தனுகா (தி.கு.க.), லுகஜின் வேணுகா (மத்திய வங்கி, கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் விஜிதரனின் (பொறியியலாளர்) அன்பு மாமனாரும் மேரி மாகிறெற் அஞ்சலா (செல்வம்), அருட்பணி ம.லூயிஸ் மொன்பேட், மரிய கொறற்ரி சுசிலா (சுசி கனடா), காலஞ்சென்ற ம.அன்ரனி அல்பேட் ஆகியோரின் அன்புச்சகோதரனும் அமலநாதன் (மோகன் லைடன்), P.F.X. செல்வநாதன் (முன்னாள் கணக்குப் பதிவாளர் - நவீல்ட் பாடசாலை, கைதடி) மற்றும் காலஞ்சென்றவர்களான யோசவ் சுவாம்பிள்ளை (செல்லா), அருட்சகோ. P.M.J.ஜெகநாதன், P.M.A.அமிர்தநாதன் ஆகியோரின் மைத்துனரும் அன்ரனி பிரசாநாத் (மலேசியா), சர்பில் (கனடா), Dr. டோமினிக் அரவிந்தன் (லண்டன்), யூட்பிரணவன் (அயர்லாந்து), யோசவ் ஜெகந்தன், றெஜினோல்ட் சுகந்தன் (DFCC வங்கி, கொழும்பு), வேஜின் கீதாஞ்சலி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 19.01.2019 சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு புனித மரி யன்னை பேராலயத்தில் நடைபெறும் இறுதிப்பயண திருப்பலியைத் தொடர்ந்து சில்லாலை கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**92, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

### திருமதி கணேசன் செல்லம்மா



வடமராட்சி தெடுத்தனை கரவெட்டி கிழக்கு கரவெட்டியை பிறப்பிடமாகவும், சிங்கத்தின் வீடு கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணேசன் செல்லம்மா நேற்று (17.01.2019) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஐயாத்துரை சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கணேசன் (யார்க்கரு) அவர்களின் பாசமிகு மனைவியும், கந்தவனம், காலஞ்சென்ற ஐயாத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் யோகேஸ்வரி, கணேஸ்வரி, சிவபாலன், சிவயோகநாதன், சுகன்யா, நேசதுரை, ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவராசா, காலஞ்சென்ற சிறீகாந்தன், மற்றும் சிவயோகம், தியாகேஸ்வரி, மணிவண்ணன், சவுந்திரா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ரமேஷ் - பிரசாந்தி, ஜெயப்பிரகாஷ்-கௌதமி, உமா-பிரகாஷ், ஜெயப்பிரதாபன், றொசாந்தி-ரிமோத்தி, அருந்துஷன், அபிநயா, சுகேஷ், சுகேதா, குமரன், தேனுகா, சிவாசங்கர் அந்தியா, அஞ்சலா, ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆருஷி, ஆதவி, டருண், டியன் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2019) மு.ப 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சிங்கத்தின் வீடு, கரவெட்டி கிழக்கு கரவெட்டி.**

**தகவல்: குடும்பத்தினர்**
**021 226 3201**

## மரண அறிவித்தல்

பிறப்பு 01 . 10 . 1942



இறப்பு 16 . 01 . 2019

### சின்னப்பு சிவலிங்கம்

*(கரன் விளையாட்டுக்கழக பார் முன்னாள் உரிமையாளர்)*

கோணாற் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் ஓட்டு மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு சிவலிங்கம் (16.01.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஓட்டுமடம், யாழ்ப்பாணம்**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 9791051**

# புதிய அரசமைப்பு உருவாக்கத்தால் இலங்கை 9 துண்டுகளாக உடையும்

## பூகோள இலங்கையர் ஒன்றியம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 18

அரசால் அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட புதிய அரசமைப்பின் மூலம், இலங்கை ஒன்பது துண்டுகளாக உடைக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 'ஏக்கிய' என்ற சிங்களப் பதத்தை மாத்திரம் உபயோகித்து விட்டு, நாட்டைப் பிரிக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் இந்த புதிய அரசமைப்பு முயற்சிக்கு நாட்டு மக்கள் அனைவரும் எதிர்ப்பை வெளிப்படுத்தி நாட்டைப் பிரிக்கும் நோக்கில் செயற்படுபவர்களின் நடவடிக்கைகளை தோற்கடிக்க வேண்டும் என பூகோள இலங்கையர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

புதிய அரசமைப்புத் தொடர்பில் பூகோள இலங்கையர் ஒன்றியம் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தற்போதைய அரசால் அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட புதிய அரசமைப்பு யோசனையின் மூலம் ஒன்றிணைந்துள்ள இந்த இலங்கையை ஒன்பது நாடுகளாகப் பிரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று நாங்கள் கருதுகின்றோம். அரசமைப்பு நிபுணர் குழுவின் அறிக்கையின் முதலாவது பிரிவில் எதிர்காலத்தில் நாடு ஒன்றிணைந்த வகையில் காணப்படாது என்ற விடயம் தெளிவாகப் புலப்படுகின்றது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களை செயற்படுத்தும் மத்திய அரசு மற்றும் மாகாண சபைகள் இணைந்ததே ஒருமித்த (ஏக்கிய) சுதந்திரமானதும், சுயாதீனமானதுமான இலங்கை நாடு ஆகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் குறிப்பிட்டுள்ளபடி பார்க்கையில் இலங்கையானது கொழும்பு அரசு மற்றும் மாகாண சபைகள் ஊடாக நிர்வகிக்கப்படும் பிரிந்த அல்லது பெடரல் நாடு என்பது தெளிவாகின்றது. இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள 'ஏக்கிய இராஜ்ஜிய' என்ற சிங்கள பதத்திற்கு பொருந்தக்கூடியதான 'ஒருமித்த நாடு' என்ற தமிழ் பதம் சேர்க்கப்பட்டுள்ளது.

மேலும் மாகாண சபைகள் ஊடாக நியமிக்கப்பட்ட இரண்டாவது பிரதிநிதிகள் குழு சமர்ப்பித்துள்ள யோசனைகளில், பொலிஸ் அதிகாரங்கள் கொழும்பு அரசில் இருந்து உருவான மாகாண பொலிஸ் ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு ஒவ்வொரு மாகாணங்களிலும் உள்ள காணி அதிகாரங்கள் அந்த மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், மாகாண சபைகளுக்குரிய நிதி ஒதுக்கீட்டில் இருந்து நிதி நிர்வாகத்தை மேற்கொள்ளும் அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுவதன் ஊடாக கொழும்பு அரசில் இருந்து பிரிந்து முழுமையாக சுயாதீனமாகச் செயற்படுவதற்கு அவசியமான தேவைப்பாடுகள் அனைத்தும் பூர்த்திசெய்து கொடுக்கப்பட்டுள்ளன.

குறித்த அரசமைப்பு நிபுணர்குழு அறிக்கையின் 12ஆவது பிரிவில் கொழும்புக்குரிய அதிகாரங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றின்படி நோக்குகையில் கொழும்பு இருந்து பிரிந்த சுதந்திரமானதும், சுயாதீன மானதுமான மாகாணசபைகள் உருவாகும் என்பது புலனாகின்றது. இதனூடாக ஒருமித்த இலங்கை நாட்டைப் பிரிப்பதற்கான அடிப்படைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் பிரிந்த பெடரல் நாடு ஒன்றினை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

எனவே 'ஏக்கிய' என்ற சிங்கள பதத்தை மாத்திரம் உபயோகித்துவிட்டு, நாட்டைப்பிரிக்கும்நோக்கில்முன்னெடுக்கப்படும் இந்த புதிய அரசமைப்பு முயற்சிக்கு நாட்டு மக்கள் அனைவரும் எதிர்ப்பினை வெளிப்படுத்தி, நாட்டைப் பிரிக்கும் நோக்கில் செயற்படுபவர்களின் நடவடிக்கைகளை தோற்கடிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது. (ம-61)

## மகா சங்கத்தினரின் ஆசீர் இன்றி அர்சமைப்பை முன்வைக்காதீர்கள்

### பௌத்த சாசன பணிக்குழு அறிக்கை

கொழும்பு, ஜன. 18

மகாசங்கத்தினரின்ஆசீர்வாதமின்றிபுதியஅரசமைப்பை முன்வைக்க வேண்டாம் என்றுபௌத்தசாசனபணிக்குழுஅறிக்கைவெளியிட்டுள்ளது.

புதிய அரசமைப்புத் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள நிபுணர் குழு அறிக்கையில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்படுவது தொடர்பான பிரிவில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். பௌத்த மதத்துக்கான முன்னுரிமையை திரும்பப் பெறுவதற்கான நகர்வுகளும்முன்னெடுக்கப்பட்டுள்ளன. பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையை பாதிக்கும் வகையிலான எந்தவொரு திருத்தங்களும் மேற்கொள்ளப்படாது என அரசு ஏற்கனவே உறுதியளித்திருந்த போதிலும், வழிகாட்டால் குழுவின் நிபுணர் குழு அறிக்கை அதற்கு முரணானதாக விளங்குகிறது - என்று அந்த அறிக்கையில் மேலும்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

## விபத்தில் குடும்பத் தலைவர் சாவு

யாழ்ப்பாணம், ஜன. 18

வீதியை கடக்க முயன்ற குடும்பத்தலைவர் விபத்தில் சிக்கி சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பயனின்றி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று உயிரிழந்தார். யாழ்ப்பாணம் ஆறுகால் மடத்தைச் சேர்ந்த ஐயம்பிள்ளைநடராசா(வயது68) என்ற நபரே அவ்வாறு உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

ஆறுகால்மடத்தைச்சேர்ந்த குறித்த நபர் நேற்றுமுன்தினம் காலை யாழ்ப்பாணம் மருத்துவமனைக்குமுன்னதாகவீதியைக்கடக்கமுற்பட்டுள்ளார். அப்போது அந்த வழியே வந்த உந்துருளி குறித்த நபரை மோதியுள்ளது. இதனால்அவர்படுகாயமடைந்தார். அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார். இந்த இறப்புத் தொடர்பான விசாரணையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார்மேற்கொண்டார். (ம-8)

## தீவகம், குறிகாட்டுவானில் சர்வமதப் பொங்கல் நேற்று!

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ்ப்பாணம் தீவகம், குறிகாட்டுவானில் சர்வமதப் பொங்கல் நேற்று நடைபெற்றது. தீவக சிவில் சமூகம், புங்குடுதீவு உலக மையம், குறிகாட்டுவான் பொலிஸ் நிலையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்தப் பொங்கல் நிகழ்வு நடைபெற்றது. குறிகாட்டுவான் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் கலந்து கொண்டார். நிகழ்வில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ம-7)





## கதிர்காமர் கொலை தொடர்பில் முன்னாள் போராளி கைதானார்

கொழும்பு, ஜன. 18

லக்ஸ்மன் கதிர்காமர் (முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர்) கொலை தொடர்பில் விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் ஜேர்மனியில் கைதாகியுள்ளார். ஜீ.நவனீதன் என்ற 39 வயதான குறித்த நபர் இந்தக் கொலையை நடத்திய இரகசியக் குழு ஒன்றின் உறுப்பினர் என்று ஜேர்மன் அதிகாரிகள் கூறுகின்றனர். லக்ஸ்மன் கதிர்காமர் 2005ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

**மரண அறிவித்தல்**



**மருதப்பா கந்தசாமி**

*(ஓய்வுபெற்ற நீதிமன்ற பதிவாளர்)*

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற நீதிமன்ற பதிவாளர் மருதப்பா கந்தசாமி நேற்று (17.01.2019) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதப்பா-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கபிரியேல் - அன்னம்மா ஆகியோரின் மருமகனும் நீற்றாவின் அன்பு கணவரும் Dr.யசித்தா (UK), ரவீந்திரா (Engineer -கனடா), Dr.யமுனா (USA) ஆகியோரின் ஆசைமிகு தந்தையாரும் அன்ரன் டீ மடொன்சா (IT Consultant UK), சித்திரா (Canada), டயன்(EngineerUSA)ஆகியோரின்அன்புமாமனாரும்கீர்த்தனன், யெயந்தன், சரணியா, கவின், றெக்சானா, நீகன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்பு அறிவிக்கப்படும்.

**32/3 Somasundaram அவெனியூ**
**சுண்டிக்குளி,**
**யாழ்ப்பாணம்**

**தகவல்:**
**மகள் Dr.ஜசிந்தா**

## நெல்சிப் திட்டத்தினுடைய இரண்டாம் கட்டம் 70 மில். டொலரில் முன்னெடுக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 18

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட 4 மாகாணங்களில் நெல்சிப் திட்டத்தின் இரண்டாம் கட்டம் 70 மில்லியன் அமெரிக்க டொலரில் முன்னெடுப்பதற்கான ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நிதிப் பங்களிப்பில் உலக வங்கியால் வடக்கு, கிழக்கு, வடமேல், ஊவா ஆகிய நான்கு மாகாணங்களிலும் தலா 17.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியில் அதாவது சுமார் 3 ஆயிரத்து 200 மில்லியன் ரூபா வீதம் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

குறித்ததிட்டம்தொடர்பில்நேற்றையதினம்உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாட்டில் வோஷிங்டன் பிரதிநிதிகளுடன் அமைச்சின் அலுவலர்கள், மாகாண அலுவலர்கள் என முத்தரப்புச்சந்திப்பு இடம்பெற்றது. இதன்பிரகாரம்ஏப்ரல் மாதம் இடம்பெறும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2019 மே மாதம் ஆரம்பிக்கும் திட்டங்கள் 2022ஆம் ஆண்டு டிசெம்பரில் முடிவுறுத்தப்படும். இதற்கான ஆய்வுப் பணிகள் மக்களின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட உள்ளன. (ம-105)

# இணக்க சபைகள்

க.கலைச்சந்திரன்



நீதிமன்ற அமைப்புக்கு வெளியில் பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ளும் உபாயத்தை 'இணக்கப்பாடு செய்தல்' என்று அறிமுகப்படுத்த முடியும். இலங்கையில் நீதித்துறையின் பலமும், பலவீனமும் பரவலாகப் பேசப்பட்டு வரும் இன்றைய காலகட்டத்தில் சட்டத்துறையின் தாமதங்கள் பொதுமக்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்தத்துறையைச் சரியான பாதையில் அணுகவேண்டியதன் அவசியத்தை உணர்த்தியுள்ளன. அர்த்தமுள்ள மனித இடைத்தொடர்புகளுக்கு நீண்டகாலத் தீங்கு விளைவிக்கும் ஒன்றாக முரண்பாடுகள் காணப்படுகின்றன. இது உலகளாவிய ரீதியில் பொதுமையானதாக இருப்பினும் இலங்கையில் நீதிமன்ற வழக்குகள் தாமதமாதல் அதனால் ஏற்படக்கூடிய செலவீனங்கள் மற்றும் ஏனைய உளத் தாக்கங்கள் பற்றியும் விழிப்படையும் நிலை உருவாகியுள்ளது.

பிணக்கு அல்லது முரண்பாடு ஏற்படுகின்ற போது மனிதன் எவ்வாறு நடந்துகொள்கின்றான் என்பதும் அந்தப் பிணக்கைத் தீர்த்துக்கொள்ள எவ்வாறான பொறிமுறைகளைப் பயன்படுத்துகின்றான் என்பதும் அந்தப் பிணக்கின் தீவிரத்தன்மையைப் பொறுத்ததாகும். சாதாரணமாக பிணக்கு ஒன்று தோன்றும்போது நீதிமன்றத்தீர்வுப் பொறிமுறையை நோக்கியே மக்கள் நகர்வது என்பது பொதுவான நிகழ்வாக உள்ளதனைக் காணலாம். நீதிமன்றத் தீர்வு முறைமைக்கு அப்பால் பல்வேறுபட்ட மாற்றுப் பொறிமுறைகள் காணப்படுகின்றன. அதன் தாற்பரியங்கள் பிணக்குத் தீர்வியலில் உன்னதமானவை என்பது பற்றி நம்மில் பலருக்கு தெரியாத விடயமாகும்.

**இலங்கையின் புராதன நீதி பரிபாலனம்**

இலங்கையில் மேலைத்தேய ஆளுநர்களால் இன்றைய முறையான நீதி நிர்வாக அமைப்பான நீதிமன்ற முறைமை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இலங்கை உள்ளிட்ட பல ஆசிய நாடுகளில் சம்பிரதாயபூர்வமாகத் தொன்று தொட்டு வழங்கி வரும் பிணக்குத் தீர்க்கும் சில நடைமுறைகள் இருந்து வந்துள்ளன. இந்த நாட்டின் அயல் இராட்சியமான இந்தியாவிலும் 'பஞ்சாயத்து' என்று அழைக்கப்படும் இணக்கம் செய்யும் கிராமம் சார்ந்த நிறுவனம் புராதன காலத்திலிருந்து செயற்பட்டு வருகின்றது. அதனைத் தழுவிய வகையில் இலங்கையிலும் பண்டுகாபய அரசனால் அறிமுகம் செய்யப்பட்ட 'கிராமசபை' என்றும் பிணக்குத் தீர்க்கும் செயல்முறைத் திட்டத்தினுள் நீதி வழங்கும் பொறிமுறை உள்வாங்கப்பட்டது. இந்த நடைமுறை 1833ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களால் 'எதிரிடை' வழக்கு விசாரணை முறையாக மாற்றியமைக்கப்பட்டது. சுதந்திரம் அடைந்ததன் பின்னரான காலத்தில் பிணக்குகளுக்குத் தீர்வுகாணும் முயற்சிகள் நாடாளுமன்ற சட்டத்தின் மூலமாக நிறுவனமயப்படுத்தப்பட்டது.


இலங்கையின் நவீன இணக்கமானது, 1958ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க இணக்க சபைகள் சட்டத்தால் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் 1988ஆம் ஆண்டின் 72ஆம் இலக்க இணக்க சபைகள் சட்டத்தால் மாற்றீடு செய்யப்பட்டு பின்பு 2003ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க இணக்க சட்டத்தால் மேலும் விரிவாக்கப்பட்டுள்ளது.

**பின்னணி**

இலங்கையில் ஆரம்பகாலத்தில் அரசர்கள் கிராமசபைகள் மூலமும் பின்னர் ஆங்கிலேயர்கள் எதிரிடைவழக்கு முறைமை மூலமும் பிணக்குகளைச் சமரசப்படுத்தும் முயற்சியை நெறிப்படுத்தினார்கள். இலங்கையின் சுதந்திர அரசு 1958ஆம் ஆண்டு 10ஆம் இலக்க இணக்க சபைகள் சட்டத்தினூடாக இணக்கசபைகளை நாடளாவிய ரீதியில் நிறுவியது. உண்மையில் இந்தக் கன்னி முயற்சி இலங்கைவாழ் மக்களை ஐக்கியப்படுத்தும் உன்னத நடைமுறையை பெற்றுக்கொடுத்தது. இந்தச் சட்டத்தால் தொகுப்பு வாரியான நீதிமன்ற அமைப்புக்கு வெளியாக இலகுவான முறையில் குறைந்த செலவில் குறுகிய காலத்தினுள் சொந்தப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு வழிகாட்டுவதே நோக்கமாக இருந்தது. துரதிஷ்டவசமாக இந்த இணக்க சபைகளுக்கு அரசியல் சார்ந்த தலையீட்டினால் செய்யப்பட்ட நியமனங்கள் மற்றும் இதற்குச் சமாந்தரமாகச் செய்யப்பட்ட அரசியல் கைகொடுத்தல்கள் காரணமாக இணக்க சபைகள் பற்றிய பொதுமக்களிடமிருந்த நம்பிக்கைக்குப் பங்கம் ஏற்பட்டது. பிணக்குகளைத் தீர்ப்பதில் இருந்த இக்கட்டான நிலைமைகள் மற்றும் சமனிலையற்ற தன்மைகள் காரணமாக இணக்க சபையின் செயற்பாடுகள் முடக்க நிலையை எட்டியன.

1978ஆம் ஆண்டு இணக்க சபைகள் முறை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இணக்கசபைகள் ஒழிக்கப்பட்ட மிகக்குறுகிய காலத்திலேயே இணக்க சபைகளால் ஆற்றப்பட்ட விலைமதிக்க முடியாத சேவையை இந்த நாடும் மக்களும் நன்கு உணர்ந்தனர். இந்த எதிர்பார்ப்பை நிவர்த்தி செய்வதற்காகவும் மக்களது தேவைகளை நிறை வேற்றுவதற்காகவும் நீதிமன்றத்தில் காலம் காலமாகத் தேங்கிக் கிடக்கும் வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான முன்னேற்பாடாகவும். 1988ஆம் ஆண்டின் 72ஆம் இலக்கம் கொண்ட இணக்க சபைகள் சட்டம் நாடாளுமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்தச் சட்டத்தின் ஊடாக இலங்கையில் இணக்க நடைமுறை அறிமுகம் செய்யப்பட்டது. இன்று நாட்டின் சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் தலா ஒவ்வோர் இணக்க சபை என்ற அடிப்படையில் பிரதேசத்துக்கு உட்பட்ட பிரச்சினைகளை பிரதேசத்தினுள்ளேயே இயலுமானவரை முடிவுறுத்துவதற்கு ஏதுவாக நிறு வப்பட்டுள்ளது.

நீதித்துறை சாராத ஏனைய அனைத்துச் செயன்முறைகளும் பிணக்குத் தீர்க்கும் மாற்று வழிகளாகவே கொள்ளத்தக்கன.



நாளாந்த வாழ்க்கையில் பெறுமதியான விளைவுகளை நிதர்சனமாகக் காண்பித்துக் கொண்டிருப்பவை இந்த இணக்கச் செயற்பாடுகளாகும். முதலாவதாக இணக்கம் என்பது ஒரு முன்னோக்கிச் செல்லும் ஒரு செயற்பாடாகும். யார் பிழை செய்தார்கள்? யார் பிழை செய்யவில்லை என்றோ, எது சரி எதுபிழை என்றோ கருத்தில் கொள்ளப்படாததால் கடந்தகால கசப்பான சம்பவங்கள் மறக்கப்பட்டு சுபீட்சமான எதிர்காலம் நோக்கி முனைப்பாக நிற்கின்றது. இரண்டாவதாகப் பிணக்கில் சம்மந்தப்பட்ட தரப்பினர்களின் வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமைகளை அறிந்து அதன்படி செயற்பட முடிகின்றது. இறுதியில் 'விருப்புக்களை அடிப்படையாகக் கொண்ட இணக்கத்தில்' உறுதியான நிலைப்பாடுகளுக்குள்ள முக்கியத்துவம் குறைந்து செல்கின்றது. மேலும் பிணக்குடன் தொடர்புடைய இரண்டு திறத்தவர்களும் தங்களது பிணக்கினை சுமூகமாகப் பேசித் தீர்வுகாண நடுநிலையான மூன்றாம் திறத்தவர்கள் உதவி செய்தல் இங்கு நடைபெறும்.

**நன்மைகள்**

மனிதனின் வாழ்வியல் வரலாற்றில் பலவிதமான முரண்பாடுகளையும் தீர்க்க வல்ல செயல்வழியாக இணக்கம் இருந்து வருகின்றது. இணக்கம், பிணக்குகளைத் தீர்ப்பது மட்டுமன்றி பிணக்குகளைத் தவிர்ப்பதற்கும் உதவக்கூடியது. இணக்கம் இன்று அதிகமானோரால் விரும்பப்படுவதற்கு முதன்மைக் காரணம் இணக்கத்துக்கு வரும் முரண்பாட்டின் சிக்கல்கள் தரப்பினர்களாலேயே முக்கியமானவையாவை என இனங்காணப்பட்டு சகலரும் தத்தமது எண்ணங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்த சந்தர்ப்பம் கிடைப்பதோடு மனத்திருப்தியையும் இரண்டு தரப்பினர்களுக்கும் வழங்குகின்றது. இங்கு வெளியாளரின் தலையீடு இன்றி மூன்றாம் தரப்பினரின் அனுசரனையுடன் இரண்டு தரப்பினர்களினதும் ஒன்றிணைந்த முயற்சியால் பெறப்பட்டதென்பதே மிகவும் முக்கிய மான தொன்றாகக் கவனிக்கத்தக்கது. தாமே எடுத்த முடிவுகளைத் தாமே நடை முறைப்படுத்த வேண்டும் என்ற முனைப்பு, சுயநிர்ணயம் மற்றும் நிலைபேறான தீர்வாகவும் இது அமைந்து விடுகின்றது.

தீர்மானம் எடுக்கும் சக்தி இரண்டு தரப்பினர்களிடமும் காணப்படுதல் இதன் சிறப்பு ஆகும். பிணக்குக்குத் தீர்வு காண்பது மாத்திரமன்றி மாறாக அந்தப் பிணக்கிற்கான மூலகாரணியை அறிந்து அகற்றுதல். சாத்தியமாகும் போது உறவுகளை மீளமைத்தல் மற்றும் குறிப்பிட்ட பிணக்கு மீளெழாத வண்ணம் முரண்பாட்டுக்கான காரணியை அகற்றுதல் என்பன ஏனைய தீர்வுப் பொறிமுறைகளில் காண முடியாத சிறப்பம்சம் ஆகும். இணக்கமானது செலவு குறைந்த செயல்வழி, விரைவான தீர்வு, வெற்றி வெற்றி என்ற இலக்கு நோக்கிய தீர்வு, நன்மைகளை நோக்கிய செயல்வழி விருத்தி, ஆக்க பூர்வமான தீர்வை நோக்கிய தேடல், தனிமனித ஆளுமை விருத்தி, மனித இடைத்தொடர்புகளுக்கு இறுக்கத் தன்மையை ஏற்படுத்தல், நடைமுறைச் சாத்தியமான நிலைத்து நிற்கக் கூடிய தீர்வுகள், இரகசியத்தன்மை பேணப்படல் போன்ற விடயதானங்கள் இங்கு முன்னுரிமைப்படுத்தப்படும்.

பிணக்குத் தீர்வியலில் வெற்றியானது சுயநிர்ணயம், ஒத்துழைப்பு, மதிப்பளித்தல், நீதி, சமத்துவம், அனுமதி வலுப்படுத்தல், இசைந்துகொடுத்தல் ஆகிய மேலான கோட்பாடுகள் எத்துணையளவு வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றது என்பதில் தான் தங்கியுள்ளது. இவை அனைத்தையும் பரீட்சித்துப் பார்க்கும் ஒரு களமாக இணக்கச் செயலமர்வு காணப்படுகின்றது.

**இணக்கக் கட்டமைப்பு**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் செயற்படும் இணக்க சபைகள் ஆணைக்குழு இதனை நிர்வகிக்கும். இந்தச் சுதந்திர ஆணைக்குழுவால் இணக்கசபை உறுப்பினர்களின் நியமனம், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

1988ஆம் ஆண்டின் 72ஆம் இலக்க இணக்க சபைகள் சட்டவரைவு ஊடாக இலங்கையில் சனசமூக இணக்க சபைகள் நிறுவப்பட்டன. மேலும் இந்தச் சட்டம் 1997ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கச்சட்டம், 2011ஆம் ஆண்டின் 4ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 2016ஆம் ஆண்டின் 9ஆம்இலக்கச்சட்டம் என்பவற்றால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் ஒரு பிரதேச செயலகத்துக்கு ஓர் இணக்க சபை என்ற அடிப்படையில் ஏறத்தாழ 330 இணக்க சபைகள் இன்று இலங்கையில் செயற்பட்டு வருகின்றன. அண்ணளவாக 8 ஆயிரத்து 500 இற்கும் அதிகமான இணக்க சபை உறுப்பினர்கள் பணியாற்றிவருகின்றார்கள். மேலும் இந்தச் சபைகளின் செயற்பாடுகள் மற்றும் முன்னேற்றம் கட்டுப்பாடு என்பன மாவட்ட இணக்க சபைப் பயிற்றுவிப்பாளர்களால் ஒருங்கிணைத்து நிர்வகிக்கப்படும்.

பொதுமக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏதுவாக உருவாக்கப்பட்ட சனசமூக இணக்க சபைகளுக்கு மேலதிகமாக சிறப்பு இணக்க சபைகள் (சுனாமி), சிறப்பு இணக்க சபைகள் (காணி), பாடசாலை இணக்கசபை நிகழ்ச்சித் திட்டம், சூழல் சம்மந்தமான இணக்கசபை, வர்த்தகம் சார்ந்த இணக்கசபை என்பன கூட காணப்படுவது முக்கியமானதாகும்.

இலங்கையில் பிணக்குத் தீர்க்கும் பாரம்பரியத்தை உற்று நோக்கும்போது முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பதில் இணக்க நடைமுறை வெற்றியடைந்துள்ளது என்றால் மிகையாகாது. ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கைக்கும் இன்றியமையாத ஓர் எண்ணக்கருவாக பிணக்குத் தீர்த்தல் மற்றும் சவால்களை வெற்றிகொள்ளுதல் என்பன காணப்படும் இன்றைய காலகட்டத்தில் இணக்கம் சார்பாகவும் இணக்க சபைகள் தொடர்பாகவும் ஒவ்வொரு தனிமனிதனும் அறிந்து கொள்ளும் போது எமது வாழ்க்கையிலே நாம் தெரிந்தோ தெரியாமலோ முகங்கொடுக்கும் பல முரண்பாடுகளை தீர்த்துக்கொள்ள முடியும். இதன் காரணமாகவே இன்று உலகலாவிய ரீதியில் இணக்கம் என்பது பலதுறைசார் ரீதியாக ஊக்குவிக்கப்படுவதனைக் காணலாம். இது போன்ற விடயங்களை நாம் ஒவ்வொருவரும் அறிந்து கொள்வதன் மூலம் முரண்பாடுகளுக்கு சுமூகமாகவும் சமாதானமாகவும் தீர்வு காணமுடியும். இதன் வாயிலாக சமூக அமைதிக்கும் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் பெரிய பங்களிப்பை ஆற்ற முடியும் என்பது திண்ணம்.

*தவிசாளர்*
*இணக்கச சபை*
*காரைநகர்.*

## டிலான் சிறப்பாட்டம்
# புங்குடுதீவு நசெரத் வி.க. வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 18
புங்குடுதீவு சென். சேவியர் விளையாட்டுக் கழக அணியை 4:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றது புங்குடுதீவு நசெரத் விளையாட்டுக்கழக அணி.
புங்குடுதீவு இறுப்பிட்டி சனசமூக நிலையத்தின் 69ஆவது ஆண்டு நிறைவு மற்றும் பொங்கல் விழாவை முன்னிட்டு, தீவக கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்திய தொடரின் இறுதி ஆட்டம் கடந்த வாரம் இடம் பெற்றது. புங்குடுதீவு சென். சேவியர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து. புங்குடுதீவு நசெரத் விளையாட்டுக்கழகம் இறுதி ஆட்டத்தில் மோதியது. ஆட்டம் புங்குடுதீவு இறுப்பிட்டி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. ஆட்டத்தின் முதல் பாதியில் நசெரத் விளையாட்டுக் கழகம் ஆதிக்கம் செலுத்தியது. அந்த அணி வீரர் டிலான் 3 கோல்களை அடித்தார். முதல் பாதி முடிவடையும்போது நசெரத் விளையாட்டுக்கழகம் 3:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.
இரண்டாவது பாதி ஆட்டத்தில் சென். சேவியர் விளையாட்டுக்கழக அணிக்கு முதலாவது கோலைப் பதிவு செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்து 10ஆவது நிமிடத்தில் தனுராஜ் தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவு செய்ய 3:1 என்ற நிலைக்கு ஆட்டம் மாறியது. நசெரத் விளையாட்டுக்கழகம் அதற்கும் பதிலடி கொடுத்தது. அந்த அணி வீரர் விமேஸ் தனது அணிக்காக 4ஆவது கோலைப் பதிவு செய்ய 4:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது நசெரத் விளையாட்டுக்கழகம். (ஒ.23)



# போட்டிகள் ஆரம்பம்

சாவகச்சேரி, ஜன. 18
தென்மராட்சி பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான குழு நிலைப் போட்டிகள் ஆரம்பமான நிலையில் நாளை மு.ப. 9 மணிக்கு இருபாலருக்குமான சதுரங்கப் போட்டிகளும், பி.ப. 1 மணிக்கு மேசைப்பந்தாட்டப் போட்டிகளும் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறுமென பிரதேச செயலக விளையாட்டு அலகினர் அறிவித்துள்ளனர். (ஒ.9)

## மகளிர் கிரிக்கெட் அணி தெரிவு

யாழ்ப்பாணம், ஜன. 18
யாழ்ப்பாண மாவட்ட மகளிர் துடுப்பாட்ட அணியைத் தெரிவு செய்வதற்கான பயிற்சிகள் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. பயிற்சியில் பங்குபற்ற விரும்பும் பெண்கள், உரிய நேரத்துக்கு மைதானத்துக்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ஒ.23)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 18
யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அங்கத்துவக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயுல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ஒ.23)





# கரப்பந்தாட்டத் தொடர் முல்லைநிலா வி.க. வெற்றி

வவுனியா, ஜன. 18
கல்மடு தாளம்பன் முல்லைநிலா விளையாட்டுக்கழகம், வவுனியா புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி கிண்ணம் வென்றது.
வவுனியா புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகம் பொங்கல் விழவை முன்னிட்டு பொ.பத்மநாதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 4 பேர் பங்குபற்றும் கரப்பந்தாட்டத் தொடரை நடத்தியது. மின்னொளியில் இறுதியாட்டம், வவுனியா புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.
கல்மடு தாளம்பன் முல்லைநிலா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வவுனியா புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதியது. 27:26 என்ற புள்ளி அடிப்படையில் கல்மடு தாளம்பன் முல்லைநிலா விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
வவுனியா புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழக அணி வீரர் றுக்சன் சிறந்த வீரராகத் தெரிவு செய்யப்பட்டார். (ஒ.23)

# விளையாட்டுக்கழக களஞ்சியறை திறந்துவைப்பு

வவுனியா, ஜன. 18
வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் செ.மயூரனின் 2017ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட புளியங்குளம் புரட்சி விளையாட்டுக்கழகத்துக்கான களஞ்சிய அறை கடந்த செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.
5 லட்சம் ரூபாவில் அமைக்கப்பட்ட கட்டடத்தை முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன் நாடாவெட்டித் திறந்து வைத்தார்.
வவுனியா வடக்கு பிரதேசச் செயலர் க.ப்ரந்தாமன், பிரதேச சபையின் உபதவிசாளர் க.யோகராயா, புளியங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொதுமக்கள், இளைஞர்கள் என்று பலர் கலந்து கொண்டனர். (ஒ.110)

# அகமெட்டை கடிந்த 'கூல் கப்டன்' டோனி

நிதானத்துக்கும் விவேகத்துக்கும் புகழ் பெற்றவர் டோனி. ஆனால் அவரும் சில வேளைகளில் கோபமடைவார். அவர் எப்போதும் இந்திய அணி சார்ந்த வீரர்கள் மீதுதான் அவர் கோபப்படுவார் என்பது அனைவரும் அறிந்ததே.
அடிலெய்ட்டில் இடம்பெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி வீரர் டோனி கடுமையாகக் களைப்படைந்து தசைப் பிடிப்புக்கு ஆளானார். இந்த நிலையில் மருத்துவர்கள் வந்து சிகிச்சை அளிக்க வேண்டியிருந்தது.
அப்போதுதான் பதில் வீரர்கள் கலீல் அகமெட், சாஹல் இருவரும் தண்ணீர் போத்தல்களைக் கொண்டு மைதானத்துக்குள் வந்தனர். அப்போது கலீல் அகமெட் உணர்ச்சி வசப்பட்டு அவசரத்தில் 'பிட்சில்' நடந்து டோனியிடம் சென்றார்.
இதைக் கவனித்த டோனி 'பிட்சில்' நடந்து வருவது கூடாது. மேலும் ஸ்பைக் காலணி பிட்சை சேதம் செய்தாலும் செய்யலாம். எனவே சுற்றி வா என்று சற்றே கோபமாகச் செய்கை செய்த காணொலி சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றது.

# ஞானம்ஸை வீழ்த்தி வென்றது சிவன் வி.க.




யாழ்ப்பாணம், ஜன. 18
கரவெட்டி ஞானம்ஸ் அணியை 7 இலக்குகளால் வீழ்த்தி வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்தது சாவகச்சேரி சிவன் அணி.
மைக்கல் விளையாட்டுக்கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்திய அணிக்கு 11 பேர் பங்குபற்றும் 10 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட மென் பந்து துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் கழக மைதானத்தில் இடம் பெற்றது.
சாவகச்சேரி சிவன் அணியை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றது. ஜொனி 23 ஓட்டங்களையும், திவா 14 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சாவகச்சேரி சிவன் அணியின் சார்பாக ஜென்மன் 3 இலக்குகளையும், அனுப்பிரியன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாவக்சேரி சிவன் அணியினர் 6.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தனர். லது 27 ஓட்டங்களையும், கௌசி 21 ஓட்டங்களையும், அனுப்பிரியன் 18 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கரவெட்டி ஞானம்ஸ் அணியின் சார்பாக சேந்திரன் 2 இலக்குகளையும், றஜீபன் 1 இலக்கினையும் கைப்பற்றினர். (ஒ.23)





# ரோஜர் பெடரர், வோஸ்னியாக்கி 3ஆவது சுற்றுக்கு முன்னேற்றம்

ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் போட்டி மெல்போர்ணில் கடந்த 14ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 2ஆவது சுற்று ஆட்டங்களில் ரோஜர் பெடரர், வோஸ்னியாக்கி முன்னிலை பெற்றனர்.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவின் ஓர் ஆட்டத்தில் நடப்புச் சம்பியனான ரோஜர் பெடரர் இங்கிலாந்தின் டான் ஈவன்ஸை எதிர்கொண்டார். இதில் ரோஜர் பெடரர் 7:6, 7:6, 6:3 என்ற நேர் செட் கணக்கில் வென்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் 3ஆம் நிலை வீராங்கனை வோஸ்னியாக்கி 6:1, 6:3 என்ற நேர்செட் கணக்கில் சுவீடன் வீராங்கனை ஜோகர்னா லார்சனை வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

# கோக்லிக்கு லாங்கர் புகழாரம்

கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் போன்று இந்திய அணித் தலைவர் கோக்லி விளையாடிவருகிறார் என்று ஆஸ்திரேலிய அணியின் தலைமைப் பயிற்சியாளர் ஜஸ்டின் லாங்கர் கூறினார்.
அடிலெய்டில் இடம்பெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 6 இலக்குகளால் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் கோக்லி 104 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்கு வித்திட்டார்.
இதுகுறித்து ஜஸ்டின் லாங்கர் தெரிவிக்கையில்;
இரண்டாவது ஒருநாள் போட்டியில் விராட் கோக்லி அபாரமாக விளையாடினார். சமீபகாலமாக கோக்லியின் ஆட்டம் நம்பமுடியாத வகையில் சிறப்பாக உள்ளது.
கிரிக்கெட் ஜாம்பவான் சச்சினின் ஆட்டத்தை மிகவும் அருகில் இருந்து பார்த்திருக்கிறேன். அவரைப் போன்றே கோக்லி விளையாடுகிறார். 360 டிகிரி கோணங்களிலும் அவர் விளையாடி அசத்துகிறார்.
நான் ஒரு அணியை உருவாக்கினால் அதில் சச்சின், கோக்லி இருவருக்கும் இடம் உள்ளது - என்றார்.



# ஆட்டத்தை முடிப்பதில் சிறந்த வீரர் டோனி

## மனம் திறந்தார் தினேஸ் கார்த்திக்



இந்தியா- ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டியின் போது தினேஷ் கார்த்திக்கும் டோனியும் சிறப்பாக விளையாடி வெற்றியைப் பதிவு செய்தனர். இந்த நிலையில் டோனியின் களைப்புப் பற்றியும் அவருடன் ஆடிய அனுபவம் பற்றியும் தினேஷ் கார்த்திக் மனம் திறந்துள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:
"டோனி இப்படிப்பட்ட இன்னிங்ஸ்களை மீண்டும் மீண்டும் ஆடிவருகிறார். ஆகவே அவர் ஆடுவதைப் பார்ப்பதும் போட்டியை சிறப்பாக முடித்துக் கொடுப்பதும் பார்ப்பதற்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.
நான் அதிகம் ஒன்று, இரண்டு ஓட்டங்களை ஓடி எடுப்பவன். அவரையும் 3ஆவது ஓட்டத்துக்கு நான் தள்ளிக் கொண்டிருந்தேன். அதனால் சதைப்பிடிப்பின் போது என் கூட ஓடுவதும் கடினமாக இருந்திருக்கும்.
அடுத்த முறை நாங்கள் இருவரும் இணைந்து துடுப்பாட நேரிட்டால் டோனி நிச்சயம் எதிர்முனையில் என்னை விட அதிரடித் துடுப்பாட்ட வீரரைத் தான் விரும்புவார் என்று நினைக்கிறேன் என்று தினேஸ் கார்த்திக் நகைச்சுவையாகக் கூறினார்.

# இந்தியாவுக்கெதிரான நியூசி. அணி அறிவிப்பு


இந்திய அணி எதிர்வரும் புதன்கிழமை நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 ஒருநாள் போட்டி, மூன்று ரி-20 போட்டிகளில் விளையாடவுள்ளது. இதில் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் முதல் 3 ஆட்டங்களுக்கான நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கைக்கு எதிரான தொடரில் ஓய்வு அளிக்கப் பட்டிருந்த லதாம், கிராண்ட்ஹோம் ஆகியோர் அணியில் இணைக்கப்பட்டுள்ளனர்.
இதுகுறித்து நியூசிலாந்து அணியின் பயிற்சியாளர் கேரி ஸ்டெட் தெரிவிக்கையில்; " உலகக் கிண்ணம், மற்றும் இந்தியாவை வெல்ல வேண்டும் என்ற இரு அடிப்படையான விடயத்தை முன்வைத்தே வலிமையான அணியைத் தேர்வு செய்துள்ளோம். உலகின் தரவரிசையில் இரண்டாம் இடத்தில் உள்ள இந்திய அணிக்கு நிச்சயம் நெருக்கடி கொடுக்கும் அளவுக்கு ஆட்டம் இருக்கும். லதாம், கிராண்ட்ஹோம் ஆகிய இருவரும் மிகவும் அனுபவம் வாய்ந்த வீரர்கள், இவர்கள் தங்களுக்குரிய பொறுப்புகளை உணர்ந்து விளையாடுவார்கள் " எனத் தெரிவித்தார்.
நியூசிலாந்து அணி விவரம்:
கேன் வில்லியம்ஸன்(அணித் தலைவர்), டிரன்ட் போல்ட், டாக் பிரேஸ்வெல், கோலின் டி கிராண்ட்ஹோம், லாக்கி பெர்குஷன், மார்டின் குப்தில், மாட் ஹென்றி, டாம் லதாம், கோலின் முன்ரோ, ஹென்ரி நிகோலஸ், மிட்ஷெல் சான்ட்னர், இஷ் சோதி, டிம் சவுதி, ரோஸ் டெய்லர் ஆகியோர் அணியில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

# இந்தியாவுக்கு எதிரான இறுதி ஒருநாள் தொடர் ஆஸி. அணி அறிவிப்பு

ஆஸ்திரேலியா - இந்தியா அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் ஒருநாள் போட்டியில் இன்று ஆரம்பமாகும் இறுதிப் போட்டி ஆஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.
இன்று மெல்போர்ணில் இடம்பெறும் போட்டியில் ஆஸ்திரேலிய அணியில் சுழற்பந்து வீச்சாளர் ஆடம் சாம்பா, வேகப்பந்து வீச்சாளர் பில்லி ஸ்டான்லேக் ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர்.
கடந்த இரு போட்டிகளில் இடம் பெற்றிருந்த வேகப்பந்து வீச்சாளர் பெஹ்ரன்டார்ப், சுழற்பந்துவீச்சாளர் நாதன் லயன் நீக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குப் பதிலாக இவர்கள் இருவரும் இணைக்கப்பட்டுள்ளனர்.
ரி -20 போட்டி சமநிலையில் முடிவடைந்தது. டெஸ்ட் போட்டியை இந்திய அணி கைப்பற்றியது. மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் போட்டியில் இரு அணிகளும் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளன.
இதனால் இன்று இடம்பெறும் போட்டியில் தொடரை வெல்லும் முனைப்புடன் அணியில் மாற்றங்களுடன் ஆஸ்திரேலிய அணி களமிறங்குகின்றது.
இதுகுறித்து ஆஸ்திரேலிய அணித் தலைவர் பிஞ்ச் கூறுகையில், " நாதன் லயன் நன்றாகப் பந்துவீசுகிறார். ஆனால், இலக்குகளை வீழ்த்துவதில்லை. ஆதலால், அவருக்குப் பதிலாக ஆடம் சாம்பா சேர்க்கப்பட்டுள்ளார். சுழற்சிமுறையில் வாய்ப்பு அளிக்கப்படும்.
இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் நாங்கள் இந்திய அணியை வீழ்த்தி தொடரை வெல்வோம். அந்த நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. கடந்த இரு போட்டிகளிலும் நாங்கள் அதிகமான முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதால், தொடரை வெல்வோம் " - என்றார்.

ஆஸி. அணி விவரம்:
ஆரோன் பிஞ்ச்(அணித் தலைவர்), உஸ்மான் கவாஜா, அலெக்ஸ் கேரி, ஷான் மார்ஷ், பீட்டர் ஹேண்ட்ஸ்கம்ப், மார்கஸ் ஸ்டாய்னிஸ், கிளென் மேக்ஸ்வெல், ரிச்சர்ட்ஸன், பீட்டர் சிடில், ஆடம் சாம்பா, பில்லி ஸ்டான்லேக்.





## இந்தியா - ஆஸி. இறுதிப் போட்டி இன்று

இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இந்த நிலையில் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் போட்டியில் இரண்டு போட்டிகள் முடிவடைந்த நிலையில் இரண்டு அணிகளும் தலா ஒரு வெற்றியைப் பெற்று 1:1 என்று சமநிலையில் உள்ளது. இறுதிப் போட்டி இன்று மெல்போர்ணில் ஆரம்பமாகின்றது.
கட்ந்த போட்டியைப் போல இந்தப் போட்டியும் விறுவிறுப்பாக காணப்படும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்திய அணி டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியது போல இந்தப் போட்டியிலும் வெற்றி பெற வேண்டும் என்ற உத்வேகத்துடன் களமிங்கும். ஆஸ்திரேலிய அணி டெஸ்ட் தொடரை இழந்த நிலையில் ஒருநாள் போட்டியைக் கைப்பற்ற வேண்டும் என்ற முனைப்புடன் களமிங்கும்.
இரு அணிகளும் பந்து வீச்சிலும், துடுப்பாட்டத்திலும் சம பலத்துடன் காணப்படுகின்றன. எனவே போட்டி விறுவிறுப்பாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.
இன்றைய போட்டி இரு அணிகளுக்கும் 131ஆவது போட்டியாகும். இதுவரை நடந்த 130 போட்டியில் இந்திய அணி 46 போட்டியிலும், ஆஸ்திரேலிய அணி 74 போட்டியிலும் வெற்றி பெற்றுள்ளன. 10 போட்டிகளின் ஆட்டம் முடிவு இல்லை.

# 2019 உலகக் கிண்ணம் பும்ரா சவாலை ஏற்படுத்துவார்

## கூறுகிறார் ஜேசன் கில்லஸ்பி



2019ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி இங்கிலாந்தாக இருக்கலாம், ஆனால் இந்திய அணி நிறைய தூரம் பின்னால் இல்லை. இந்திய அணியின் பந்து வீச்சால் இங்கிலாந்துடன் இந்திய அணியும் உலகக் கிண்ணத்தை வெல்லும் அணியாக உள்ளது என்று முன்னாள் ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஜேசன் கில்லஸ்பி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இந்தியப் பந்து வீச்சு சமச்சீராக உள்ளது. பும்ராவுக்கு ஓய்வு அளிக்கப்பட்டிருந்தாலும் இந்தியப் பந்து வீச்சு நன்றாகவே உள்ளது. ஒவ்வொரு பந்து வீச்சாளர்களும் வித்தியாசமான முறையில் பந்து வீசுகிறார்கள். இவர்களுடன் பும்ராவும் சேர்ந்தால் உலகக் கிண்ணத்தில் சவாலை ஏற்படுத்தி விடுவார்கள். பும்ரா பந்து வீசுவதைப் பார்க்க எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.

நல்ல வேகத்தில் வீசுகிறார், வேகத்தை குறை த்தும் வீசுகிறார். சிறந்த பந்து வீச்சாளர் அவர் - என்றார்.

# செரபோவா அபாரம்



சிமோனா ஹேலப்



மரியா செரபோவா

ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் போட்டி மெல்போர்னில் கடந்த 14ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நேற்று இடம்பெற்ற பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு ஆட்டங்களின் ஒரு போட்டியில் ரஷ்ய நாட்டின் முன்னிலை வீராங்கனையான மரியா செரபோவா சுவீடன் நாட்டு வீராங்கனை யான றிபீக்கா பிற்றர்சனுடன் மோதினார். இதில் செரபோவா 6:2, 6:1 என்ற நேர் செற் கணக்கில் றிபீக்காவை வீழ்த்தி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் சிமோனா ஹேலப் அமெரிக்கா வீராங்கனை சோபியாவை 6:3,6:4 என்ற செற் கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றார். சிமோன ஹேலப் எதிர்வரும் சனிக்கிழமை அமெரிக்க வீராங்கனை வேனுஸ் வில்லி யம்ஸ்ஸை எதிர்கொள் கின்றார்.

## ஹர்திக், கே.எல். ராகுலுக்கு கங்குலி பலத்த ஆதரவு

பெண்கள் குறித்த சர்ச்சையில் சிக்கியுள்ள ஹர்திக் பாண்டியாவுக்கும், கே.எல். ராகுலுக்கும் முன்னாள் இந்திய வீரர் கங்குலி ஆதரவு தெரிவித்துள்ளார். இவர்கள் இருவருக்கும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இடைக்காலத் தடை விதித்திருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இவர்கள் இருவருக்கும் கங்குலி ஆதரவு தெரிவித்திருக்கின்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

"ஹர்திக் பாண்டியாவும், கே.எல்.ராகுலும் மனிதர்கள்தானே. மனிதர்கள் என்றால் தவறு செய்வது இயல்பு. இந்தப் பிரச்சினையை நீண்ட நாள்களுக்கு நாம் வளர்த்துக்கொண்டிருக்கக் கூடாது. யார் தவறு செய்திருந்தாலும் நிச்சயம் வருந்துவார்கள். அவர்கள் மனம் திருந்தி சிறப்பான மனிதர்களாக வருவார்கள் என்று நான் நம்புகின்றேன். ஒன்றை மட்டும் புரிந்து கொள்ளுங்கள் நாம் அனைவரும் உணர்வுள்ள மனிதர்கள். உணர்வற்ற, அனைத்து விடயங்க ளும் ஆகச்சரியான முடிவுகள் கிடைப்பதற்கு எந்திரங்கள் அல்ல. நீங்களும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ விட்டுச் செல்லுங்கள்" - என்றார்.


**வேலைக்கு ஆள்கள் தேவை**

திருநெல்வேலியில் இயங்கும் உணவகம் ஒன்றுக்கு **சமையல் வேலை, ரொட்டி போடுவதற்கும்** மற்றும் **உதவியாளர்.** உடன் தேவை.

தொடர்பு - 077 65 30 253

(CS 22644/15/18)

**ஒத்துமாறல்**

கிளிநொச்சி மாவட்ட பூநகரி பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக (III) கடமையாற்றும் ஒருவர் யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகம் ஒன்றுக்கு ஒத்துமாறு விரும்புகின்றார்.

077 729 9152

**A/L - 19, DAY BATCH**

**AGRICULTURAL SCIENCE (08)**

Wed / Fri } 3.30 PM

**DMI JAFFNA**

**A/L ACCOUNTING** | பிரத்தியேக மற்றும் குழு வகுப்புகள் | Mr.BALAKAJEN M.com

**A/L 2021, A/L 2020, A/L 2019**

கந்தர்மடம்: Tue / Fri } 5 - 7 p.m

கொழும்புத்துறை: Sat / Sun } 2 - 8 p.m

யாழ். நகரின் கடந்தகால முன்னணி பெறுபேறுகள்...

Rank 1 → செல்வி சாம்பவி ஜெயதிலக

Rank 6 → செல்வி மகிழரசி புவியழகன், செல்வன் அறிவன்பன் (கிளி)

A → 30, B → 25

075 077 5660, 077 216 8884

**கணக்கீடு - D.Sam**

**DMI JAFFNA**

| A/L | கிழமை | நேரம் | தேர்ச்சி |
|---|---|---|---|
| 2k20 | SAT/SUN | 08-09<br>09-10 | [illegible]<br>MCQ |
| 2k21 | SAT/SUN | 10-11 | இரட்டைப்பதிவு |
| 2k19 | SAT/SUN | 11-01<br>01-02 | கணக்கீட்டு விதிதொங்கள்<br>MCQ |
| 2k18 Day | MON, FRI<br>TUE, THURS | 3.30-05<br>3.30-05 | பங்குடமை<br>முதற்பதிவேடுகள் |

**DMI JAFFNA** சுன்னாகக்கிளை

| A/L | கிழமை | நேரம் | தேர்ச்சி |
|---|---|---|---|
| 2k18 Day | SAT/SUN | 02-03 | பங்குடமை |
| 2k19 | SAT/SUN | 03-04 | MCQ |
| 2k21 | SAT/SUN | 04-05 | இரட்டைப்பதிவு |
| 2k20 | SAT/SUN | 05-06 | கட்டுப்பாட்டுக் க/கு |

"சிறந்த தேர்வே உங்கள் சிறந்த எதிர்காலம்"

26ஆம் திகதி நடைபெறவுள்ள வடமாகாண அலுவலக பணியாளர் பரீட்சைக்கான இறுதி தொகுப்பு

**கருத்தரங்கு**

நாளை சனி மற்றும் ஞாயிறு 9.30 - 3.00PM

**கோலாசிற்றி**
**234, நாவலர்வீதி, யாழ்ப்பாணம்.**
**077 843 5224**

**போட்டிப் பரீட்சை வகுப்புகள்**

**வடமாகாண அலுவலக பணியாளர்**

சனி, ஞாயிறு 9.30 → 3.30

**பல்கலைக்கழக BA தெரிவு**

வெள்ளி 1.00 → 4.00

சனி 9.00 → 12.00

**அதிபர் சேவை**

ஞாயிறு 9.00 → 3.00

**SLAS SLEAS ஆசிரியர் தெரிவு**

ஞாயிறு 9.00 → 3.00

**076 688 3394**

**யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு**
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

**ஜயோதா** உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் 1536 | சீட்டிழுப்பு திகதி 17.01.2019

வெற்றி இலக்கங்கள் 05 13 35 43 E

அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் ரூ 24, 826, 640/=

தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**அத கோடிபதி**

சீட்டிழுப்பு வாரம்: 498
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.01.17

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 54,192,435/-

வெற்றி இலக்கங்கள் 25 26 65 70 Z

தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**லக்கின அதிர்ஷ்டம்**

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 17.01.2019 | 2437 | கபிலம் |

கும்பம்

வெற்றி இலக்கங்கள் 25 34 42 51

வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி ரூ. 7, 765, 876 /=

ரூ. 5000 பணப்பரிசுகள்

வென்ற விசேட இலக்கம்

50684

18.01.2019 திகதி வெள்ளிக் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே. 011 4824824 Web www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

FLC FRENCH LANGUAGE CENTRE

**பிரெஞ்ச்**

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 26.01.19 சனி 10 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 28.01.19 3.30pm

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS, SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.